நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

SARINIHAR


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 220 பெப். 4 - 10, 2001 விலை - 12/-






# பெப்ரவரி 11 இல் முஸ்லிம் காங்கிரஸ் உடையும்?






## மிதக்கும் டொலரும் மூழ்கும் மக்களும்!

## சுய நிர்ணய உரிமை

## ஆங்கில மொழிக் கல்வி அவசியம்தானா?



## ஜனாதிபதியின் செருக்கு!

பனிக்கதையர்!

நாய்க்கு விசரும் நடுக்காட்டில் வாழ்கின்ற
பேய்க்கு வெறிவாறலும் பெரிதாமோ? - காய்க்குக்
கனியென்று பேரிட்டால் கனிந்திடுமோ பிரதமர்க்குப்
பனியென்ன புதிதோ பகர்!

- ஈழமோகம்

# பெண்ணைக் காட்டி ஆள் பிடிப்பு



நன்றி - நூலகத்திட்டம்



# கடந்த வாரக் கைதுகள்

## களுதாவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் நாலாம் மாடியில்

மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் ஜன.12ம்திகதி கொழும்பில் வைத்து புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப்பிரிவுத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

களுதாவளை கடற்கரை வீதியைச் சேர்ந்த பரமசிவம் மேகேஸ்வரநாதன் (28) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைத்து வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர், தொடர்ந்தும் 4ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

## மண்டூர் குடும்பஸ்தர் களுவாஞ்சிக்குடியில் கைது!

மண்டூரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் களுவாஞ்சிக்குடி நகரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மண்டூர் பலாச்சோலை வாசியான மயில்வாகனம் சந்திரசேகரம் (25) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். வெளிநாடு பயணமாக வங்கியிலிருந்து பணம் பெற வந்த வேளையிலேயே ஜன. 18ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டார். தற்போது இவர் அம்பாறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கோண்டாவில், கோப்பாயில் இரு இளைஞர்கள் கைது!

கோண்டாவில் கோப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழவின் யாழ்.அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கோண்டாவில் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த இராஜமனோகரன் கிருபாகரன்(21) ஜன.20ம்திகதி அவ்ரது வீட்டில் வைத்து 511வது படையணியால் கைது செய்யப்பட்டார்.

கோப்பாயிலிருந்து தற்போது இடம் பெயர்ந்து தற்போது யாழ்.வைத்தியசாலை வீதி கொட்டடியில் வசித்து வரும் ஆறுமுகம் சந்திரகுமார்(25) ஜன.22ம் திகதி வண்ணை சிவன் கோவிலடியில் வைத்து 513வது படையணியால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விருவரது உறவினர்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பணியகத்தில் முறையிட்டுள்ளனர்.

## காரைதீவு சோதனைச் சாவடியில் மூவர் கைது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் ஜன.24ம் திகதி காரைதீவு விசேட அதிரடிப்படை சோதனைச்சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டு காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பிளாந்துறை நாகமுனையைச் சேர்ந்த முத்துப்போடி ரவீந்திரன், பூபாலன் ஜெகநாதன், முதலைக்குடாவைச் சேர்ந்த விஸ்வநாதன் கமலேஸ்வரன் ஆகியோரே கைது செய்யப்பட்டிருந்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பணியகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருமணத்திற்குச் சென்ற இருவர் பதுளையில் கைது!

பதுள்ளப் பகுதியில் ஜன. 27ம் திகதி மாலை பதுளைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பைச் சேர்ந்த சகோதரர்கள்ான ஒரு இளைஞனையும், யுவதியையும் கைது செய்துள்ளனர். மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு - 2 பகுதியைச் சேர்ந்த பி.ஸ்ரீசாந்தி (25), ஸ்ரீஸ்கந்தராஜா (21) ஆகியோரே கைது செய்யப்பட்ட சகோதரர்களாவர்.

பதுளை குற்றத்தடுப்புப் பிரிவுச்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளனர். இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது திருமண வைபவமொன்றுக்கு வந்ததாகத் தெரிவித்ததாகத் தெரிய வருகிறது.

## சிறுப்பிட்டியில் நால்வர் கைது

சிறுப்பிட்டியைச் சேர்ந்த கிட்ணர் ஸ்ரீஸ்கந்தராஜா(26), கிட்ணர் சிவதாசன்(23), இரத்தினம் தர்மதாசன்(26),

எஸ்.புவனேஸ்வரி ஆகிய நால்வரை படையினர் ஜன.28ம் திகதி கைது செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பணியகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளைபயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட சின்னத்துரை ஜெகநாதன் என்ற இளைஞரை சட்டமா அதிபரின் உத்தரவை அடுத்து யாழ். நீதிவான் விடுதலை செய்தார். இவ்விளைஞன் கடந்த வருடம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தான்.

# கல்முனை – பிரதேச செயலகமாக்கக் கோரி போராட்டம்!

கல்முனைத் தமிழ் உப பிரதேச செயலகம் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட வேண்டும் எனக் கோரி ஏழு நாட்களாக சாத்வீகப் போராட்டம் தொடர்ந்துள்ளது.

இச்சாத்வீகப் போராட்டத்தை கல்முனை தமிழ்ப்பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உப பிரதேச செயலகம் 1989ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள 28 உப பிரதேச செயலகங்கள் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட 28.7.1993 அமைச்சு சுற்றறிக்கையின்படி அனுமதி வழங்கப்பட்டு, கல்முனை உப பிரதேச செயலகம் தவிர்ந்த ஏனைய 27 உப பிரதேச செயலகங்களும் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

14.92 சதுர கிலோ மீற்றர் சுற்றுப் பரப்பைக் கொண்ட கல்முனை உப பிரதேச செயலகம் 7172 மொத்தத் தமிழ்க் குடும்பங்களைக் கொண்டுள்ளது.



இவ் வளவு காலமும் இச் செயலகம் மாகாண சபையின் கீழே செயற்பட்டு வந்தது. 2001 இல் மத்திய அரசு இச்செயலகத்தின் சகல நடவடிக்கைகளையும் உள்ளெடுத்துள்ளது. இச் செயலகத்துக்கான நிதி நடவடிக்கைகள் உட்பட சகல நடவடிக்கைகளும் மாகாணசபையுடனே இருந்து வந்தது. மத்திய அரசு இன்னமும் இச்செயலகத்துக்கான சகல நடவடிக்கைகளையும் மாற்றித் தராததால் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்துக்கே சகலதுக்கும் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர் பிரதேசவாசிகள். . இவ்விடயம் குறித்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கவனத்தில் கொள்ளாததை அடுத்தே தாம் போராட்டத்தில் இறங்க வேண்டி வந்ததாகச் சொல்கிறார் அதன் ஒருங்கமைப்பாளர்களில் ஒருவர்.

எனினும் மீளவும் பா.உக்களின் வேண்டுகோளையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. சரி, உப பிரதேச சபை பிரதேச சபையாக தரமுயர்த்தப்படுமா?

# தடுப்புக்காவலில் சித்திரவதை முறைப்பாட்டை விசாரிக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பே[illegible] பாதுகாப்புப் பிரிவினரால் சி[illegible]ரவதைக்குள்ளாக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டதாகச் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவுக் குழுவொன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணம் சென்று வாக்கு மூலங்களைப் பதிவு செய்யவுள்ளது.

குருநகரைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரோ குலசிங்கம், அரியாலையைச் சேர்ந்த வல்லிபுரம் சுகந்தி, சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த புஸ்பமலர் ஆகியோரிடம் குற்றப்புலனாய்வுக் குழுவினர் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவுள்ளதாகக் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர், யாழ் பொலிஸ் நிலைய அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் தாம் சாட்சியம் வழங்கப் பொருத்தமான திகதியைத் தெரிவிக்குமாறும் அதற்கு வசதியாகக் கொழும்பிலிருந்து அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# பத்திரிகையாளர் திருச்செல்வம் தடுத்து வைக்கக் காரணமென்ன?

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகையாளர் எஸ். திருச் செல்வத்தின் கைது குறித்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் குறித்தும் எதிர்வரும் 6ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பாயிஸ் முஸ்தபா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் விக்கிரமசிங்கவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

பத்திரிகையாளரின் கைது குறித்து மனிதஉரிமைகள் ஆணைக் குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே 29ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் ஆணைக்குழு அலுவலகத்தில் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட அத்தியட்சரை அழைத்து விசாரணைக்கு உட்படுத்திய போதே இந்த உத்தரவை பாயிஸ் முஸ்தபா விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் அதுவும் இராணுவத்தினரின் அனுமதியினைப் பெற்று கொழும்பிற்கு வந்த ஒருவரை எவரோ வழங்கிய தகவலின் அடிப்படையில் கைது செய்திருப்பது சட்டத்திற்கும் மனிதஉரிமைக்கும் முரணான ஒரு செயலாகும்.

எவ்வித காரணமுமின்றி தகவலின் அடிப்படையில் கைது செய்வது என்பது எல்லோரையும் புலி சந்தேக நபர் என்று முத்திரை குத்துவதாக அமைகிறது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளரைத் தாக்கியது தொடர்பாக மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வைத்தியச் சான்றிதழை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன் இக் கைது தொடர்பான பூரண அறிக்கையை எதிர் வரும் பெப்.6ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்குச் சமர்ப்பிக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரை பாயிஸ் முஸ்தபா கேட்டுக் கொண்டார்.

இந்த விசாரணையின் போது மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளான எஸ்.சிறிதரன், திருமதி பி.மனோரி, வாஸ்குணவர்த்தன மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான அ.விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# களுத்துறையில் இடமில்லையாம் 77 தமிழ்க் கைதிகள் பூசாவுக்கு இடமாற்றம்

களுத்துறைச் சிறைச்சாலையில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியற் கைதிகளில் 77 பேர் 26ஆம் திகதி பூசா முகாமுக்கு திடீரென இடம் மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 523 பேரில் 77 கைதிகளே இடம் மாற்றப்பட்டுள்ளனர். இச்சிறைச்சாலையில் மிக நீண்ட நாட்களாக நிலவி வந்த இடப் பற்றாக்குறை மற்றும் பதற்ற நிலைகளைத் தொடர்ந்தே இவர்கள் இடம் மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், பல அரசியல் கைதிகள் வேறு சில சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நண்டு பிடிக்கச் சென்றவர் பிணமாக மீட்பு

ஈச்சந்தீவில் இருந்து நண்டு பிடிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் மூன்று நாட்களின் பின்னர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

ஜன.25ம்திகதி சச்சிதானந்தம் தமிழ்ச்செல்வம் (28)என்ற இளைஞர் தோணியொன்றில் நண்டு பிடிக்கச் சென்றிருந்தார். அன்றிரவு எட்டரை மணியளவில் இவர் சென்ற திசையில் வெடிச்சத்தங்கள் கேட்டன. தொழிலக்குச் சென்ற தமிழ்ச்செல்வன் திரும்பி வரவில்லை. பின்னர் இவரைத் தேடிச் சென்ற வேளை நண்டு பிடித்தபடி வள்ளத்தினுள் இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நன்றி - நூலகத்திட்டம்



# சுயநிர்ணய உரிமை கோரிப் பொங்கு தமிழ்

-சிசைரோ

இலங்கையை வாட்டி வதைக்கும் வன்முறைக்குத் தீர்வு காண வேண்டுமானால் தமிழ்ப் பேசும் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று 1985 இல் திம்புப் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டது. இந்த உரிமையை எங்ஙனம் அடைதல் என்பதில் தமிழ் அமைப்புக்களிடையே கருத்து வேறு பாடு இருந்த போதிலும் இந்த உரிமைக்கு யார் உரித்துடையவர்கள் என்பதில் அவ்வேளையில் இந்த அமைப்புக்களிடையே எந்தவித கருத்து மோதலும் இருந்திருக்கவில்லை. பின்னாட்களில் இயக்கங்களின் மோதல்கள் காரணமாகச் சில அமைப்புக்கள் இந்த உரிமைக் கோரிக்கைக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை வேறு சில விடயங்களுக்குக் கொடுக்கத் தலைப்பட்ட துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டு விட்டது. ஆக, விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ்ப் பேசும் மக்களது சுயநிர்ணய உரிமை பற்றியும் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் அரசியல் நிறுவனத்தின் தேவை பற்றியும் விடாப்பிடியாக வலியுறுத்தி வந்துள்ளனர்.

அண்மைக் காலமாக மீண்டும் சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சு சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியும் அதற்கு ஆதரவாகப் பரவலாக எழுந்த அமோக ஆதரவும் புதியதொரு அரசியல் பரிமாணமாக வடிவெடுத்துள்ளது. இது ஒரு சில அமைப்புக்களுக்கு சுயமாகவே 'துடக்குக் கழிப்புச்' செய்யவும் உதவியிருக்கின்றது. இந்த நிகழ்வை ஒடுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அப்பட்டமான தோல்வியைத் தழுவியுள்ளதால் அரசாங்கம் கூட இப்போது விடுதலைப் புலிகள் மீதுள்ள கோபத்தை ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீதும் திருப்பியுள்ளமையை அரசின் அண்மைக்கால அறிக்கைகள் எடுத்தியம்புகின்றன. எல்லோரும் சயநிர்ணய உரிமை பற்றித் தான் பேசுகின்றார்கள். தமிழ் பேசும் மக்களது போராட்டம் நியாயமானது என்று கருதுபவர்கள் கூடச் சில வேளைகளில் சுயநிர்ணய உரிமை பற்றி வித்தியாசமான விளக்கங்களைக் கொடுக்க முயல்கின்றனர். இது மேலும் இனப் பிரச்சினையைச் சிக்கலுள்ள தாக்குகின்றது. எனவே தான் சுயநிர்ணய உரிமை பற்றிய சில அடிப்படை விடயங்களை ஆராயலாம் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

சுயநிர்ணயம் என்பது ஒருவர் தனது தலைவிதியைத் தானே சுயமாகத் தீர்மானித்தல் என்று பொருள்படும். இதில் இரண்டு விடயங்களை நோக்குவோம். இந்தத் தலைவிதி என்பது என்ன? எதைப் பற்றியது? அடுத்ததாக யாருடைய தலைவிதி? அதாவது இங்கு ஒருவர் எனக் குறிப்பிடுவது யாரை? தலைவிதி என்பது எல்லாவற்றிலும் உயர்ந்ததாக உள்ளதும் எல்லா விடயங்களையும் தீர்மானிக்க வல்லதுமான அரசியல் தலைவிதி என்று பொருள்படும். இது அவ்வளவு சிக்கலற்ற விடயமாகும். யாருடைய தலைவிதி என்ற வினா சற்றுச் சிக்கலானதாகும். இது ஒருவருடைய தலைவிதியாகவோ அல்லது ஓர் அமைப்பினுடையதாகவோ அன்றி குழு, சமூகம், இனம், பிரதேசவாரியான கூட்டத்தினுடையதாகவோ இருக்கலாம். எனவே யாருடைய தலைவிதி என்ற வினாவுக்கு விடை காணும் போது முதலில் வேறொரு விடயத்தையும் தீமானிக்க வேண்டியதாக இருக்கும். ஆக, இங்கே அரசியலும் உள்ளது. சட்டமும் உள்ளது. சட்டம் பற்றிய வினாவை விட அரசியல் பற்றிய வினாவே சிக்கலானதாகும்.


தங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்க முனைந்து நிற்கும் குழு எது? அதனை அடையாளம் காண்பது இந்தக் கட்டத்தில் அவசியமாகின்றது. அரசறிவியலாளர்களும் சட்ட அறிஞர்களும் இது விடயத்தில் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். அத்துடன் சமூகவியலாளர்களின் உதவியும் இங்கு பெறப்பட வேண்டியுள்ளது.

### நமக்காக நாம் மட்டுந்தான் நிர்ணயிக்கலாமா?

நம்மை ஏன் நாமே ஆள வேண்டும் என்பதற்கு முதலில் விடை காண வேண்டும். நம்மை மற்றவர்கள் ஆள்வதை விட நாம் ஆள்வதால் கூடுதல் நன்மை கிடைக்கும் என்பது தொடக்கத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். இதற்கு கூறப்படும் உதாரணம் ஒருவர் கூட்டு வங்கிக் கணக்கு வைத்திருப்பதற்கும் தனிப்பட்ட சொந்தக் கணக்கு வைத்திருப்பதற்கும் இடையிலான வித்தியாசமே என்று பதில் கூறப்படும். கூட்டுக் கணக்கிலிருந்து நான் கேட்கும் போதெல்லாம் பணம் கிடைக்குமாக இருந்தால் எனக்குத் தனிப்பட்ட கணக்கை ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்படாதல்லவா? அப்படியில்லை எனில் நான் தனிப்பட்ட கணக்கை ஆரம்பிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியிருக்கவும் முடியாதல்லவா! ஆக, வேறொருவரின் ஆட்சிக்குக் கீழ் இருக்கையில் ஒருவரின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாத போது தான் அவர் தனித்துச் செயற்படுவது பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றார்.

எனவே ஆட்சியதிகாரத்தில் தங்களை ஒரு தனிப்பட்ட குழுவாகக் கருதும் ஒரு பிரிவினரின் அபிலாஷைகள் அந்த ஆட்சியினால் பூர்த்திசெய்யப்படாத போது அந்தக் குழுவினர் பிரிந்து தனியாகச் செயற்படுவது பற்றித் தீர்மானிக்கின்றனர். எனவே தம்மைத் தாமே ஆள வேண்டும் என்ற கோரிக்கையில் புதிதாக எதுவுமில்லை. தம்முடைய அபிலாஷைகளைச் செயலுருப்படுத்துவதற்கான சாத்தியமான வழியெது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை மட்டுமே வலியுறுத்தப்படுகின்றது.

பொதுவாகவே சுயநிர்ணய உரிமை என்றதுமே ஐந்து விடயங்கள் ஞாபகத்துக்கு வரும். பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட எழுத்தாளர்களில் ஒருவரான de Lafayette கூறுகையில் ஒரு தேசமானது சுதந்திரம் பெறுவவதற்கு அது அங்ஙனம் இருப்பதற்கான விருப்பைக் கொண்டிருப்பதே போதுமானதாகும் என்பதை வலியுறுத்தினார். இந்தப் புரட்சியின் செல்வாக்கினால் பெறப்பட்ட வரைவிலக்கணம் தேசிய சுயநிர்ணயம் (national self-determination) என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. அதாவது முழு நாடுமே பிரதிநிதித்துவ அரசைப் பெறுதல் சம்பந்தமானது. அடுத்ததாக, கார்ள் மார்க்ஸும் லெனினும் வலியுறுத்திய வர்க்கச் சுயநிர்ணயம் (class self-determination) பற்றியது. அதாவது 'நாம்' என்பது உழைக்கும் வர்க்கம் என்பது அவர்களது வாதமாகும். மூன்றாவதாக முதலாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவில் முன்வைக்கப்பட்டதான சிறுபான்மை மக்களின் சுயநிர்ணயம் (minorities self-determination) என்பதாகும். இதனை முன்வைத்தவர் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சனாவார். இன்னொரு உலகப் போரைத் தடுப்பதானால் சிறுபான்மையினரின் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அதாவது சிறுபான்மையினரும் சரிசமமாக ஆட்சியில் பங்கெடுக்கும் நிலையை உருவாக்குதல் என்று அவர் வாதிட்டார். நான்காவதாக வரும் இனரீதியான சுயநிர்ணயம் (racial self-determination) என்பது குடியேற்ற ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறும் போராட்டங்களை ஆதரிக்கும் போக்கில் முன்வைக்கப்பட்டது என்பதுடன் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் அடையாளம் காணப்பட்டது. இது மிகப் பிரதானமானதாகும். ஏனெனில் ஐரோப்பிய நாடுகள் ஏனைய நாடுகளை அடிமை கொள்ளுதல் ஒரு வகையில் சட்டபூர்வமானதும் நியாயமானதும் என நம்பப்பட்ட காலமொன்றுமிருந்தது. கடைசியாக வருவது தான் தற்போதுள்ள பெரும் பிரச்சனையான இனத்துவ சுயநிர்ணயம் (ethnic self-determination) என்பதாகும்.




இந்த ஐந்து வகைச் சுயநிர்ணய உரிமைகளிலும் ஏதோவொரு விதத்தில் அரசியல் சித்தாந்தம் கலந்திருப்பதை அவதானிக்க முடிகின்றதல்லவா. ஒவ்வொரு காலகட்டத்திலுமிருந்த அரசியல் செல்வாக்கிற்கு ஏற்றபடி அந்தந்த வகைச் சுயநிர்ணயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அப்படிப் பார்ப்பின் தற்போது இனத்துவச் சுயநிர்ணயம் என்பது தவிர்க்க முடியாததாக வந்துவிட்டது. முதலில் சுயநிர்ணய உரிமைபற்றிய சட்ட நிலைப்பாடு என்ன என்பதைப் பார்ப்போம்.


சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுதல் என்பது முழுமையான நாட்டுக்குள்ளாகவே என்றிருக்கும் போது சட்டப் பிரச்சினை எழ நியாயமில்லை. உதாரணமாக, நாடொன்று சுதந்திரம் பெறுதல் அல்லது குடியேற்றவாதிகளை அடித்து விரட்டுதல் என்பதில் சட்டம் அதனை அங்கீகரிப்பதாகவே உள்ளது. இது பிரஞ்சுப் புரட்சியிலிருந்து ஆரம்பமாகி ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெறும் வரை தொடர்ந்தது. இங்கே நாமென்ற வரைவிலக்கணத்துக்குள் நாட்டு மக்கள் முழுவதும் உள்ளடக்கப்படுவதால் இதில் அரசியல் அல்லது சட்டப் பிரச்சினை எழ நியாயமில்லை. ஆனால் இந்த வரைவிலக்கணம் நாட்டுக்குள்ளாக இருக்கின்ற ஒரு பகுதி மக்களை மட்டும் சுட்டிநிற்கும் போதே பிரச்சினை ஆரம்பிக்கின்றது. இந்த ஒரு பகுதி மக்கள் என்பது சிறுபான்மையினரா? இனப்பிரிவினரா? இனத்துவக் குழுவினரா? என்றால் சுயநிர்ணய உரிமைக்கான அம்சங்கள் காணப்பட்டாலும் அவர்கள் வாழும் நாட்டின் அரசியல் அந்தஸ்து என்ன என்பதே முதலில் பார்க்கப்படும். இந்த நாடும் குடியேற்றவாதத்திலிருந்து சுதந்திரம் பெற்றதாகவோ அல்லது அடக்குமுறை எதற்கும் ஆட்பட்டதாகவோ அல்லது அந்நியப்படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவோ இல்லாதபோது சுயநிர்ணய உரிமையைப் பாவித்தல் சாத்தியமில்லை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் விதியாகும்.


எனவே நம்மை நாமே ஆளுதல் என்பதில் உள்ள நாம் என்பது வரைவிலக்கணப் படுத்தப்பட வேண்டிய தாகின்றது. இந்த வரைவிலக்கணத்தில் சட்டத்தைவிட அரசியல் அம்சங்களே விரவி நிற்கின்றன. என்ன காரணத்துக்காக ஒரு பகுதி மக்கள் தம்மை ஒரே பிரிவினராகக் கருதுகின்றார்கள்? அந்தக் காரணம் அறிவார்த்தமானதா (rational) என்பதுக்கு அரசியல் உரைகல்லையே பாவிக்க வேண்டியுள்ளது. இந்த உரைகல் நிலையானதா? அல்லது கால, நேர, இட வர்த்தமானங்களுக்கு ஏற்ப மாற்றிப் பாவிக்கப்பட முடியாததா? மறுவிதமாகக் கூறுவதானால் ஒருவருடைய அல்லது ஒரு பிரிவினது அடையாளம் என்பது நிரந்தரமானதா என்பதற்கு விடை காண வேண்டியிருக்கும்.

### நாம் என்றால் யார்?

இதுவே அடையாளம் பற்றிய முக்கியமானதும் ஒரேயொரு வினாவுமாகும். ஒவ்வொருவரும் தன்னைத் தானே பார்த்துக் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வியாகவும் இது அமைகின்றது. சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும் இந்த விடயத்தை ஆராய்ந்து அடையாளம் என்பது எப்போதும் நிரந்தரமானதாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். Benedict Anderson போன்றோர் இது கற்பனையானது, வலிந்து கற்பிக்கப்படுவது என்றவாறாகக் கூறிச் செல்கின்றனர். வேறு புறக் காரணிகளின் தாக்கத்துக்கு உள்ளாக்கப்படும் போது தன்னடையாளத்தை இது மாற்றிக் கொள்ள முயற்சிக்கும் என்ற அடிப்படையிலேயே இது போலியானது என்று கூறப்படுகின்றது. அத்தகைய புறக் காரணிகள் யாவை? அந்தக் காரணிகளை உருவாக்கும் சக்திகள் யாவை? என்பவற்றை அடையாளங் கண்டால் தான் ஒரு குழுவின் அடையாள மோகத்தை விளங்கிக் கொள்ள முடியும் என்கிறார்கள்.

இந்தக் குழு தன்னை ஓர் இனம் (சேபியர்/குரோசியர்/குர்தியர்) என்கிறதா? மதப்பிரிவு (பொஸ்னிய முஸ்லீம்கள்/பாகிஸ்தான் முஸ்லீம்கள்/ எரிட்ரியர்/ பாஸ்க் மக்கள்) என்கிறதா? மொழிப் பிரிவு (வங்காள முஸ்லீம்கள் / நோர்வேயின் நொஸ்க் மொழி/சுவீடனின் சுவீடிஷ் மொழி) என்கிறதா? பிரதேசக் குழு (சுடான், குர்தியர் மற்றும் இத்தாலிய மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை) என்கிறதா? என்பதற்கான விடையாகவும் எந்த அடிப் படையில் அவை தமது அடையாளத்தைக் கொள்ள விரும்புகின்றன என்பதிலும் ஏன் அந்த அடையாளத்தைக் கொள்ள விரும்பு கின்றன என்பதிலுமே தங்கியுள்ளது. சில அறிஞர்கள் இந்த அடையாளம் போலியானது அல்லாவிட்டாலும் வசதி கருதியது அல்லது சுயலாபத்தோடு கூடியது என்கிறார்கள். எப்படிப் பார்ப்பினும் இந்தக் காரணங்கள் முற்றிலும் அரசியல் வயப்பட்டவை என்பதில் சந்தேகமேதுமில்லை.



(அடுத்த இதழில் சுயநிர்ணய உரிமை பற்றிய மேலும் சில விடயங்கள் தொடரும்)

நன்றி - நூலகத்திட்டம்



## வவுனியா:
## ஓராண்டாகியும் கவனிக்கப்படாத தபாலகம்!

வவுனியா தபாலகத்தில் கடந்த ஆண்டு ஜனவரி 27ஆம் திகத நடைபெற்ற குண்டுவெடிப்பின் போது பலியானவர்களை நினைவு கொள்ளவும், இவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் இந்த ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி வவுனியா தபாலகத்தினர் நிகழ்வொன்றினை மேற்கொண்டனர். இந்த நினைவு கொள்ளும் நிகழ்வுடன் மேலும் பல விடயங்களை நினைவு கொள்ள வேண்டும்.

தபாலகக் குண்டுவெடிப்பின் பின்னர் ஓராண்டு நிறைவடைந்தும், அது இயங்கிவந்த சொந்த இடத்தில் இயங்காது அருகில் ஊழியர் ஓய்வறையினை தற்காலிகமாக சீரமைத்து ஓராண்டைக் கழித்து விட்டனர். இடநெருக்கடிகளை போக்குவதற்காக மேல் மாடியில் இருந்த பிரதம அஞ்சலதிபரின் இருப்பிடம் இடமாற்றப்பட்டு தபாலக சேவையினை நடாத்துகின்றனர். மேல்மாடியும் அலுவலகமாக இயங்கி வருகின்றது.

இந்தக் குண்டுவெடிப்பின் போது நெருக்கமாக படையினரும், பொதுமக்களும் நின்றதனால் பலியானோர் காயமடைந்தோர் தொகை அதிகமாகும். ஆனால், கட்டிடத்திற்குப் பெரும் சேதமில்லை. ஆனால், கட்டிடம் திருத்தியமைப்படவில்லை. அதிகாரிகள் மட்டும் பல தடவை பார்வையிட்டுச் சென்றுள்ளனர். கடந்த ஆண்டு டிசெம்பர் 15ம் திகதி கொழும்பிலிருந்து நுண்ணாய்வுப் பரிசோதகர்கள் வந்து சென்றனர். ஆனால், வேலை எதுவும் தொடங்கப்படவில்லையென்பது கண்கூடு. அதுமட்டுமல்லாது குண்டு வெடிப்பில் தபாலக கடமையாளர்களான மேற்பார்வை உத்தியோகஸ்தர் சின்னத்துரை, பாஸ்கரலிங்கம் (55) இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாராவார். காரியாலய சேவகர் அப்பாப்பிள்ளை சந்திரசேகரம் (39) ஆகிய இருவரும் கடமை நேரத்தில் பலியாகியுள்ளனர். இந்த ஓராண்டு கடந்தும் இவர்களிற்கான இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. தபாலகத்தில் கடமையாற்றியவர்களில் காயமடைந்தவர்கள் 7,8,10 என பல நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக விடுதிகளில் தங்கிருந்துள்ளனர். இவர்களிற்கான விசேட விடுப்பிற்கு கடிதங்கள் வழங்கப்பட்டும் இவர்களிற்கு விசேட விடுப்பு வழங்கப்படவில்லை.

குண்டுவெடிப்பு நடைபெற்று ஓராண்டு ஆகிய பின்னரும் இப்படியான குறைகள் கவனிக்கப்படாமல் உள்ளமைக்கு என்ன காரணம்? தென்பகுதியில் இப்படியொரு சம்பவம் எனில், இவ்வளவு காலமாக கவனிக்கப்படாமல் இருக்குமா? அரசும், அதன் உயர் திணைக்கள அதிகாரிகளும் பாரபட்சம் காட்டுகின்றனரா?

⊖

## வவுனியாவும் மனித உரிமைகளும்

ஜனவரி 20 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் கொழும்பு தலைமை அலுவகத்திலிருந்து ஆணையாளர்கள் வவுனியாவிற்கு வந்து அரச அதிபர், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை சந்தித்ததுடன், இடம் பெயர்ந்தோர் தங்கியிருக்கும் நலன்புரி நிலைய மக்களையும் சந்தித்து வவுனியா நிலைமைகளை தெரிந்து கொண்டனர்.

20ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா காரியாலயத்தில் வைத்து மாலை 6.00 மணியளவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது பத்திரிகையாளர் ஒருவர் வவுனியாவில் உள்ள எரிபொருள் மட்டுப்படுத்தல் தொடர்பாக கூறியதுடன் அதற்கான அட்டை, கூப்பன் ஆகியவற்றையும் காண்பித்து அதனால் உள்ள நெருக்கடிகளையும் கூறிய போது, கொழும்பிலிருந்து வந்த ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் எரிபொருள் மட்டுப்படுத்தல் தொடர்பாக தாம் எதுவுமே அறிந்திருக்கவில்லை என்று தெரிவித்தார்கள்.

இந்த எரிபொருள் மட்டுப்படுத்தல் பத்திரிகையில் அடிக்கடி எழுதப்பட்ட விடயம், இதனை நீக்கக் கோரி இருமுறை பேராட்டம் நடத்தப்பட்டது, பாராளுமன்றத்தில் பல தடவை இது தொடர்பாகப் பேசப்பட்டது. இருந்தும் இவர்கள் இவ்விடயத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை எனக் கூறியது பெரும் ஆச்சரியமான அதிசமான விடயம் தான்.

வவுனியா மனித உரிமை ஆணைக் குழுவின் காரியாலயத்தில் சிறீதரன் இணைப்பாளராக வந்த பின்னர் அதன் செயற்பாடுகள் பற்றி பரவலாகத் தெரிய வந்தது. இவர் இடமாற்றம் பெற்று கொழும்புக்குச் சென்றதும், வவுனியா காரியாலயத்தில் இணைப்பாளர் பதவியைப் பொறுப்பேற்று வ[illegible] ரவீந்திரனுக்கு கைது[illegible] [illegible]ணாமல் போதல் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பான விபரங்களைப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கக் கூடாதென கொழும்பு தலைமைக் காரியாலயம் தடைவிதித்துள்ளது. இது பற்றிப் பத்திரிகையாளர்கள் கேட்ட போது, ரவீந்திரன் புதியவர். ஆகவே கொழும்புக்குத் தெரியப்படுத்திய பின்னர் தான் அது பற்றிய தகவல்களை வழங்கக் கூடியதாக இருக்குமென ஆணையாளர்கள் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் அல்லது காணாமல் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைப்பின் அவற்றை ஏன் மறைக்க வேண்டும். பத்தரிகையாளர்கள் அத்தகவல்களைப் பெற்றுப் பிரசுரிப்பதில் தவறேதுமில்லையே என்று சுட்டிக் காட்டிய போது தாம் கொழும்பு சென்று இது பற்றி ஆலோசித்துச் சொல்வதென கூறிச் சென்றனர்.

⊖

## தேவியின் தாலி அறுந்த கதை!

இந்தியாவின் குஜராத் மாநிலம்.

இந்தியாவின் மகான் என்று மதிக்கப்பட்ட மகாத்மா காந்தியைத் தந்த மாநிலம். அங்கே நிகழ்ந்த பூகம்ப விபத்தும் அதில் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதும் உலகமறிந்த துயரம்.

இயற்கையின் கொடும் சீற்றத்திற்கு இலக்காகி இவ்வளவு பெருந்தொகையில் மக்கள் கொல்லப்பட்ட துயரம் உலகம் முழுவதை யும் உலுக்கிய மிகப் பெரிய அவலம்.

இந்த அவலம் யாரையும் உறைய வைக்கக் கூடியது. கல்லையும் கரைக்கக் கூடிய வல்ல கொடுமை அது. (ஏன் நமது ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கே இது கவலையை ஊட்டியது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.)

இந்தக் கொடுமை பற்றிய செய்திகளும் கதைகளுமே இந்தியா முழுவதற்கும் மட்டுமல்ல இலங்கைக்கும் முக்கியமான செய்தியாக அடிபட்டுக் கொண்டிருக்கையில் இன்னொரு முக்கியமான சம்பவமும் நடந்தது.

தென்னிந்தியாவிலுள்ள ஒரு முக்கியமான கோவிலில் உள்ள தேவியின் கழுத்திலிருந்த மாங்கல்யக் கயிறு அறுந்து விழுந்து விட்டது.

அதைக் கண்ட பூசகர் பதறிப் போனார். வந்தது நாசம். தேவியின் கழுத்திலிருந்து மாங்கல்யம் அறுந்து விழுவதென்பது எவ்வளவு பெரிய துர்ச்சகுணம்? இது நாட்டுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே ஆபத்தல்லவா?

அலறிப் புடைத்துக் கொண்டு அவர் வருவோர் போவோரிடமெல்லாம் சொல்லி அரற்றினார்.

கதை பரவியது. குஜராத் கவலையை விடப் பெரிய கவலை அல்லவா இது?

ஆயினும் இந்து மதம் என்ன லேசுப்பட்ட மதமா? இதற்கும் அதனிடம் பரிகாரம் இருந்தது!

திருமணமான சுமங்கலிப் பெண்கள் அனைவரும் மதியம் திரும்பு முன்பாக குளித்து முழுகி, தாலிக் கயிற்றை மீளவும் அணிந்து கொள்ளின் சகல வினைகளும் தீரும் என்று அந்தப் பிராயச்சித்தம் கூறியது.

இப்படி நடந்தது இந்தியாவில்.

0 0 0

மாலையில் கொழும்பிலுள்ள ஒரு கடையின் கடைக்காரர் ஒருவர் இப்படிச் சொன்னார்.

மஞ்சள் கயிறு கிடந்த இரண்டு பந்தும் விலைப்பட்டுப் போயிற்று. வருடக் கணக்காக விலைப்படா மல் கிடந்த பந்து அது"

"என்ன நடந்தது" என்று கேட்டார் மற்றவர்.

"என்ன? தெரியாதா உங்களுக்கு...?" தேவியின் தாலி அறுந்து விழுந்தது கேள்விப்படவில்லையா?

"எந்தத் தேவி" என்றார் அந்த அப்பாவி மனிதர்.

கடைகாரரின் விஸ்தரமான விளக்கத்தைக் கேட்டபோது எனக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

"உலகத்தை உலுக்கியிருக்கலாம். ஆனால், எங்கடை ஆக்களை உலுப்ப இப்படி ஏதாவது நடந்தால் தான் உண்டு" என்று சொன்னது என் மனம்.

⊖

## விலைத் தவறினி

## முதலைக் கண்ணீர்

"யுத்த முனையில் வெற்றியீட்டி வரும் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த ஐ.தே.க.வும் ஜே.வி.பியும் முயல்கின்றன. விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி மக்களைத் திசைதிருப்ப முயல்கின்றன"

இது ஜனாதிபதி அவர்களின் திருவாய் மொழி.

'யுத்தத்தில் பெருமளவு நிதி செலவிடப்படுகிறது. இதன் காரணமாகவே பொருட்களின் விலையேற்றம் நடந்துள்ளது. இதைத் தெரிந்தும் ஐ.தே.க மக்களிடையே பொய்ப் பிரச்சாரம் செய்கின்றது. அவர்களைத் திசை திருப்புகிறது.

இந்தக் கூற்றுக்களைக் கேட்கும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

"யுத்தம் நடப்பதால் என்னவும் நடக்கலாம்: விலைவாசி ஏறலாம். நாட்டில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவலாம்: மக்கள் பட்டினி, வறுமை, நோய் நொடி என்பவற்றுக்குள்ளாகலாம். அவையெல்லாம், யுத்தக் களத்தில் நடக்கும் வெற்றிகளின் முன்னால் பெரிய விடயங்கள் அல்ல. அவற்றை மக்கள் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும். அவை பற்றி யாரும் பேசக் கூடாது. பேசுவது துரோகத்தனம். ஏனென்றால் நாம் யுத்தம் செய்கிறோம்: அதில் வெற்றி கொண்டிருக்கிறோம்"

இந்த நியாயம் தான் இன்று அரசாங்கம் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறதற்கான ஒரே நியாயம், யுத்தம் இல்லை என்றால் எல்லாவற்றையும் சரிசெய்து நாட்டைப் பொன் கொழிக்கச் செய்து விடுவோம் என்கிற நியாயம்.

அது சரி, அந்த யுத்தத்தை நிறுத்த வேண்டியது தானே! எழுதுமட்டுவாளையும் முகமாலையையும் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ள ஒரு சூழலில் போய்ப் பிடிக்குமாறு மக்கள் கேட்டார்களா?

"இல்லையே? - அப்போ யுத்தத்தைக் கைவிட வேண்டியது தானே?" ஆனால் நாங்கள் யுத்தத்தை விடமாட்டோம். அதேவேளை மக்கள் திசை திருப்பப்படாமலும் இருக்க வேண்டும்.

என்ன தர்க்கம் என்ன தர்க்கம்!

அம்மாவுக்கு தர்க்கத்தில் நிகர் அம்மாவே தான்!

'ஆனால்... அம்மா சொல்வதிலும் கொஞ்சம் நியாயம் இருக்கிறது தான்', என்கிறார் எனது அலுவலக நண்பர்.

'ஏன்.....?'

'இல்லை. இந்த ஜே.வி.பி யுத்தத்தை நடத்துமாறு சொல்லிக் கொண்டே, விலைவாசி உயர்வைப் பற்றிக் கதைக்கிறதே அது ஞாயம் இல்லைத்தானே...'

'உண்மைதான்... யுத்தத்தை நடத்தச் சொல்பவர்களே அதன் விளைவுக்காக கண்ணீர் விடுவதனை எப்படிச் சொல்லலாம்?'

'முதலைக் கண்ணீர்?'

## விரும்புவதே செய்தி!

பசியினால் 'வாடும் ஒருவருக்கு மெல்லிய திரை மறைவின் பின்னால் அடுக்கப்பட்டிருக்கும் செங்கட்டிகளைப் பார்க்கும்போது அவை அடுக்கப்பட்ட பாண் துண்டுகள் போலத் தோன்றினால் வியப்பில்லை.

திரைக்குப் பின்னால் இருப்பது என்ன என்பதை விட, எதுவாக அது இருக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம் என்பதே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முக்கியமான விடயமாகி விடுகிறது. செய்திகளைக் கூட, உண்மை எது என்று அறிவதை விட, நாம் விரும்புவதைக் கேட்கவே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். 'NEWS IS WHAT YOU WANT TO READ' என்பார்கள் - அதாவது 'நீங்கள் வாசிக்க விரும்புவது தான் செய்தி'.

இந்த விடயம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உண்மையாகத் தான் இருக்கிறது. தமிழ் திரைப்படக் கதாநாயகர்கள் செல்வாக்குப் பெற்றதற்கும் கூட இந்த மனோபாவம் தான் காரணம்.

ஆனால், உண்மை கசப்பானதாக, தரிசிக்க நாம் விரும்பாததாக இருந்தாலும் கூட, அதுதான் எமது தலைவிதியைத் தீர்மானிக்கிறது. எமது விருப்பங்கள் அல்ல.

'புலிகள் பலவீனமாக இருக்கிறார்கள்: அவர்களால் யுத்தத்தில் ஈடுகொடுக்க முடியவில்லை: ஆட்பற்றாக்குறை நிலவுகிறது. இதனால்தான் அவர்கள் யுத்த நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். என்கிறார் சந்திரிகா அம்மையார்.

சிஹல உருமய திலக் கருணாரத்னவின் அபிப்பிராயமும் இதுதான்.

இவையெல்லாம் எவ்வளவு தூரம் உண்மை என்று அவர்கள் பார்ப்பதில்லை. அது அவர்களுக்கு முக்கியமும் இல்லை.

இப்படி நம்புவது அவர்களுக்கு வசதியானது: சுகமானது, சந்தோசமளிப்பது. அவர்கள் இப்படி நம்புவதையிட்டு யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது. ஆனால் இந்த நம்பிக்கைகளை அவர்கள் உண்மைகளாக அப்பாவி மக்களிடம் சொல்கிறார்கள். தமது ஊகங்களையும் விருப்பங்களையும் மக்களிடம் சொல்லி அவர்களைத் திசைதிருப்புகிறார்கள்!

ஆனால்... இதன் விளைவுகள் அனுபவிக்கப் போற மக்கள்? என்ன செய்வது? கனவு ஒன்று மட்டுமே சும்மா கிடைக்கிற சந்தோசமாகி விட்டுள்ள நிலையில் வேறெதைத்தான் அவர்கள் செய்வார்கள்?

உண்மை முகத்திலறைந்தாற் போல் வெளிப்படும்வரை, எல்லோருக்கும் 'தாம் விரும்புவதே செய்தி' யாக இருக்கட்டும்!

⊖

நன்றி - நூலகத்திட்டம்



# நவீன சர்வாதிகாரத்தின் பிரதிநிதி சந்திரிகாவிற்கு வந்த செருக்கு!

– நாசமறுப்பான்

'சொன்னதை திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் அது பொய்யாக இருந்தாலும் மெய்யாகிப் போய்விடும்' என்பார்கள்.

கிட்லரின் பிரசார செயலாளராக இருந்த கோயபல்ஸ் இன் கோட்பாடு இது.

உலகத்தின் சர்வாதிகார்கள் அனைவருக்கும் எப்போதும் ஒரு கோயபல்ஸ் இன் உதவி இருந்து வந்திருக்கிறது. சர்வாதிகாரிகள் செய்பவற்றை ஆழமாகவும், அர்த்தம் கற்பித்தும் விளக்குவதில் அவர்கள் ஆற்றியுள்ள பங்குக்கு அளவே இல்லை எனலாம்.

ஆனால், நமது ஜனாதிபதி சந்திரிகா வுக்கு ஒரு கோயபல்ஸ் தேவை இல்லை. அவருக்கு கோயபல்ஸ் ஆக இருக்க ஆசைப்பட்டுக் கதிர்காமர் முதல் வரதராஜப் பெருமாள் வரை பலர் அந்தக் கடமையைச் செய்து வந்துள்ள போதும், அவருக்கு யாரும் தேவையில்லை.

ஏனென்றால் அவர் தானே ஒரு சர்வாதிகாரியாயும், கோயபல்ஸ் ஆகவும் இயங்கக் கூடிய சிறப்பைப் பெற்றவராக உள்ளார்.

யுத்தத்தை நியாயப்படுத்தவும், அதுவும் அதைச் சமாதானத்திற்காகவே நடக்கிறது என்று திரும்பத் திரும்பக் கூறி நம்பவைக்கவும் தனது மனிதாபிமானத்தை வலியுறுத்தவும் அவருக்கு எந்தக் கோயபல்ஸ்சும் தேவையில்லை.

'இன்று வடக்கிலே நடந்து கொண்டிருக்கும் யுத்தம் நியாயமானது, பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர நடாத்தப்படுவது, புலிகள் இயக்கமோ பிரபாகரனோ ஒரு போதும் சமாதானத்திற்கு வரப்போவதில்லை. அவர்கள் இன்று மிகவும் பலவீனப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சண்டையிட ஆட்கள் இல்லை. யுத்தத்தை நடாத்தும் சக்தியை இழந்து விட்டார்கள். தோல்வி அவர்கள் முன்னே நின்று அவர்களை மிரட்டுகிறது. பிரிட்டனும், தங்களைப் பயங்கரவாதிகள் என்று கூறி தடை செய்துவிடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். பிரிட்டன் தடை செய்தால் புலிகளை அனைத்து நாடுகளும் தடைசெய்துவிடும். இதுதான் புலிகளுக்கு உள்ள அச்சம். இவற்றின் காரணமாகவே அவர்கள் இப்போது சமாதானத்திற்குத் தயார் என்று அறிவித்திருக்கிறார்கள். புலிகள் திரும்பத் திரும்ப இப்படிக் கூறி ஐ.தே.க ஆட்சியில் மூன்று தடவையும், எம்மை ஒரு தடவையும் ஏமாற்றியதை நாம் மறக்க வில்லை. எனவே யுத்தத்தை நடாத்துவதிலிருந்து பின்வாங்க முடியாது. புலிகள் விரும்பினால், உண்மையிலேயே அவர்களுக்குச் சமாதானம் மீது அக்கறை இருக்குமானால், அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு நிபந்தனையற்ற பேச்சுக்கு தயாராக வரட்டும். அப்போது நாம் பேசத் தயராக இருக்கிறோம்.'

- இவை கடந்த ஞாயிறன்று ஜனாதிபதி தொலைக்காட்சி உரையாடல் ஒன்றில் தெரிவித்த கருத்துக்கள்.

இந்த அரசாங்கத்தின் கீழ் சமாதானம் வரும், பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்த அரசாங்கம் முன்வரும், தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை வென்றெடுக்கும் சந்தர்ப்பம் கிட்டிவிட்டது என்றெல்லாம் கனவு கண்ட அனைவருடைய முகத்திலும் ஓங்கிக் குத்தியது போல அவரது இந்தப் பேச்சு அமைந்திருந்தது.

ஆக, இந்த அரசாங்கம் அண்மையில் கிடைத்த இராணுவ வெற்றியினால் உற்சாகம் மேலிட்டுப் போய் இருக்கின்ற இந்த அரசாங்கம் திரும்பவும் விஜேதுங்க ஆட்சிக்கால நிலைப்பாட்டை நோக்கி நகர்ந்துள்ளது. அதாவது ஆயுதங்களைக் கீழே போடு ஈழத்தைக் கைவிடு, நிபந்தனை அற்ற பேச்சுக்கு வா.

ஒரு நாட்டின் பிரதான பிரச்சினையாகி அந்த நாட்டின் சகல வளங்களையும், செல்வத்தையும் நாளுக்கு நாள் அரித்துத் தின்று கொண்டிருக்கும் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிற எந்த ஒரு தலைவரும் எப்படிப் பேசக்கூடாதோ அப்படியான் ஒரு பேச்சை ஜனாதிபதி பேசியிருக்கிறார். போராடும் ஆயுதக் குழுவொன்றை, சாம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக் கூட்டம் ஒன்றைப் பற்றிப் பேசுவது போலப் பேசவும், அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கையை ஒரு சராசரியான அரசியல் அர்த்தமிழந்த வெறும் கொள்ளைக் கூட்டத்தின் கோரிக்கையாகக் கீழ்மைப்படுத்தவும் துணிந்த திடீர் துணிவும்,



செருக்கும் அவருக்கு எப்படி வந்தது?

யாழ் குடாநாட்டின் மீதான அவரது படைகளின் படையெடுப்பும் அதில் கிடைத்ததாகக் கூறப்படும் வெற்றிகளும் அவரது கண்களை மறைந்து விட்டிருக்கின்றன.

இலங்கை அரசியல் வரலாற்றில் எல்லா அரசுத் தலைவர்களும், தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக இப்படியான செருக்கும், இனவெறியும் கலந்த அபிப்பிராயத்தையே தொடர்ந்தும் வெளியிட்டு வந்துள்ளார்கள். இத்தகைய கருத்துக்கள் எல்லாம் நிலவிய பிரச்சினையின் உக்கிரத்தை அதிகரித்தனவே ஒழிய அவற்றைத் தணிப்பதில் கொஞ்சமும்

> இதுதான் சர்வாதிகாரத்தின் இன்றைய புது வடிவம். நடைமுறையில் சர்வதிகார இயல்பும், பார்வையில் ஜனநாயகத் தோற்றப்பாடும் கொண்ட இந்த நவீன சர்வாதிகாரத்தின் தலைவர்களை இன்றெல்லாம் அனைத்து நாடுளிலும் காணலாம்.
>
> அவர்கள் ஜனநாயகம் பற்றிப் பேசுவார்கள். சமாதானம் பற்றி அவர்கள் பேசாத நாளே இருக்காது. மக்களின் உரிமைகட்காக அவர்கள் எந்த நிமிடமும் செயற்படுவதாக தொடர்புசாதனங்கள் சொல்லிக் கொண்டிருக்கும். அதேவேளை அவர்கள் மக்களையும், அவர்களது ஜனநாயக உரிமைகளையும் ஆழக் குழிவெட்டிப் புதைப்பதற்கான செயலில் மிகவும் அக்கறையுடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

வெற்றி பெறவில்லை!

அரசியல் ரீதியாக கோரிக்கைகளை முன்வைத்து சாத்வீக வழிகளில் போராடிய தமிழர் அரசியல் தலைமைகளை உதாசீனம் செய்து, தூக்கி எறிந்த அரசாங்கங்கள் இந்த நாட்டில் ஒரு ஆயுதம் எந்திய போராட்டத்தை அவர்கள் நடாத்தும் நிலைக்குத் தள்ளி விட்டன. ஆயுதம் ஏந்திய போராட்டத்தையும் தொடர்ச்சியாக 'சட்டவிரோதம்', 'பயங்கரவாதம்' போன்ற சொற்களினால் மட்டும் அடையாளம் காணுவோம் என்ற விடாப்பிடியான செயற்பாடு காரணமாக, அந்தப் போராட்டம் இன்று நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டம் காணச்செய்யும் உக்கிரமான உள்நாட்டு யுத்தம் என்ற நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத் தளம்பல் நிலையையும் அந்நியச் செலாவணிக்கான கையிருப்பின் வீழ்ச்சியையும் சமாளிக்க முடியாமல், அரசாங்கம் இப்போது டொலரை நீந்தவிடும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலும், ஜனாதிபதியின் வெறுப்பும், பொறுப்பற்ற செருக்கும் அடங்கியதாகத் தெரியவில்லை. புலிகளை யுத்தத்தில் வெல்லுவதை முழுமையாகச் சாத்தியமான ஒரு விடயம் என்று நம்பும் அவரால் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சமாதானத்திற்குப் போக வேண்டிய அவசியம் இல்லையென்ற முடிவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது.

ஆனால், புலிகளை யுத்தத்தில் தோற்கடித்து விட்டால், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடுமா என்ற கேள்விக்கு என்ன பதில்? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி ஒலிக்கின்ற உறுதியான ஒரே குரலையும் இல்லாமலாக்கி விட்ட பின்னரே பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பேசுவது என்பதில் எந்த நியாயத் தன்மையும் இருக்க முடியாது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அரசாங்கம் தமிழர்களின் வாயில் மண்ணை அள்ளிப் போட்டு விடவும், அரசியல் ரீதியாகப் பிரச்சினையைக் கையாள்வதற்கு தயாரில்லை என்று அறிவிப்பதுமே அவரது இந்தப் பேச்சின் சாரம்.

ஆக, புலிகள் யுத்தத்தில் குதிக்கும் நிலையை உருவாக்கி விட்டு அவர்கள் யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். பயங்கரவாதிகள் அது இதென்று கத்தினார்கள். இப்போது அவர்கள் அரசியற் களத்தில் இறங்க முன்வந்திருக்கையில் யுத்தம் யுத்தம் என்று கத்துகிறார்கள். கதிர்காமத்தில் பத்தாயிரம் படையினரைச் சேர்க்கும் பிரச்சாரத்தைத் தொடக்கி வைத்த பிரதமர் 'யார் என்ன சொன்னாலும் யுத்தம் தொடரும், பயங்கரவாதிகளை ஒழிப்பதே எமது இலக்கு' என்று பேசுகிறார்.

அதாவது எதற்கும் பிடிபடாமல் நழுவி நழுவிக் கொண்டே தனது இன ஒடுக்கு முறையைத் தொடர்கிறது அரசு.

இதுதான் சர்வாதிகாரத்தின் இன்றைய புது வடிவம். நடைமுறையில் சர்வாதிகார இயல்பும், பார்வையில் ஜனநாயகத் தோற்றப்பாடும் கொண்ட இந்த நவீன சர்வாதிகாரத்தின் தலைவர்களை இன்றெல்லாம் அனைத்து நாடுகளிலும் காணலாம்.

அவர்கள் ஜனநாயகம் பேசுவார்கள். சமாதானம் பற்றி அவர்கள் பேசாத நாளே இருக்காது. மக்களின் உரிமைகட்காக அவர்கள் எந்த நிமிடமும் செயற்படுவதாக தொடர்புசாதனங்கள் சொல்லிக் கொண்டிருக்கும். அதேவேளை அவர்கள் மக்களையும், அவர்களது ஜனநாயக உரிமைகளையும் ஆழக் குழிவெட்டிப் புதைப்பதற்கான செயலில் மிகவும் அக்கறையுடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

பயங்கரவாதத்தை எதிர்ப்பார்கள். சர்வதேச பயங்கரவாதத்தக்கு எதிராக கூட்டுக்குரலெழுப்புவதும் செயற்படுவதும் அவசியம் என்று மாநாடு போடுவார்கள். ஆனால், தமது நாட்டிலேயே மக்களைப் படுகொலை செய்கின்ற புதைகுழிகளுக்குள் அனுப்புகிற, பட்டினியில் சாக வைக்கின்ற சகல பயங்கரவாத நடவடிக்கைகளையும் செய்து கொண்டே இருப்பார்கள்.

இவர்கள் தான் இன்றைய 'ஜனநாயக அரசுகளின்' தலைவர்கள். அமெரிக்கா முதல் சிறிலங்கா வரை ஏறக்குறைய அனைத்து நாடுகளதும் தலைவர்களாக இருப்பவர்கள் இவர்கள் தான்.

அதிலும் மூன்றாம் உலக நாடுகளின் தலைவர்கள், எல்லோரையும் வென்றவர்கள். அவர்களுக்கு தமது நாட்டு மக்கள் மீது மட்டுமல்ல, தமது நாட்டின் வளங்கள் மீதும் அலாதிப்பிரியம். அவற்றையும் அவர்கள் இரண்டிலொன்று பார்த்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள், பார்க்கின்றார்கள்.

இந்தச் சர்வதேச ஜனநாயக அரசுத் தலைவர்களின் நாட்டில் இப்போது தீவிர அங்கத்துவம் வகிப்பவர் ஜனாதிபதி சந்திரிகா.

அது அவருக்கு அசைக்க முடியாத துணிவையும் அதன் காரணமான செருக்கையும் உருவாக்கி விட்டுள்ளது.

உலகத்தைக் காலில் போட்டுச் துவம்சம் செய்து விடுகிற ஆணவச் செருக்கு. அதன் வெளிப்பாடு தான் அவரது ஞாயிற்றுக்கிழமைப் பேச்சு.

அவரது செருக்கை வாழ்த்துவோம்.

ஆனால், துயரம் என்னவென்றால், செருக்கு வரலாற்றில் மனிதர்களை முட்டாள்களாக்கும் ஒரு நோயும் கூட என்பதை அவர் மறந்து விட்டார்.

இந்த நோய், மீள முடியாத பேரழிவுக்குள் மனிதர்களை வீழ்த்தி விடும் என்பதையும் அவர் மறந்து விட்டார்.

பாவம் அவர் மறதிக்கு எந்த நீதிமன்றிலும் மன்னிப்பு இல்லை என்பதையும் கூட அவர் மறந்து விட்டார்.

அவரது மறதியையும் வாழ்த்துவோம்.

ஏனென்றால், இவை இரண்டும் தான், இவை மட்டும் தான் இன்று தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையூட்டுகின்ற சமிக்ஞைகளாக இருக்கின்றன என்பது இந்த நாட்டின் தலைவிதியாக உள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



# கருத்தியல் தளத்தில் தடம் பதிக்கும் மலையக மக்களின் இன அரசியல்


## மலையகத்தில் அண்மையில் உருவாகியுள்ள மூன்று அமைப்புக்கள் பற்றிய சில குறிப்புக்கள்

– இடையன்

பிந்துனுவெவ சம்பவம் இடம்பெற்று (25.10.2000) மூன்று மாதங்கள் கடந்து விட்டன. ஆனால், அச்சம்பவத்தின் எதிரொலி இன்றும் மலையக அரசியல் அரங்கில் ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது. காரணம் அதன் முக்கியத்துவம் குறித்த சம்பவத்தில் 29பேரே மரணித்த போதும், அது மலையக மக்கள் மத்தியில் தோற்றுவித்த விழிப்புணர்வு அந்த மக்களின் வரலாற்றில் என்றுமே மறக்கவோ, மறைக்கவோ முடியாத ஒரு முக்கிய (சோக) நிகழ்வாக என்றுமே நினைவு கூரப்படுமளவிற்கு அரசியல் வாழ்வியற் தளங்களில் பாரிய கருத்தியல் மற்றும் சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

தனி நபருக்கோ, ஒரு சமூகத்திற்கோ நெருக்கடிகள் அதிகாரிக்கும் போது தான் நெருக்குதலுக்கெதிராகப் போராடும் எண்ணம் வெளிப்படத் தொடங்கும். இது மனித இயல்பு. இது மலையக சமூகத்தில் தென்படத் தொடங்கி விட்டது. கிட்டத்தட்ட 175 வருட கால வரலாற்றை கொண்ட இம்மக்கள் இன்று தங்கள் தலைமைகளையும், மீறி சிந்திக்கவும், செயற்படவும் தலைப்பட்டுள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் வழிசமைத்துக் கொடுத்தது தான் பண்டாரவளை - பின்துனுவெவ அவல நிகழ்வுகள், 1983 ஜூலைக் கலவரத்தில் மலையகத்தவர்களே பெரும்பாலும் பாதிப்புக்கும், இழப்புகளுக்கும் (சுயாதீனமான கணக்கீடுகளின் பிரகாரம் முழு நாட்டிலும் 2000 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர்) ஆளான போதும் அன்று அவர்கள் முழுமையாகத் தங்கள் பாதுகாப்பையே தேடினர். ஆனால், இன்று பிந்துனுவெவ சம்பவத்தின் பின் தங்கள் எதிர்ப்பைக் காட்டவும், தங்கள் எதிர்காலம் குறித்து சிந்திக்கவும் அதற்காகச் செயற்படவும், துணிந்துள்ளனர். அது அவர்களின் அரசியல் வாழ்வியற், தளங்களில் ஏற்பட்டுள்ள பாரிய அதே சமயம் தேவையான மாற்றமாகும்

இதன் ஒரு அம்சமாக மலையக மக்களும், அவர்கள் சார்ந்த அமைப்புகளும், நீண்டகால நோக்கில் மலையகத் தமிழர்களின் இருப்பு தொடர்பில் கவலை கொள்ளத் தொடங்கியுள்ளன. நீண்டகால நோக்கில் இம்மக்களின் இருப்பு பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதனை இன்று இம்மக்களைச்



சார்ந்தவர்கள் உணர்ந்துள்ளதாகவே தெரிகின்றது. அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொழில் வாய்ப்புகளில் புறக்கணிப்பு, கல்வி நிலையில் தேக்கம் / குறைந்த விருத்தி, திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாடு (இன்று உலகில் முன்னணியில் வெற்றிகரமாக அதிஉயர்பட்ச வகையில் மேற்கொள்ளப்படும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்) அரசியல், இராணுவ ரீதியான அச்சுறுத்தல்கள் எனப் பல வழிகளிலும் இம்மக்களின் இருப்பிற்கு பேரினவாத அரசாங்கங்களினாலும், அதன் துணை அமைப்புகளினாலும் தினம் தினம் சவால் விடுவிக்கப்படுகின்றது.

பொதுவாக, இவ்வொடுக்குமுறைகளை இரு பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம். ஒன்று, இம்மக்கள் தமிழர் என்பதனால், எதிர்நோக்கும் இன ரீதியிலான ஒடுக்குமுறை மற்றையது, இம்மக்களிற் பெரும்பாலானோர் தொழிலாளர் என்பதனால் எதிர்நோக்கும் வர்க்க ரீதியிலான ஒடுக்குமுறை.

மறுபுறத்தே மலையக மக்களின் சமூக கட்டமைப்பு பாரிய மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது. ஆரம்ப காலங்களில் முழு மலையக சமூகத்திலும் 90சதவீத தோட்டத் தொழிலாளர்களே இருந்தனர். ஆனால், இன்று கிட்டத்தட்ட பன்னிரண்டு இலட்சத்தைத் தாண்டிவிட்ட இம்மக்கள் தொகையில் 60 சதவீதம் வரையிலாவது தோட்டத் தொழிலாளர்களாக இருப்பார்களா என்பது சந்தேகமே! ஏனையோரில் படித்து உயர் தொழில் புரிவோர், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், நகர்ப்புறக் கடை ஊழியர்கள், நகர்புறக் கூலித் தொழிலாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், விவசாயிகள், சிறுபண்ணையாளர்கள் எனப் பல பிரிவினர் இன்று பல துறைகளிலும் தொழில் புரிகின்றார்கள்.

இதேவேளை அரசாங்கமானது சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிறு தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களையே ஊக்குவிப்பதில் பெரும் ஈடுபாடுகாட்டி வருகின்றது. இதன் வெளிப்பாடே இன்று இலங்கையின் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 52% - 57% வரை சிறு உரிமையாளர்களின் பங்களிப்பாக வளர்ச்சி கண்டுள்ளது. அதேவேளை பெரும்பான்மையான மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் பெரும் நிலப்பரப்பை உள்ளடக்கிய 22 தோட்டக் கம்பனிகளுக்கு சொந்தமான தோட்டங்களிலும் அரசாங்க கட்டுப் பாட்டிலுள்ள தோட்டங்களிலுமே தொழில் புரிகின்றனர்.

இவ்விடத்தில் ஒரு முக்கிய விடயத்தை குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகும். 1992ஜூன், ஜூலையில் மீண்டும் பெருந்தோட்டங்கள் தனியார் முகாமைத்துவ கம்பனிகளிடம் கையளிக்கப்பட்ட பின் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மதிப்பீட்டு பிரிவின் கணிப்புகளின்படி இதுவரை மூன்று இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இந்நிலையில் அண்மையில் கட்டுரையாளருடன் உரையாடும் போது ஐக்கிய தேசிய கட்சியின் மலையகம் சார்ந்த முக்கியஸ்தரும் தேயிலைச் சபையின் உறுப்பினருமான அரசியல்வாதி தேயிலை ஆராய்ச் சபை (TRI) இன்னும் ஏழு வருடங்களில் தற்போதைய பெருந் தோட்டத்துறைத் தொழிற்படையை தற்பொழுது உள்ளதைவிட 1/3பங்காகக் குறைத்துவிட எண்ணியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஏன், மேற்கூறிய உதாரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டதெனில், இவை மலையக மக்களை மறைமுகமாக அவர்களின் வாழ்வியற் பிரதேசங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்துவதற்கான திட்டங்கள் என்பதனைச் சொல்வதற்காகவே!

இவ்வாறான நெருக்குதல்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் தான் மலையகத் தமிழர்களின் இன அரசியல் முனைப்பு பெறுகிறது.

இவற்றின் ஒரு அங்கமாகவே மலையகத்தில் பல புதிய அமைப்புகளின் தோற்றமும், பல ஸ்தாபனங்களின் கூட்டமைப்புகளும் மாற்றுக் கோரிக்கைகளின் வலியுறுத்தல்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றினுள் கடந்த வாரங்களில் பெரிதாகப் பேசப்பட்டவை பல கூட்டமைப்புகளின் உருவாக்கமும் செயற்பாடுகளுமாகும். குறிப்பாக, கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ், வர்த்தகர் காரியப்பாபிள்ளை, சௌந்தரராஜன் போன்றோரின் முன்முயற்சியில் இந்திய தூதரகத்தின் அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்ட, "இந்திய வம்சாவளி மகாசபை" பற்றி நிறையப் பேசப்பட்டது. ஆனால், இதை இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாத செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவும் கொழும்பை மையப்படுத்திய இந்திய வர்த்தகர்களின் நலன்பேணும் அமைப்பாகவுமே இதனைக் காண முடிகிறது.


அடுத்தது, கடந்த ஜனவரி 27ஆம் திகதி கொழும்பு மெஸஞ்சர்வீதி பிரைட்டன் ரெஸ்ட் ஹோட்டலில் வைத்து ஆரம்பிக்கப்பட்ட "மலையக மக்கள் அபிவிருத்தி ஆய்வு மன்றம்" ஆகும்.

இது மலையக புத்திஜீவிகள், கல்விமான்கள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள், அடங்கலாக மலையக மக்களின் தனித்துவமான பிரச்சினைகளை இனங்கண்டு ஆய்வு அபிவிருத்தியில் ஈடுபடும் பொருட்டும், மலையகத்துக்கென அரசியல் சாராத தேசிய செயலகம் மற்றும் ஆவண வள நிலையம் ஒன்றிற்கான அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க அதேவேளை அவசியமான தேவையுமாகும். இதன் வெற்றியானது அதன் எதிர்கால செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது.

மற்றைய அமைப்பு மலையகம் சார்ந்த அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்விமான்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பாகும். இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த டிசம்பர் 23ம் திகதி கண்டியில் இடம் பெற்றுள்ளதுடன், அதன் இரண்டாவது கூட்டம் கடந்த ஜனவரி 27ஆம் திகதி நுவரெலியா கூட்டுறவு விடுதியில் நடைபெற்றுள்ளது. இவ்வமைப்பு தேர்தலை நோக்காகக் கொள்ளாத மலையக மக்களின் பொதுப் பிரச்சினைகளின் போது கூட்டாக போராடுவதற்கும், மலையக மக்களின் அரசியல், வாழ்வியல் உரிமைகளை வென்றெடுப்பதற்குமான பொதுக் கூட்டமைப்பாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் மூலம் அறிய முடிகிறது. அதே வேளை ஒவ்வொரு அமைப்பினதும், தனிப்பட்ட செயற்பாடுகள் இதனால் பாதிப்படையும். சகல மலையக சக்திகளையும் அவற்றின் தனிப்பட்ட செயற்பாடுகள் பாதிக்காத வகையில் மக்களின் பொது விடயங்களின் போது ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கடைசிக் கூட்டத்தின் போது இவ்வமைப்பு தனது யாப்பு பற்றி விவாதித்த போது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில அம்சங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும், காலத்தின் அவசியத் தேவையாகவும் மலையக மக்களின் இன அரசியலின் இரண்டாவது கட்டத்தின் அடுத்த நகர்விற்கு மிகவும் அத்தியாவசியமானதாகவும், கருதப்படுவதால், எவ்வெவ் அமைப்புகள், தனி நபர்கள் இவ்வமைப்பின் செயற்பாடுகளில் தங்களையும் இணைத்துக் கொண்டுள்ளார்கள் என்பதை விட தோற்றம் பெற்றுள்ள ஏனைய அமைப்புகளிலிருந்து இது வித்தியாசப்படுவதுடன், இவ்வாறான அமைப்பின் தோற்றம் காலத்தின் தேவையாகவும் உணரப்படுவதில் ஆச்சரியமில்லை.

இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் எடுத்துக் காட்டாக பின்வருவனவற்றை குறிப்பிடுதல் பொருத்தமுடையதாக இருக்கும்.

- மலையகத் தமிழர் இனிமேல் எக்காரணம் கொண்டும் இந்தியத் தமிழர், இந்திய வம்சாவளியினர் என அழைக்கப்படக் கூடாது. அவர்கள் மலையகத் தமிழர்கள் என்றே அடையாளப்படுத்தப்பட வேண்டும்.
- மலையகத் தமிழர் சிறுபான்மை இனம் என்ற கருத்தாக்கம் பாவிக்கப்படல் நிறுத்தப்பட வேண்டியதுடன் மலையகத் தமிழர் ஒரு தேசிய இனம் என்ற சொற்பதமே பயன்படுத்தப்பட வேண்டும்.



- மலையக மக்களின் வாழ்வாதாரப் பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு அரசியல் அதிகார அலகுக் கோரிக்கையை முன்வைப்பதுடன் அதற்காக சகல மட்டங்களிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இவற்றைவிட மலையகத் தமிழர் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் இக்கூட்டமைப்பின் பெயர் "மலையக தேசிய கூட்டமைப்பு" (Malayaga National Alliance) என சூட்டப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

மேலும் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி இக் கூட்டமைப்பானது தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை வலியுறுத்தியும் பிந்துனுவெவ மற்றும் அதன் தொடர்ச்சியாய் மலையக பகுதிகளில் இடம்பெற்ற அரச பயங்கரவாதத்தில் கொல்லப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு நீதி கேட்டும் வட - கிழக்கில் போர் நிறுத்தம் வேண்டியும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக எதிர்வரும் 22ஆம்திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

எத்தகைய போராட்டமாயினும், அதன் நியாயத்தன்மை கருத்தியல் தளத்திலும் தடம் பதித்து வளர்ச்சியடையும் போது தான் அப்போராட்டமானது சக்தி உடையதாகவும், நிலைத்து நிற்கக் கூடியதாகவும் அமைவதுடன், குறித்த போராட்டம் பரந்துபட்டளவில் மாறுகிறது. மலையக அரசியல் இதன் தேவையை வேண்டி நிற்கும் தருணத்தில் தான் இக்கூட்டமைப்பு மேற்குறித்த கருத்தாக்கங்களை முன்னெடுப்பதில் முனைப்புக் காட்ட எண்ணியுள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்க காத்திரமான அம்சமாகும்.

இதேவேளை இக்கருத்தாக்கங்களை உருவாக்குவதிலோ அல்லது இக் கூட்டமைப்பில் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தலை இதுவரை தவிர்த்து வரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அதன் நேச சக்திகள் எதிர் காலத்திலும் தங்கள் பங்களிப்பை செய்யாது போயினும் இக் கருத்தாக்கங்களை சிதைக்காமல் இருக்குமாயின் அதுவே வரவேற்கத்தக்கதாகும்.

இறுதியாக ஒரு விடயத்தை நினைவு கூர்தல் பொருத்தமுடையதாக இருக்கும். அதாவது குறித்த கருத்தாக்கமானது வளர்ச்சியடைந்து மக்களின் சகல பிரிவினர் மத்தியிலும் பொதுக் கருத்தாக அது மாறும்போது அதை எந்த சக்தியாலும் மழுங்கடிக்க முடியாது. இக் கருதாக்கங்களின் ஆரம்ப கருத்தாங்கள், ஏன் இக் கூட்டமைப்பு கூட இல்லாதிருக்கலாம். புதிய அமைப்புகள் இக்கருத்துகளுக்கு தலைமை கொடுக்கலாம். ஆனால், சமூகம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்து கொண்டு தான் இருக்கும். ஏனெனில், இது தான் அரசியல் இயங்கு விதி. இதை இ.தொ.கா. முதற் கொண்டு மலையகத்தின் அனைத்து சக்திகளும் புரிந்து கொள்ளல் காலத்தின் தேவையாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# நீந்தும் டொலரும் முக்குளிக்கும் மக்களும்

– சஞ்சித்

கொழும்பு பிரதான வீதியில் உள்ள ஒரு பிரபலமான துணிக்கடை. ஜாம் ஜாம் என்று வியாபாரம் நடக்கும் ஒரு இடம். நுழைபவர்கள் இடித்துப் பிடித்துக் கொண்டு தமது உடுப்புக்களைத் தெரிவு செய்ய வேண்டிய ஒரு ஸ்தாபனம்.

ஆனால், அன்று அங்கு அவ்வளவாக நெரிசல் இல்லை. சுமாரான வியாபாரம் தான் நடந்து கொண்டிருந்தது.

திடீரெனக் கடை உரிமையாளர் அங்கு வருகிறார். கடைச் சிப்பந்திகள் முதல் அங்கு வேலை பார்க்கும் சகலரும் சற்று உசார் நிலைக்கு வருகிறார்கள். கடை உரிமையாளர் கடையின் முகாமையாளர் போல இருந்த ஒருவரிடம் இப்படிச் சொல்கிறார்.

'எல்லா ஐட்டத்துக்கும் 10 வீதம் கூட்டுங்கோ'

'எல்லாத்துக்குமா?'

'ஓம்.. எல்லா ஐட்டத்துக்கும்'

மனேஜர் சுறுசுறுப்பாகிறார். திடீரென விலை அதிகரிக்கப்படுகிறது.

0 0 0

வட அமெரிக்காவில் உள்ள பத்திரிகை ஒன்றில் வெளிவந்த ஒரு 'ஜோக்' இது. விலைவாசி ஏற்றம் தொடர்பாக வெளியிடப்பட்ட கிண்டலாக அது இருந்தது. சாப்பாட்டுக்கடை ஒன்றுள் நுழைந்த ஒருவர் தனக்கு தேவையான பண்டங்களைச் சொல்லிவிட்டு விலையை உடனே கேட்கிறார்.

'பரவாயில்லை.. சாப்பிட்டுவிட்டே கொடுங்கள்' என்கிறார் கடைக்காரர்.

'இல்லையில்லை... இப்போதே சொல்லுங்கள். நான் பணத்தைச் செலுத்தி விட்டே சாப்பிடுகிறேன்.

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'

'இல்லை நான் சாப்பிட்டு முடிய முதலே நீங்கள் விலையைக் கூட்டினாலும் கூட்டி விடுவீர்கள்'.

0 0 0

இலங்கை அரசாங்கம் டொலரின் விலையை நீந்த விட்டுள்ளதன் பின் கொழும்பிலுள்ள பிரதானமான கடைத்தெருக்களில் உள்ள கடைகள் யாவும் திடீரென தமது விலையைக் கூட்டியுள்ளன. சாதாரண சாப்பாட்டுக் கடை முதல் பெரிய நிறுவனங்கள் வரை எல்லாமே பொருட்களின் விலையை ஏற்றிவிட்டன. திரும்பத் திரும்ப நான்கு தடவை ரூபாய் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட பின், 'டொலரை நீந்த விடும்' முடிவை அரசு எடுத்தது. இது 86முதல் 88 ரூபாவாக இருந்த டொலரின் விலையை 100 ரூபா வரைக்கும் உயர்த்தியது. இந்த நிலைமை ரூபாயின் உண்மையான பெறுமதி என்ன என்பதை முகத்தில் அடித்தாற் போல் காட்டியது. கிட்டத்தட்ட 15சதவீதமான மதிப்பிறக்கம் நடைபெற்றுள்ளதால், அனேகமாக எல்லாப் பொருட்களினதும் விலை கிட்டதட்ட 15சத வீதத்தால் அதிகரித்துள்ளது. ஒரு பிளெயின் ரீயின் விலை 5 ரூபாவாக மாறிவிட்டுள்ளதென்ற ஒன்றே நிலைமையின் உக்கிரத்தை நாம் இலகுவாகப் புரிந்து கொள்ளப் போதுமான ஒரு உதாரணம் எனலாம்.

கொழும்பிலுள்ள பிரபல இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் கம்பனி ஒன்றின் முகாமையாளர் இப்படிச் சொல்கிறார்.

"கடந்த ஒரு வாரத்துள் மட்டும் எங்களது வாங்கும் சக்தி 15 சதவீதத்தால் குறைந்து விட்டது. பொருட்களின் விலையை திடீரென அதிகரிக்குமாறு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சில பொருட்களின் விலையை இன்னும் அதிக விலைக்கு விற்க வேண்டிய ஒரு நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம். இதிலுள்ள சிக்கல் என்னவென்றால் , மக்களின் வாங்கும் சக்தியும் குறைந்து போனதால், எமது விலையேற்றம் வியாபாரத்தில் ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கப் போகிறது"

தவிரவும் அத்தியாவசிய தேவைப் பொருட்கள் மற்றும் உணவு, சுகாதாரம் சம்பந்தமான பொருட்கள் எல்லாம் பெருமளவுக்கு விலையேறுகையில் மக்களது செலவீனம் மட்டுப்படுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. இது உள்நாட்டில் வாழ்கிற பெரும்பான்மையான நுகர்வோரை நெருக்கடி நிலைக்குத் தள்ளுகிறது. ரூபாய் மதிப்பிறக்கமும், டொலரை சுயாதீனமாக நீந்தவிடும் இயல்பும் பொருளாதார ரீதியில் பெருமளவு வீழ்ச்சியுற்றிருக்கும் ஒரு நிலையில் ஆபத்தான பின் விளைவுகட்கு இட்டுச் செல்லும் என்பதே பொதுவான பொருளில் நிபுணர்களின் கணிப்பாகும். உலக நாடுகளின் அனுபவங்கூட, வறிய நாடுகளை மேலும் வறிய நிலைக்குத் தள்ளும் நிலையையே உருவாக்கியிருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் உள்நாட்டு வருமானம், உள்நாட்டு செலவீனம் என்பவற்றுக்கிடையில் பாரிய இடைவெளி இல்லாத ஒரு நிலை நிலவும் பட்சத்தில் இந்த நீந்தல் சுயாதீனமான பரிவர்த்தனைக்கும், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் சிறப்புற நடக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்தும் என்பது ஒரு பொதுப்படையான உண்மை தான். திறந்த பொருளாதார முறையின் கீழ் கட்டற்ற வியாபாரக் கொள்கை நடைமுறையில் இருக்கும் போது நாட்டின் வர்த்தகம், ஒரு சமநிலைக்கு வரும் என்று பொருளியல் நிபுணர்கள் கருதுகின்றார்கள். கோட்பாட்டு ரீதியான இந்தக் கருத்தை சர்வதேச நாணய நிதியம் அபிவிருத்தியடையாத உதவி நன்கொடை பெறும் நாடுகள் கடைப்பிடிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. ஆனால், உதவி, நன்கொடைகள் பெறும் நாடுகளின் அந்நியச் செலாவணி மிகவும் அடிமட்டத்தைத் தாண்டியுள்ள ஒரு நிலையில் இவ்வாறான ஒரு செயலில் இறங்குவது மிகவும் ஆபத்தான, நாட்டை மேலும் நெருக்கடிக்குள் வீழ்த்திவிடக் கூடிய ஒரு நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை.

இப்போது இலங்கையில் கொண்டு வந்துள்ள, கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலான சர்வதேச நாணய நிதியத்தின் இந்தக் கோட்பாட்டை ஏற்றுச் செயற்பட்ட 89 நாடுகளில் கிட்டத்தட்ட அரைப்பங்கு நாடுகளில் பொருளாதார நிலையில் வீழ்ச்சி கண்டுள்ளன. இவற்றில் 32 நாடுகள் கடும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. மாறாக இந்தக் கருத்தை ஏற்க மறுத்து, நாணயப் பரிவர்த்தனையில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்த நாடுகளான சீனா, மலேசியா போன்ற நாடுகள் மிகவும் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத நாடுகளே தற்போது பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டு வருகின்றன என்கிறார் உலக வங்கியின் முன்னாள் பொருளியல் ஆலோசகர் டபிள்யு.பீ.ஜோசப் ஸ்டைலிஸ்.

இந்த மாற்றத்தை வர்த்தக வங்கிகள் நல்ல ஒரு நடவடிக்கை என்று பாராட்டியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இறக்குமதியில் கட்டுப்பாடான நிலையும், ஏற்றுமதியில் உற்சாகமான பங்களிப்பும் ஏற்படும் என அவை அபிப்பிராயம் கூறுகின்றன. ஆனால், நாட்டின் தனிநபர் பணப்புழக்கம் மற்றும் வாங்கும் சக்தி என்பவற்றின் வீழ்ச்சி உள்நாட்டு உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கச் செய்வதுடன், தொழிலாளர் அமைதியின்மையையும் ஏற்படுத்தும். வறுமையும், நோயும் கொண்ட நெருக்கடியான ஒரு சூழலை உருவாக்கும் என்பதால், இவற்றை ஈடுசெய்யும் சம்பள உயர்வு, மானியமுறை என்பவற்றை நோக்கி அரசு உந்தப்படும். இவை ஏற்றுமதி வர்த்தகம் இதுவரை அனுபவித்த லாபங்களை இனியும் பெறமுடியாத நிலைக்குக் கொண்டு செல்லும்.

> **இப்போது இலங்கையில் கொண்டு வந்துள்ள, கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலான சர்வதேச நாணய நிதியத்தின் இந்தக் கோட்பாட்டை ஏற்றுச் செயற்பட்ட 89 நாடுகளில் கிட்டத்தட்ட அரைப்பங்கு நாடுகளில் பொருளாதார நிலையில் வீழ்ச்சி கண்டுள்ளன. இவற்றில் 32 நாடுகள் கடும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றன.**


யுத்தமூலமான கண்மூடித்தனமான செலவீனம் இந்த நிலையை மேலும் வேகமடையச் செய்யும் என்பதை வர்த்தக வங்கிகள் கணக்கெடுக்கத் தவறுகின்றன. வங்கிக் கடன் வட்டிவீதம், என்பவை எதிர்பார்த்தது போல இறங்கும் என்று கொள்ள முடியாது. கடன் பெறுவதற்கான தேவை அதிகரிப்பதால் வட்டிக் குறைப்புக்கான வாய்ப்புக் குறையவே செய்யும். அதேவேளை சேமிப்புக்கான வட்டிகள் அதிகரிக்கும் அளவுக்கு



சேமிப்புக்கான உபரி அதிகம் உருவாகும் என்பது ஐயமே. வர்த்தக வங்கிகள் அரசின் கோட்பாட்டையும் சர்வதேச நிதியத்தின் கருத்தையும் ஏற்றதாக காட்டிக் கொள்ள இப்படிச் சொன்ன போதும், அவற்றின் வியாபாரமும் மந்த நிலை அடைவதற்கான சூழலே நிலவுகிறது.

ஒருகால் யுத்தம் நிறுத்தப்பட்டு அரசின் வளங்களை நாசமாக்கும் செயல் நிறுத்தப்படும் நிலை தோன்றுமானால் மட்டுமே வர்த்தக வங்கிகளின் இந்தக் கணிப்பீடு ஓரளவுக்காவது சாத்தியப்பட வாய்ப்புண்டு.

உண்மையில் அரசாங்கம் தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பிக் கொள்ளவே இந்த முடிவை எடுத்துள்ளது. கடன்வட்டி வீதத்தின் அதிகரிப்பு, தொடர்ச்சியான அர்த்தமற்ற யுத்த தளபாடங்கள் ஆயுதங்களின் இறக்குமதியால் வீழ்ச்சியடைந்த அந்நிய செலவாணிக் கையிருப்பு, உள்நாட்டின் உற்பத்தி, மந்தநிலை காரணமாகவும்



மட்டுப்படுத்தப் படாத யுத்தமும் மற்றும் இதர செலவீனம் காரணமாகவும் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் அளவின் பெருக்கம் காரணமாகவும் அரசு பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. யுத்தத்துக்கான அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு கூட அதனால் எதுவும் செய்ய முடியாத நிலைக்கு அது வீழ்ந்து கொண்டிருக்கிறது. இது தான் அது இப்போது தனது கட்டுப்பாட்டிலிருந்த டொலரின் வாங்கும் விற்கும் விலையைத் தீர்மானிக்கும் பொறுப்பை சந்தையிடம் கையளித்ததற்கான காரணம். சந்தையின் நிர்ணயம் எப்போதும் சந்தையின் கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையிலான சமநிலையோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். ஆனால், கேள்வி எல்லையற்றதாகவும் வழங்கல் எள்ளளவானதாயும் மாறி விட்ட நிலையில் நாடு இருப்பது இந்த நிர்ணயம் சர்வதேச கம்பனிகள் நாட்டை விழுங்கி ஏப்பம்விட மட்டுமே உதவ முடியும்.

ஆக, மொத்தத்தில் டொலர் நீந்தும்.

ஆனால், மக்கள் மூச்சுத் திணறி முக்குளிக்கப் போகிறார்கள்!

நன்றி - நூலகத்திட்டம்





# ஆங்கில மொழி வழிக் கல்வி அவசியம் தானா?

க.பொ.த உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கு ஆங்கில மொழியைப் போதனா மொழியாக்குவது குறித்து கல்வி ஆணைக்குழுவும் கல்வித் திணைக்களமும் திட்டம் வகுத்து அது நடைமுறைப்படுத்தவுள்ளது.

இலங்கையில் இவ்வாறு ஆங்கில கல்வியை அமுல்படுத்துவது, பல்கலைக்கழக மாணவர்களின் உளப்பாங்கை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையெனக் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் இந்தத் திட்டம் பற்றி பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் இன்னும் முழுமையான புரிதல் ஏற்படுத்தப்படவில்லை.

உண்மையில், ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாக்கப்படுவது நமது சுயமொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு உலக அறிவியலையும் அனுபவத்தையும் புரிந்து கொள்ளவும், அவர்களது ஆளுமை விருத்தியை மேலும் பலப்படுத்தவும் உதவும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால், ஆங்கில மொழி வழிக் கல்வி என்பது, தொழில் வாய்ப்பு, கல்வி வசதி போன்றவற்றின் அடிப்படையிலும் சமூக அந்தஸ்து என்பனவற்றின் அடிப்படையிலும் விரைவிலேயே ஒரு தனியான "மேலோங்கிச்" சமூகத்தின் உருவாக்கத்துக்கே இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை என்று கல்விமான்கள் கருதுகின்றார்கள்.

ஆங்கில மொழி வழிக் கல்வி இனங்களுக்கிடையே சமத்துவத்தை கொண்டு வருவதற்குப் பதில் முழு இலங்கைக்கும் ஒரு மேலோங்கிச் சமூகத்தை — ஆதிக்கம் பெற்ற சமூகத்தை உருவாக்கவே செய்யும் என்ற கருத்து நிலவும் அதேவேளை இதன் செயல்முறைப் பிரச்சினைகள் போன்றவை குறித்தும் கல்வியியலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எவ்வாறாயினும், இத்திட்டம் கல்வித்துறையில் காணப்படும் சிக்கல்களைத் தீர்க்க எவ்வாறு உதவும் என்பது குறித்தும், இதன் நன்மைகள் என்ன? தீமைகள் என்ன என்பது குறித்தும் கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் பலவிதமான கருத்துக்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அவர்களது அபிப்பிராயங்கள் கீழே தரப்படுகின்றன.

### பேராசிரியர் கா.சிவத்தம்பி ஓய்வுநிலைப்பேராசிரியர்

பொதுவாகக் கூறுவதாயின், மாணவர்களுக்கு ஆங்கில அறிவு பற்றிய ஒரு ஆழமான தாடனம் வேண்டும். ஆனால் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தை எழுத பேச மட்டுமே தெரிந்து வைத்துள்ளனர். அவர்களுக்கு போதியளவு ஆங்கில இலக்கியம் பற்றிய ஆழமான அறிவு கிடையாது. தெளிவு கிடையாது.

ஒருவருக்கு தமிழில் எழுத வாசிக்கத் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. அவர் மொழிப் புலமை பெறுவதற்கு தமிழ் இலக்கிய வரலாறு, இலக்கண வரலாறு போன்றவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.

அது போன்று தான் ஆங்கில மொழிப் புலமையும்.

மேலும் இதில் இரண்டு நிலைகள் உண்டென்று நான் கருதுகின்றேன்.

1. மூன்றாவது பாடமாக ஆங்கிலம் இருக்கும் பொழுது எழுத, பேச மட்டும் தெரிந்து வைத்திருத்தல் போதுமானது.

2. மூன்று பாடங்களுக்குள் ஒரு பாடமாக ஆங்கிலப் பாடம் இருக்கும் போது ஆங்கில மொழி பற்றி முழுப் புலமை இருத்தல் அவசியம்.

பல்கலைக்கழகம் செல்வதற்கான உளப்பாங்கை உயர்தர மாணவர்களுக்குள் வளர்க்கும் செயற்பாடாக இது இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் இலங்கையில் இது எவ்வாறு, நடைமுறைப்படுத்தப்படப் போகின்றது என்பது முக்கியமான வினாவாகும்.

இன்றைய போர்நிலைச் சூழலுக்கு அடிப்படையாய் அமைந்ததே தமிழ் வழியில் உயர்கல்வி என்ற கோரிக்கை தான். தனி ஒரு மொழியைப் பயன்படுத்தும் மாணவர்களின் பிரச்சினை இல்லை.

இரண்டு மொழி பேசுபவர்கள் இருப்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

### கலாநிதி குமாரி ஜெயவர்தனா

நல்லதென்றே கூற வேண்டும். ஆசிரியர்கள் இல்லையெனின் ஆசிரியர்களை இறக்குமதி செய்ய நேரிடும். இல்லாவிட்டால் திட்டத்தை அமுல்படுத்துவது கடினம். எவ்வாறாயினும், இது எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு எடுக்கப்பட்ட திட்டமாகும். வெளிநாடுகளில் இருந்து ஆசிரியர்களை வரவழைத்து, ஓய்வு பெற்ற ஆசிரியர்களை பயன்படுத்தி எப்படியாவது இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

### கலாநிதி அர்ஜுன பராக்கிரம

ஒருவருக்கு மொழியைத் தெரிவு செய்து கொள்ளும் உரிமையை வழங்குவது ஒரு பிரச்சினை. மறுபுறம் இது கட்டாயம் என்ற திட்டம் இருக்குமாயின் அது இன்னுமொரு பிரச்சினை எனலாம். மறுபுறம் தமது கல்வியை சிங்களத்திலும், தமிழிலும் தொடரலாம் என்பது இன்னொரு சிக்கல் எனலாம். தனது தாய்மொழியாக ஆங்கிலத்தை கருதுபவர்களும் இலங்கையில் உள்ளனர். இந்த வகையில் தமது கல்வியை எந்தவொரு மொழியிலும் தொடரும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும். அடுத்த பிரச்சினை அதற்கான வளம் இல்லாமையே. ஆனால் யாரும் சர்வதேச பாடசாலைகளை ஆரம்பிக்கும் போது குரல் கொடுக்கவில்லை. அங்கு பணவசதி படைத்தவர்கள் ஆங்கிலத்தில் தமது கல்வியைத் தொடருகின்றனர். இப்பாடசாலைகள் கல்வித்திணைக்களத்தின் கீழ் இயங்குவதில்லை. இவை வர்த்தக நிறுவனங்கள் மட்டுமே. இவற்றையெலாம் கேள்வியெழுப்ப வேண்டியுள்ளது.

எனவே இதில் நான் நன்மையான தன்மைகள் இருப்பதனையும் காண்கின்றேன். அதேவேளை துஷ்பிரயோகம் இருப்பதையும் காண்கின்றேன். கல்வித் திணைக்களம் தனது பலவீனங்களை இன்னும் சரிப்படுத்த முனைவதாகத் தெரியவில்லை. ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் பல மாகாணங்களில் உண்டு. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அதிகமான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

### பேராசிரியர் டபிள்யு.பி.டி.தர்மரத்ன ருகுணு பல்கலைக்கழகம்

இது நல்லதொரு திட்டம். ஆனால் எப்படி ஆரம்பிப்பது என்பது தான் பிரச்சினை. பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத போது இதனை எப்படி நடைமுறைப்படுத்துவார்கள் என்பது தான் சிக்கல். உயர்வகுப்புக்கு ஆங்கிலம் கற்பிக்கப் போகிறார்கள் எனின் மாணவர்களை எப்படித் தெரிவு செய்யப் போகிறார்கள்? ஆங்கிலத்தில் முழுமையான அறிவைக் கொண்டா அல்லது அரைகுறையான அறிவைக் கொண்டா? எவ்வாறெனினும், ஆசிரியர்களைத் தெரிவு செய்வது தான் இங்கு பிரச்சினையாக இருக்கும்.

### பேராசிரியர் கங்காநாத் திசாநாயக்க

ஆங்கிலத்தில் கருமமாற்றக் கூடியவர்கள் இங்கு பரீட்சைகளில் தோற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை நாடிச் சென்று விடுகின்றனர். இல்லாவிடின் இங்குள்ள சர்வதேசப் பாடசாலைகளில் சேர்ந்து விடுகின்றனர். இதனால் மிகச்சிறிய தொகையினரையே ஆங்கிலத்தில் பரீட்சை எழுத வைக்க முடியும்.

இது பிரச்சினைகளுக்கு தீர்வு அல்ல.

நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பொருளாதார சிக்கல்களுக்கு ஆங்கில அறிவு அவசியம். இதனையே நாம் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். எனது அபிப்பிராயம் என்னவென்றால் பல்கலைக்கழக மட்டத்திலிருந்து இத்திட்டம் விஸ்தரிக்கப்படுவதே சிறந்தாகும்.

### பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழகம்

இன்று கல்வியில் ஆங்கிலம் முதன்மைப்படுத்தப்படவும் ஆங்கிலம் மூலம் உயர் கல்வி என்ற கருத்தை வலியுறுத்த இரண்டு காரணிகள் உண்டென நினைக்கின்றேன்.

1. திறந்த பொருளாதாரக் கொள்கையும் பூகோளமயமாக்கலும் நன்று செயற்படுவதற்கு ஆங்கில மொழித் திறனுள்ளோர் தேவையாக இருப்பது,

2. சுய மொழிக் கல்வி இன்றைய பொருளாதார சவாலை சமாளிக்க முடியாமை,

இந்த அடிப்படையில் பெரு முதலாளித்துவ பல்தேசியக் கம்பனிகளில் வேலை செய்யக் கூடியவர்களை உருவாக்குவது தான் ஆங்கில வழி கல்வி என்ற கோஷம் என்று நான் கருதுகின்றேன்.

தாய்மொழி மூலக் கல்வியே மாணவர் சுய ஆற்றல், ஆளுமை, சிந்தனையை வளர்க்கும் என்பது கல்வியியலில் நிறுவப்பட்ட ஒரு கருத்து. இலங்கையில் சுய மொழி மூலமான கல்வியால் சமூகத்தின் பல மட்டத்தில் கல்வி பரவியமையும், அதன் சாதகமான பலன்களையும் நாம் மறுக்க முடியாது.

இலங்கை கல்வித் துறையில் பல குறைபாடுகள் உள்ளன. கல்வியை சரியான முறையில் திட்டமிடாமையும், சரியான வழியில் கற்பிக்காமையும் தான் பிரச்சினை. இவற்றைப் பரிசீலிப்பதை விட்டு விட்டு ஆங்கிலம் மூலம் கல்வியே சர்வரோக நிவாரணி என்று கூறுவதில் அர்த்தமில்லை.

அதேவேளை ஆங்கிலம் ஒரு நவீன மொழி: வளர்ச்சியடைந்த மொழி: அதை அறிவது அவசியம். ஆனால் அது கட்டாயப்படுத்தப்படுவதும் ஆங்கிலக் கல்வி தான் தீர்வு என்பது கூறுவதும் பிரச்சினைக்குரியதாகும்.

உலகை அறிய பல மொழி அறிவு தேவை. ஆனால் ஆங்கிலம் தான் வேண்டும் என்பது மாயை.

திறந்த பொருளாதார வளர்ச்சியினால் பாரிய ஏற்றத்தாழ்வுகளை சந்தித்துக் கொண்டிருக்கும் இலங்கை சமூகத்தில் ஆங்கிலத்தை முதன்மைப்படுத்துவது வசதி படைத்தோரை மென்மேலும் வளர்க்கவும், வசதியற்றோரை மேலும் பின்தள்ளவும் வழிவகுக்கும். அது மாத்திரமல்ல ஆங்கில வழிக் கல்வி என்பது கிராமப்புறங்களிலும், வசதியற்றோர் மட்டத்திலும் மாணவர்களை கல்வியில் புறந்தள்ளக் காரணமாக அமைந்துவிடும்.

எனவே இத்திட்டத்தின் அரசியற் பின்னணி ஒருபுறமிருக்க,கல்வி சுயமொழியில் அமைதலே மாணவர்களின் உளப்பாங்கை ஆளுமையை சிந்தனையை வளர்க்க உதவும் என நான் கருதுகின்றேன்.

### ஜி.எம்.கே.பி.குணஹேரத் திறந்த பல்கலைக்கழகம்

முதன்மைப் பிரச்சினை யார் ஆங்கிலம் படிப்பிப்பது என்பதே. எமது நாடு முன்னேற வேண்டுமாயின் ஆங்கில மொழியின் அருமையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இதற்குச் சரியான திட்டம் உயர்கல்வியை ஆங்கிலத்தில் நடாத்துவது அல்ல. அதற்குப் பதில் சிறு வயதிலேயே அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அவ்வாறன்றி ஆங்கிலத்தில் உயர்தரப் பரீட்சையை எழுதக் கூறுவது நகைச்சுவைக்குரியது என்றே கூற வேண்டும்.

இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு ஆங்கிலம் படிப்பிக்க வேண்டியுள்ளது.

எனவே இங்கு பிரச்சினை உயர்தரப் பரீட்சையை ஆங்கிலத்தில் எழுதுவதா இல்லையா என்பதல்ல. மாறாக அடிமட்டத்திலிருந்தே ஆங்கிலத்தைப் படிப்பிப்பதா இல்லையா என்பதே.

**இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் புலமையாளர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.**

**ஆ-ர்**

*தொகுப்பு- வாணி*

நன்றி - நூலகத்திட்டம்



இத்தொடர் இவ்விதழுடன் முடிவு பெறுகின்றது. ரெலோ இயக்கத்தில் இருந்த ஒருவரது மிகக் குறுகிய கால அனுபவங்களை மட்டுமே வெளிப்படுத்திய இந்தத் தொடர் தொடர்பாகவும். அவர் தப்பவிட்டிருக்கக் கூடிய பிற விடயங்கள் தொடர்பாகவும் தமக்குத் தெரிந்த தகவல்களையும் உண்மைகளையும் தமது போராட்ட கால அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் பல எழுத்துக்கள் வெளிவருவது அவசியம். இதைப் படிக்கும் வாசகர்கள் அவர்கள் எந்த விடுதலை இயக்கத்தில் இருப்பினும் சரி. விலகி இருப்பினும் சரி. தமது அனுபவங்களையும். அபிப்பிராயங்களையும் எழுதலாம். கருத்துக்கள் பேசப்பட்டு விவாதிக்கப்படும் போது தான் சரியான அல்லது சரிக்கு நெருக்கமான ஒரு நிலைப்பாட்டைக் கண்டடைய முடியும். வாசகர்கள் இவை தொடர்பாக எழுதுவதை வெளியிடவும். இரகசியத்தைப் பேணவும் சரிநிகர் உறுதியளிக்கின்றது.

ஆ—ர்

# வரலாற்றை ஆவணப்படுத்துவோம்!


ஒரு பாடசாலை மாணவனும் (அவர்களின் ஆதரவாளர்) மற்றும் ஒரு உறுப்பினருமாகப் பஸ்ஸினுள் கிறேனைட்டுக்களை சர்வ சாதாரணமாகக் கொண்டு போயிருந்தனர். பஸ் ஓரிடத்தில் சில நிமிடங்கள் நிற்கவும் இவர்கள் இருவரும் சாப்பாட்டிற்காக நிற்பாட்டி இருப்பதாக நினைத்துக் கடைக்குள் சென்று சாப்பிடுவதற்குக் குந்தினர். இவர்கள் பஸ் புறப்பட்டதைக் கவனிக் கவில்லை. சில நிமிடங்களின் பின் பஸ் புறப்பட்டு விட்டதை உணர்ந்த இவர்கள் டக்ஸி ஒன்றினுள் ஏறி பஸ்ஸைக் கலைத்துச் சென்றனர். அதேவேளை பஸ்ஸில் பயணிகள் இருவர் இல்லாததை உணர்ந்த கொண்டக்டர் அப்பயணிகளுடைய சூட்கேசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கச் சென்றார். இவர்கள் பஸ் பொலிஸ் நிலையத்தில் நிற்பதைக் கண்டதும் அங்கு சென்று அந்தப் பொருட்கள் தங்களுடையவை என்று உரிமை கோரவும், அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது என்று திறந்து பார்த்த போது இருப்பது கிறேனைட்டுக்கள் என்றவுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர். அந்த இருவரும் கைது செய்யப்பட்ட அரை மணித்தியாலத்தின் பின் சென்னையில் இருவர் கைது செய்யப்பட்டனர். இது என்.எல்.எஃப்.ரி சம்பந்தப்பட்ட விசயம் என்பதால் மிகவும் ரகசியமாகப் பொலிசார் இதை வைத்திருந்தனர். பத்திரிகைகளில் செய்திகள் உடனே வெளியிடப்படவில்லை. பஸ்ஸில் கைது செய்யப்பட்ட விபரமும் சென்னையில் இருவர் கைது செய்யப்பட்ட விபரமும் பல என்.எல்.எஃப்.ரி தோழர்களுக்கே தெரிந்திருக்கவில்லை. இவர்கள் கைது செய்யப்பட்ட விபரம் நான் அங்கு அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றதால் எனக்குத் தெரிந்தது. உடனடியாக என்.எல்.எஃவ்.ரி தோழர்களுக்குத் தகவல் அனுப்பி மேலும் பலர் கைது செய்யப்படுவதைத் தவிர்த்தேன். உதாரணமாக, சென்னையில் கைது செய்யப்பட்டவர்களின் வீட்டிற்கு அருகில் எல்லாம் அதிகாரிகள். பலர் பல வேடங்களில் நின்றிருந்தனர். அதிகாரிகள் சிலரை நான் அடையாளம் காணக் கூடிய நிலையில் இருந்தாலும் அதிகாரிகளுக்கும் என்னைத் தெரியும் என்பதாலும் நான் நிலவரங்களை அறிந்து என்.எல்.எஃவ்.ரி யின் தலைவர் விசு மற்றும் மூன்று தோழர்களை காப்பாற்றக் கூடியதாக இருந்தது. அவர்களின் பாதுகாப்பிற்கு தற்காலிக ஒழுங்குகள் செய்யும் வரையும் அவர்கள் எனது இருப்பிடத்தில் இருந்தார்கள்.

நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் பலரினால் முற்போக்கு அமைப்பு எனக் கூறப்பட்ட என்.எல்.எஃவ்.ரி இந்தியாவிலேயே ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இன்னொரு குறிப்பிட்ட இடத்திற்கு ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கு முட்டாள்தனமான வழிகளில் கஷ்டப்பட்டது. இவர்கள் எவ்வாறு யதார்த்தமான வேலைத்திட்டங்களை வைத்திருந்தார்கள்? இவர்களினால் சாதாரண நடைமுறை வேலைகளைச் செய்ய முடியுமா? என்பவை பிரச்சினைக்குரிய விடயங்களாகும் எனக் கூறுகிறேன். பின்னர் இவர்கள் என்.எல்.எஃவ்.ரி, பி.எஃல்.எவ்.ரி என உடைப்பட்டு இன்று எந்த ஒரு வேலையும் செய்யாதவர்களாகி விட்டார்கள்.

### தம்பாப்பிள்ளை மகேஸ்வரனின் இழுத்தடிக்கும் தந்திரம்

இவ்வாறான ஒரு கால கட்டத்தில் கியூ பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்தில் தம்பாப்பிள்ளை மகேஸ்வரனைச் சந்திக்க முடிந்தது. எம்மை மகேஸ்வரனிடம் அறிமுகப்படுத்தி எமது நிலைமைகளைச் சொல்லி ஏதாவது பண வசதி செய்ய முடியுமா என்று கேட்டோம். அவரோ தன்னிடம் இருந்த பணத்தினை இந்திய அதிகாரிகள் பறித்து விட்டனர் என்றும் ஒரு நாளைக்கு இவ்வளவு என்று தான் திருப்பித் தருகிறார்கள் என்றும் தாம் யோசித்து முடிவு சொல்வதாகவும் கூறினார்.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரனிடம் காத்தான்குடி வங்கிப் பணம் நிறைய இருந்த போது அதில் ஒரு பகுதியினை ரெலோ 84 இல் கொள்ளை அடித்திருந்தது. இந்தக் கொள்ளைக்கு ரெலோ கூறிய காரணம் அந்தப் பணம் சிறிலங்கா அரசினால்



திரும்பவும் மீட்கப்படுவதாகவும் இவர்கள் இந்தப் பணத்தினைப் பாதுகாக்க முடியாது என்பதாலும் தாம் கொள்ளை அடித்ததாகக் கூறப்பட்டது. இதனால் அவர்கள் ரெலோ மீது ஆத்திரத்துடன் இருந்தனர். இதை விட இது மனோ மாஸ்ரரின் ஒப்புதலின் அடிப்படையில் நடந்ததாகவும் நாம் மனோ மாஸ்ரர் சார்ந்த குழுவினர் என்பதால் உதவி செய்ய முடியாது எனவும் அவர் கூறினார். பின்னர் எம்முடன் பெண்கள் இருப்பதால் தாம் மீண்டும் யோசித்து முடிவு சொல்வதாகக் கூறினார்கள். எனவே அடிக்கடி தம்பாப்பிள்ளையைச் சந்திப்பதும் அவர்களின் முடிவுக்காகக் காத்திருப்பதும் எமது வேலையாகி விட்டது. இவ்வாறு ஒருமுறை தம்பாப்பிள்ளை அவர்களின் வீட்டிற்கு வருமாறும் தாம் முடிவு சொல்வதாகவும் சொன்னார். எம்மைப் பொறுத்தவரையில் நம்பிக்கை இல்லாவிடினும் நாம் போகாவிட்டால் நாம் பணம் கொண்டு வந்திருந்தோம் நீங்கள் வராத படியால் போய் விட்டோம் எனவும் சொல்வார்கள் என்றபடியால் நான் அவர்களின் வீட்டிற்குச் சென்றேன். நான் வருவதாக அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. நான் வருவதைக் கண்ட அவர்கள் (அதுவரையும் வெளியில் நின்று உதைபந்து விளையாடியவர்கள்) உள்ளே போய் கைகால் கழுவி விட்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்கள். நான் வீட்டினுள் வந்ததும் என்னை வரவேற்றுத் தேநீர் தயாரிக்க ஒருவர் போய் விட்டார். எனவே அது வரையிலும் அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தினை எடுத்துப் பார்த்தேன். அது துப்பறியும் சித்திரக் கதையாக இருந்தது. நான் புத்தகத்தினைப் புரட்டிப் பார்க்கும் போது அந்த வீட்டின் பொறுப்பாளர் வந்து சிரித்து நிலை மைகளைச் சமாளித்தார். அவர்களுக்கு நாம் ஏதோ அரசியல் புத்தகங்களைப் படித்துக் குடித்தவர்கள் போன்ற மாயை தம்பாப் பிள்ளையினால் கொடுக்கப்பட்டிருந்தது. நானும் சிரித்து விட்டு தம்பாப்பிள்ளையை எதிர்பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பி விட்டேன்.

> "நான் கூறிய இந்த விடயங்கள் பெரியளவில் எமது போராட்ட வளர்ச்சியில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தா விட்டாலும் எமது போராட்ட வரலாற்றில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களாகும். இவை இன்று மறக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் எல்லாமே திரிபுபடுத்தப்பட்டும் புலிகளின் வரலாறு மட்டுமே தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறாகவும் சொல்லப்பட்டு வருகின்றது"

### வட அமெரிக்க தமிழ் டொக்ரர்களின் 'மனிதாபிமானம்'

இந்த 85ஆம் ஆண்டு காலகட்டத்தில் வட அமெரிக்காவில் இருந்து சில தமிழ் டொக்ரர்கள் இயக்கங்களுக்குப் பணம் கொடுப்பதற்காகச் சென்னை வந்திருந்தார்கள். அவர்களிடம் எம்மைப் பணம் கேட்கச் சொல்லியும் அவர்களைச் சந்திப்பதற்கு எமக்கு நேரம் எடுத்துத் தருவதாகவும் ஈரோஸ் பாலகுமார் எம்மிடம் கூறினார். அவர்கள் இயக்கத்திற்குத் தான் பணம் கொடுப்பதற்கு வந்தவர்கள் என்றாலும் இயக்கத்தை விட்டுப் பிரிந்த எமக்கும் விசேடமாகப் பெண்கள் எம்முடன் இருப்பதால் அவர்கள் உதவுவார்கள் என்றும் எமக்கு நம்பிக்கை ஊட்டிய பாலகுமாரின் விருப்பத்தின்படி நானும் சுந்தரம் தோழருமாக அவர்களைச் சந்திக்கச் சென்றோம். எனக்கிருந்த குறைந்த பட்ச நம்பிக்கையிலும் பத்து வீதமாவது மற்றத் தோழரிடம் இருக்கவில்லை. எனினும் நாம் சந்திக்காததால் தான் எமக்குப் பணம் கிடைக்கவில்லை என்ற நிலையைத் தோற்று விக்காமல் அவர்களைச் சந்திக்கச் சென்றோம். அங்கிருந்த டொக்ரர்களின் அணுகுமுறை நாம் எவ்வாறு அவர்களைச் சந்திக்க அனுமதி பெற்றோம் என்று விசாரிப்பதாகவும் எவ்வளவு விரைவில் எம்மை எவ்வாறாயினும் வெளியேற்றி விட முயற்சிப்பதாகவும் இருந்தது. இதைப் புரிந்து கொண்ட நாம் எவ்வாறு எம்மை வெளியேற்றப் போகிறார்கள் பார்ப்போம் என்ற முறையில் நாமும் அணுகினோம். நாமும் பணம் பெறாமல் போகப் போவதில்லை என்ற நிலையில் இருக்கும் போது தான் அவர்களின் மற்றைய பக்கம் எமக்கு அறிமுகமாகியது. ஒரு டொக்ரர் இந்தியப் பணம் நூறு ரூபாயை எடுத்து இங்கு வந்த உங்களின் போக்குவரத்துச் செலவுகளுக்கு வைத்திருங்கள் என்று பிச்சை போட ஆரம்பித்தார். எம்மையும் எமது போராட்டத்தினையும் கொச்சைப்படுத்தும் இந்த நடவடிக்கையினால் ஆத்திரமடைந்த எமக்கு என்னுடன் வந்த தோழர் அந்த நூறு ரூபாயை வாங்கி விட்டு வெளியேறியது மிகவும் குழப்பமாக இருந்தது. இரு நிமிடங்கள் எதுவும் பேசாதவாறு வெளியேறிய எனக்கு, என்னிடமிருந்த ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்ட மற்றைய தோழர் அவர்களிடம் திரும்பிப் போனார். நூற்றைம்பது ரூபாயை அவர்களிடம் கொடுத்து நாம் இங்கிருக்கின்றோம் எம்முடைய போக்குவரத்துச் செலவுகளை விட அமெரிக்காவில் இருந்து வந்த உங்களுக்கு நிறையச் செலவு இருக்கும் என்று அவர்களிடம் கொடுத்து விட்டு வந்து விட்டார். நாம் திரும்பி வரும் போது நமக்கிடையில் எந்தப் பேச்சுமே இருக்கவில்லை. சைக்கிள் மட்டும் வேகமாகச் சென்றது. அன்றிரவு முழுவதும் எமது நாளாந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சந்திக்கும் போது அவர்களின் நூறு ரூபாவை எடுக்காமல் போனது மட்டுமல்லாமல் எம்மிடமிருந்த ஐம்பது ரூபாவை இழந்ததையும் சிரித்துக் கொண்டே உணர ஆரம்பித்தோம்.

### கோவை மகேசனின் வீரம்

இதே காலகட்டத்தில் தான் சுதந்திரன் ஆசிரியரான கோவை மகேசனைத் தற்செயலாகச் சென்னையில் சந்தித்தோம். கோவை மகேசன் எனக்கும் மற்றத் தோழருக்கும் ஏற்கெனவே அறிமுகமானவர் என்பதால் எம்மிடம் மனம் விட்டுப் பேசினார். புலிகளின் வீரவேங்கைப் பத்திரிகையில் வேலை செய்து கொண்டிருந்த இவரை எவ்வாறு புலிகளுடன் சேர்ந்து வேலை செய்ய முடிகின்றது என்று கேட்ட போது அவரது பதில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. இதே கோவை மகேசன் தான் சுதந்திரன் பத்திரிகையில் இருந்த போது பாண்டிபஜாரில் நடைபெற்ற செய்திகளை உமா-பிரபா மோதல் என்று எழுதியதற்காகவும் உமாவின் பெயரை முதலில் போட்டதற்காக பிரபாகரனால் மிரட்டப்பட்டவர் என்றும் கேள்விப்பட்டிருந்தோம். இதைக் கூறியவரும் கோவை மகேசன் தான். இது தெரிந்த எமக்கு இவர் புலிகளுக்கு ஆதரவாக வேலை செய்வதை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை.

### விடுதலைப் போராட்ட வரலாறு ஆவணப்படுத்தப்படுதலின் அவசியம்

இவ்வாறு எனது குறுகிய கால இயக்க வரலாற்றில் பலவகைப்பட்ட ஏமாற்றங்களும் பல தோழர்களின் இழப்பும் நேர்ந்துள்ளன. என்னைப் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையும் பொருளாதார நிலையும் ஒவ்வொரு காலகட்டத்திலும் நான் எடுத்துக் கொண்ட முடிவுகள், பாதைகள் சரியா பிழையா, எவ்வாறு பல உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது அல்லது பல உயிர்களைக் காப்பாற்றி விட்டோமா என்ற பலவிதமான குழப்பங்கள் ஆரம்பத்தில் இருந்தன. இப்போது திரும்பிப் பார்க்கிற போது இது வரை நான் எடுத்த முடிவுகள் எனக்குச் சரியானதாகவே படுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கென என்னைப் போன்ற பலர் தம் உயிரை அர்ப்பணித்து பின்னர் வித்தியாசமான போராட்டத்தினை நடத்தியுள்ளனர். இந்தியாவின் விருப்பத்தின்படியும் கட்டளைக்கு இணங்கவும் செயற்பட்ட, செயற்திறனற்ற ரெலோவில் இருந்த நான் இன்று உயிரோடு இருப்பதனால் இதை எழுதக் கூடியதாக உள்ளது. புளொட்டில் இருந்திருந்தால் 'புதியதோர் உலகம்' என்ற நாவலில் நான் ஒரு கதா பாத்திரமாக்கப் பட்டிருக்கலாம். புலிகளில் இருந்திருந்தால் மாவீரர் என்றோ துரோகிகள் என்றோ ஏதாவது ஒரு பட்டத்தில் நான் அடக்கப்பட்டிருக்கலாம். இந்த விடயத்தில் என்னை வாசிப்பதற்கும் படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் தூண்டி விட்ட ரெலோவிற்கு எனது நன்றிகள்.

⇨ 13

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவப் பனிப்போர் உச்சக்கட்டம்

– பையூஸ் அகமட்

அஷ்ரஃப் செப்டெம்பர் 16ம் திகதி அரநாயக்க ஹெலி விபத்தில் பலியான கணத்திலிருந்து முஸ்லிம் காங்கிரசுக்குள் வெடித்த தலைமைத்துவப் போட்டி உச்சக் கட்டத்தை எட்டிவிட்டிருக்கிறது. றவூப் ஹக்கீமின் கடைசி எதிர்ப்பார்ப்பையும் அஷ்ஃரப்பின் மனைவியும், கட்சிக்குள் றவூப் ஹக்கீமுக்கு சமனாக உருவாக்கப்பட்ட இணைத் தலைவியான பேரியல் அஷ்ஃரப் அவர்கள் இத்தாவிலிருந்து வெளியே வந்ததுடன் பொய்யாக்கி விட்டிருக்கிறார்.

கட்சிக்குள் தலைமைத்துவ அதிகாரப் போட்டி தலைத்தூக்கியவுடன், அவ் அதிகாரப் போட்டியில் றவூப் ஹக்கீமுக்கு பலத்த சவாலாக பேரியல் அஷ்ஃரப் இத்தாவில் இருக்கும் போதே றவூப் ஹக்கீமின் தலைமையை விரும்பாத முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர் பீட உறுப்பினர்கள் பேரியல் அஷ்ரஃப் கட்சியின் இணைத் தலைவியாக வரவேண்டுமென்பதில் உறுதியாக நின்று அவரை இணைத் தலைவியாக்கியும் விட்டனர்.

இவ் இணைத்தலைமைத்துவ முடிவானது கட்சியின் யாப்புக்கிணங்க அரசியல் அதி உயர் பீடத்தினால் எடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டும் விட்டது. இம் முடிவின் பின் கட்சியின் தலைமை அதிகாரம் இவ்விருவரிடமுமே காணப்பட்டது.



ஆனாலும், தொடர்ந்தும் றவூப் ஹக்கீமும், பேரியல் அஷ்ரஃப்பும் தனித்தே தங்களது அரசியலை நகர்த்திக் கொண்டிருந்தனர். இவ்விருவருக்குமான இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தது.

இவ் இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் தற்போதைய அமைச்சரவை நியமனம் செய்யப்பட்டது. இவ் அமைச்சரவையில் றவூப் ஹக்கீமுக்கும், பேரியல் அஷ்ரஃப்புக்கும் இரு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன. இப்பதவிகளை எதிர்பார்த்து காத்துநின்ற மு.கா. அரசியல் அதி உயர்பீட உறுப்பினர்கள் - கிராம அமைப்பாளர்கள் எந்தப் பக்கம் நின்றால் தங்கள் காரியங்களைச் சாதிக்க முடியும் எனக் கணக்குப் பார்த்து பக்கச்சார்பெடுக்கத் தொடங்கினர். - றவூப் ஹக்கீமுக்கு கிடைக்கப்பெற்ற அமைச்சுப் பதவியில் எதுவுமே பெறமுடியாது என நம்பிய சில அரசியல் அதி உயர்பீட உறுப்பினர்கள், கிராம அமைப்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் பேரியல் அஷ்ரஃப்பின் பக்கம் நகரத் தொடங்கினர்.

அரசியல் அதி உயர் பீடத்தில் யார் எந்தப்பக்கம் எனத் தெரியாத நிலைக்கு றவூப் ஹக்கீம் தள்ளப்பட்டார். அதே நேரம் றவூப் ஹக்கீம் அவர்கள் இணைத் தலைமைத்துவத்திற்கு எதிராக தனித் தலைமை தான் வேண்டும் என கட்சியின் அதிஉயர் பீடத்தின் முடிவினையும் மீறிப் பகிரங்கமாகச் செயற்படத் தொடங்கினார். இதனாலும் கட்சிக்குள் பிரச்சினைகள் எழத் தொடங்கியது.

கட்சியின் அரசியல் அதிஉயர் பீடத்தைப் பொறுத்தவரை அவர்களால் ஒரு சரியான முடிவுக்கு வரமுடியவில்லை. கட்சித் தலைமைப்பதவி தொடர்பாக எந்தவொரு அரசியல் அதியுயர்பீடக் கூட்டத்தையும் கூட்டி சரியாக முடிவெடுக்க முடியாத நிலை தோன்றியது. அரசியல் அதிஉயர் பீடம் கூட்டப்பட்டால் கூட்டப்பட்ட அக்கூட்டங்கள் பலத்த சண்டை சச்சரவுக்கு மத்தியில் "பிச்சை வேண்டாம் நாயை பிடி" என்ற கதையாகத் தொடர்ந்தது.

இந்நிலையில் பேரியல் அஷ்ரஃப் இத்தாவில் இருந்து கொண்டிருந்தார். றவூப் ஹக்கீம் கட்சியில் தனது தனித்தலைமைக்கு பேரியல் அஷ்ரஃப் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார். அவர் இத்தாவிலிருந்து ஜனவரி 26ம் திகதி வெளிவந்தவுடன், தனக்கு முழு அங்கீகாரத்தையும் - ஆசியையும் தந்து தன்னையே தலைவியாக்கி விடுவார் என உண்மையில் நம்பினாரோ என்னவோ தெரியாது. ஆனால் பகிரங்கமாக வெளியில் இதனையே சொல்லிவந்தார்.

பேரியல் அஷ்ரஃப் தனது இத்தா கடமையிலிருந்து கடந்த ஜனவரி 26 வெளிவந்தவுடன், தனித் தலைமையல்ல, கூட்டுத் தலைமையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் தேவை, நாங்கள் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று சொல்லிவிட்டார். அது மட்டுமல்லாது இரவோடு இரவாக அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல முஸ்லிம் கிராமங்களுக்கும் சென்று தனக்கான ஆதரவைத் திரட்டத் தொடங்கி விட்டார். றவூப் ஹக்கீமின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போய் விட்டது.

## அடுத்த கட்டம் என்ன?

கட்சியில் இணக்கப்பாடு தொடர்பான எவ்விதமான நம்பிக்கைகளும் இல்லை. இருசாராரும் தங்கள் அதிகார மோகம், மற்றும் தலைமைத்துவ வெறியின் காரணமாக, விட்டுக் கொடுப்பதற்குத் தயாரில்லாதவர்களாகவே உள்ளனர். கட்சியின் அதிகாரமிக்க அரசியல் அதிஉயர் பீடம் எப்பக்கம் நின்றால் தமது காரியம் முடியுமெனக் கணக்குப் பார்த்து மற்றவர்களைத் தூற்றுவதிலும், தூசிப்பதிலும் அடியாட்களைத் தயார் படுத்துவதிலுமே கண்ணாக இருக்கிறது.

இப்பிரச்சினையில் மக்கள் சம்பந்தப்படாது இருதரப்பாரின் வாக்கு மூலங்களையும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் சமூகத்திற்காக இவர்கள் போராட முன் - தங்கள் தலைமைத்துவப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளட்டும் என அவர்கள் இப்போது நம்பியிருக்க வேண்டும். மக்களுக்கும் வெளிப்படையாக ஒரு உண்மை தெரிந்து விட்டிருக்கிறது. இவர்கள் நமக்காகப் போராடுகிறார்கள் என்பது வெறும் பம்மாத்து. அவரவர் காரியங்களைச் சாதிக்க அவரவர் ஓடிக் கொண்டிருக்கின்றனர். நாமும் எந்தப் பக்கம் நின்றால் நமது காரியத்தைச் சாதிக்கலாம் என கணக்குப்பார்க்கத் தொடங்கி விட்டனர். கிராமங்கள் தோறும் பேரியல் அஷ்ரஃப்பின் ஆள் நான் ரவூப் ஹக்கீமின் ஆள் நான் என அணிகள் பிரியத் தொடங்கி விட்டன.

**பெப்ரவரி 11ம் திகதி கட்சி பிளவுபடும் ஆபத்து? நிதீமன்றம் செல்லவும் ஒரு சாரார் தயார்!**

சமரசத்திற்கு வாய்ப்பில்லாத போது சண்டை தவிர்க்க முடியாதது! இதுதான் முஸ்லிம் காங்கிரசின் இன்றைய நிலை. றவூப் ஹக்கீம் சொல்கிறார் - தனித்தலைமையே வேண்டும். அது நான் தான் என்கிறார். பேரியல் சொல்கிறார். இணைத் தலைமை தான் வேண்டும். தனித்தலைமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறார். அப்படியானால் அடுத்த கட்டம் தலைமை யாரிடம் என்பது தான் இப்போதைய கேள்வி.

இதுதான் இன்றைய மு.காவின் அதிகாரப் பனிப்போரின் கடைசிப்புள்ளி. இவ்விடயத்தில் கட்சியின் பாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றுபேர் தேசியப் பட்டியலில் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஆனவர்கள். மருதூர்க்கனி, றிஸ்வி, பசீர் சேகுதாவூத். இவர்களுக்கு ஒவ்வொரு வருடமே பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்த காலத்தை யாரின் பக்கம் நின்றால் நீடிக்க முடிமென கணக்குப் பார்த்து இம்மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுள், இருவர் பேரியல் அஷ்ரஃப் பக்கமும், ஒருவர் றவூப் ஹக்கீம் பக்கமும் நின்கின்றனர். இவர்களின் இறுதி இலக்கு றவூப் ஹக்கீமும், பேரியல் அஷ்ரஃப்பும் கனவிலும் கூட ஒன்று சேர்ந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர். இந்த மூன்று எம்.பிகளில் பசீர் சேகுதாவூதைத் தவிர மற்றவர்கள் றவூப் ஹக்கீம் மு.கா. தலைவரானால் அடுத்த கணமே பாராளுமன்ற பதவியை விட்டுத் தூக்கி எறியப்படவுள்ளவர்கள்.

இந்நிலைமையில் றவூப் ஹக்கீம் அவர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ம் திகதி போராளர் மகாநாட்டைக்கூட்டி கட்சியின் தலைமையை தீர்மானிப்பதில் உறுதியாகவுள்ளார். கட்சி யாப்புக்கிணங்க அரசியல் அதிஉயர் பீடம் தலைவரைத்



தெரிவு செய்யும். நேரடியாக பேராளர்கள் அல்ல. ஆனால் கட்சியின் அதிஉயர் பீடத்தைக் கூட்ட முடியாத நிலையில் பேராளர்களைக் கூட்டி தலைமையைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

றவூப் ஹக்கீம் தான் தலைவர் என்பதில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புகளுக்கும் இடமில்லை என்பதை பகிரங்கமாகவே தெரிவித்து விட்டார். இன்றுள்ள ஒரேவழி - பேரியல் அஷ்ரஃப் றவூப் ஹக்கீமை தனித் தலைவராக ஏற்றுக் கொண்டால் மட்டுமே கட்சியைப் பிளவுபடும் ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும். இருவரும் நடாத்தும் அதிகாரப் பனிப்போரில் கட்சி சீரழிந்து விட்டது. அரசியல் அதிஉயர் பீட உறுப்பினர்கள் முஸ்லிம் சமூகத்தின் கோமாளிகளாகி விட்டனர். பிரதியமைச்சர்கள் முஸ்லிம்களின் பிரச்சினைகளே தெரியாத வியாபாரிகளாவர். இந்தக் கட்சியை முஸ்லிம் சமூகம் ஏற்றிப்போற்றி வைப்பதா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்கும் தேவை அடுத்த தேர்தலில் வந்துவிடும். அதற்குள் இவர்களில் யார் பலம் பொருந்தியவர்கள் என்பதை நிரூபிக்கத் தான் இப்பனிப்போர்.

இணைத் தலைமையை ஏற்றுக் கொள்ளாது பேரியல் அஷ்ரஃப்பை புறக்கணித்து றவூப் ஹக்கீம் கிழக்கில் எங்காவது போராளர் மகாநாட்டை கூட்டினால் அன்று கட்சி பிளவுபட்டுப் போய்விடும் - அன்று இருசாரரும் ஒருவரை ஒருவர் அழிக்கும் யுத்தத்தை நேரடியாகவே தொடங்கி விடுவர்.

இதே நேரத்தில் தனித்த றவூப் ஹக்கீமின் பேராளர் மகாநாடு கூட்டப்படும் முடிவினை எதிர்த்து சட்ட அங்கீகாரத்தினை பெறுவதற்காக ஒரு சிலர் நீதிமன்றம் செல்லவும் கூடும். தொண்டமான், செல்லச்சாமி கதை தான் முஸ்லிம் காங்கிரசுக்குள் தொடரும் வழியினை இப்போக்கு ஏற்படுத்தி விடும்.

இறுதியில் "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை" தான் முஸ்லிம்களுக்கு நடந்திருக்கிறது.

---

# முஸ்லிம்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப பயன்படுத்தப்படும் சரக்குகள் அல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விளங்கப்படுத்தவே முடியாது போலுள்ளது. புலிகளின் அரசியல் அந்தளவிற்கு முஸ்லிம்கள் தொடர்பாக கட்டி, இறுகிப் போயுள்ளது. வடக்கு கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் - விடுதலைப் புலிகளும்-தமிழ் மேலாதிக்க வாதிகளும் - சிங்களப் பேரினவாத அரசு தொடர்பாக முன்வைக்கும் கருத்துக்களை புலிகளின் மீதும் தமிழ் மேலாதிக்கவாதிகளின் மீதும் முஸ்லிம்கள் வைப்பது தவறாகாது. சிங்களப் பேரினவாத நிலைக்கு சமாந்திரமாக முஸ்லிம்களை பொறுத்த வரையில் விடுதலைப் புலிகளை நோக்கியும் தமிழ் மேலாதிக்கவாதிகளை நோக்கியும் இக்கருத்தினை திருப்பி வைப்பதில் ஒன்றும் குற்றமுமில்லை.

வடக்கு கிழக்கு தேச முஸ்லிம்களுக்கு இரண்டு தேச மேலாதிக்க சக்திகளும் ஒன்றாகத் தான் உள்ளன. இதனை மெய்ப்பிக்கும் அரசியலை சிங்கள தேசமும் தமிழ் தேச ஆதிக்க சக்திகளும் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் மீது நாளும் பொழுதுமாக மெய்ப்பித்து வருகின்றனர்.

அரசியல் வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கும் போது சிங்களத் தேசம் விட்ட தவறை தமிழ்த் தேசம் மிகக் குறுகிய காலத்தினுள் முஸ்லிம் மக்களிடம் விட்டிருக்கிறது. காலகாலமாக சிங்களத் தேசத்தால் அடக்கப்பட்ட தமிழ்த் தேசம் - அடக்கப்பட்ட தங்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சமகாலத்தில், முஸ்லிம்களை சிங்களத் தேசியவாதிகளை விட மிகக் கொடுமையாக அடக்கியுள்ளது. சிங்களத் தேச ஆதிக்க கருத்தினைத்தான் தமிழ்த்தேசம் தனது மூளைக்குள்ளும் வைத்துள்ளது.

புலிகள் முஸ்லிம்களுக்கு இழைத்த மிகப் பெரும் அநீதிகளை ஒரு புறத்தில் வைத்து விட்டு, கடந்த காலங்களைப் பற்றிப் பேசாது - நிகழ்காலத்தில் அடக்கப்படும் தமிழ்த் தேசத்துடன், சக தேசமாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள முஸ்லிம் தேசம் - அடக்கப்படும் தன்மை, வரலாறு, புவியியல், மொழி போன்ற ஒத்த காரணிகளை அடிப்படையாக முன் வைத்து தமிழ்த் தேசத்தை நோக்கி சக தேசம் என்ற அடிப்படையில் நீட்டும் அரசியல் கரத்தை புலிகள் தொடர்ந்தும் புறக்கணிப்பதுடன் சிங்களத் தேசம் தமிழ் மக்கள் தொடர்பாகக் கொண்டுள்ள ஆதிக்கக் கருத்தினைத் தான் - முஸ்லிம்கள் தொடர்பாக தமிழ்த் தேசமும் கொண்டுள்ளது என்பதைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றது.

ஆனாலும் தமிழ் முற்போக்கு புரட்சிகர சக்திகளும், நியாயமான தமிழ்மக்களும் முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக தங்களது உள வெளிப்பாட்டை பகிரங்கமாகவே தெரியப்படுத்தி வந்துள்ளனர். தமிழ்த்தேசமும், தமிழ் மேலாதிக்கமும் முஸ்லிம்களை எவ்வெவ்வகைகளில் அடக்கி ஆள முற்பட்டனர், முற்படுகின்றனர் என்பதை மிகத் தெளிவாக உரைத்தும் நிற்கின்றனர். அதைப் போன்று தான் முஸ்லிம் தேசமும் - முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை ஆதரித்து நின்கின்றனர். கடந்த கால வரலாற்றில் ஆதரித்தும் நின்றிருக்கின்றனர்.

சமகாலத்தில் தமிழ்த் தேச விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பலம் பொருந்திய தமிழ்த்தேச சக்தியான புலிகள், முஸ்லிம்கள் தொடர்பாக - சிங்கள இனவாத அரசின் தமிழ்த் தேசம்

நன்றி - நூலகத்திட்டம்



பற்றிய கருத்தின் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பது தான் முஸ்லிம் - தமிழ் அரசியல் தொடர்பான மிகவும் முரண்பாட்டை தோற்றுவிக்கிறது.

எந்த ஆதிக்க, அடக்கு முறைக் கருத்தினை எதிர்த்து புலிகள் போராடுகிறார்கள் எனச் சொல்கின்றார்களோ - அவ் ஆதிக்கக் கருத்தினை, ஒடுக்கப்படும் மற்றொரு தேசமான முஸ்லிம்கள் மீது நியாயப்படுத்துவது தான் புலிகளின் போராட்டத் தன்மையைக் கேள்விக் குட்படுத்துகிறது.

தமிழர் என்ற இன அடையாளத்திற்காக தமிழர்கள் மீது அடக்கு முறைகளை ஏவிவிடும் சிங்கள அரசுக்கு சமமாக - முஸ்லிம் என்ற இன அடையாளத்திற்காக சர்வதேச அரசியல் அங்கீகாரத்தினைப் பெறாத, தனி அரசாக தன்னை இன்னும் நிலை நிறுத்தாத புலிகள் முஸ்லிம்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டனர். முஸ்லிம்களின் அரசியல் உரிமையினை அலட்சியப்படுத்துகின்றனர்.

இனச் சுத்திகரிப்பு, இனப்படுகொலை, பொருளாதாரத்தடை, இன அடையாளத்திற்கெதிரான பாசிச அடக்குமுறை, கருத்துச் சுதந்திர மறுப்பு போன்றவை புலிகளின் முஸ்லிம்கள் மீதான கடந்தகால அரசியலாக உள்ளது. முஸ்லிம்களின் அனுபவமும் இதுவாகவே உள்ளது.

இன்று தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஒரு தீர்வினை வழங்க - புலிகளின் அழைப்பின் பேரில் இலங்கை இன முரண்பாட்டு அரசியலுக்குள் பிரவேசித்துள்ள நோர்வே பிரதிநிதியிடம் புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்டன் பாலசிங்கம் முஸ்லிம்கள் தொடர்பாக முன் வைத்துள்ள கருத்து - புலிகளின் முஸ்லிம்கள் தொடர்பான இன்றைய அரசியல் - நேற்றைய அரசியலில் இருந்து எவ்விதத்திலும் மாறவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது.

முஸ்லிம்கள் தொடர்பாக நோர்வே பிரதிநிதி அன்டன் பாலசிங்கத்திடம் எடுத்துரைத்த போது 'சந்தர்ப்பம் வரும் போது அவர்களுடன் பேசுவோம்' என்ற பதில் - முஸ்லிம்களை பொருட்படுத்தாது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு முஸ்லிம்களைக் கையாளலாம் என்ற புலிகளின் தப்புக் கணக்கையே வெளிப்படுத்துகிறது.

அன்டன் பாலசிங்கத்தின் அலட்சியம் கலந்த இப்பதிலின் பின்னுள்ள அரசியலையும் - புலிகளின் முஸ்லிம்கள் தொடர்பான மிகத் தவறான மதிப்பீட்டையும் - முதலில் முஸ்லிம் மக்களும் - அவர்களுக்காக போராடுகிறோம் எனச் சொல்லும் முஸ்லிம் தலைமையும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதை "விடியல்" வலியுறுத்த விரும்புகிறது.

இந்தப் புரிதலின் அடிப்படையில் தான் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு முஸ்லிம் தேசத்தின் மீது புலிகளின் ஆதிக்கக்கரம் - முஸ்லிம் மக்களை நசுக்கி அடக்கி ஆள்வதற்கு தயார் நிலையில் உள்ளது என்ற உண்மையை நாம் உணர முடியும். அவ்வுணர்தலின் மூலமாகத் தான் நாம் எதிர்காலத்தில் நம்மீது விதிக்கப்படவுள்ள அடக்கு முறையை தகர்த்தெறிந்து சுதந்திர மக்கள் திரட்சியுள்ள ஒரு தேசமாக தன்னை நிலைநிறுத்த ஓரணியில் திரளவேண்டிய அவசியத்தை நமக்கு உணர்த்தும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம் தேசத்தைப் பொறுத்தவரை அது ஒடுக்கப்படும் அனைத்து மக்களின் சுதந்திரத்திற்கும் நியாயமான வாழ்விற்கும் தனது உளப்பூர்வமான ஆதரவை வழங்கும் அதேநேரம் - தனது தேச மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்படும் எந்தவிதமான அடக்குமுறையையும் எதிர்த்து போராடவும் தயாராக வேண்டும்.

சிங்கள தேசத்தின், தமிழ்த் தேசத்தின் தரப்பிலிருந்து ஒரேநேரத்தில் ஒடுக்கப்படும் ஒரு தேசமாக உள்ள முஸ்லிம் தேசத்திற்கு எதிர்காலம் வெறும் பஞ்சு மெத்தையில் படுத்துறங்கும் வாய்ப்பை தந்துவிடப் போவதில்லை.

தூறலகளால் ஒதுபோதும் பயிர் வளரப் போவதில்லை, சலுகைகளால் ஒரு சமூகம் வாழப் போவதில்லை என்பது உடனடியாக நம் தேச மக்கள் மத்தியில் உணரப்படல் வேண்டும்.

**- விடியல்**

# பெண்களைக் காட்டி இராணுவத்திற்கு ஆள் பிடிக்கும் விளம்பரங்கள்!

தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் எமக்கு, நாம் ஏதோ புதுமையான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற எண்ணத் தோன்றுகின்றது. வகை வகையான உணவு வகைகள், பொருட்கள், பண்டங்கள், வாகனங்கள், காணிபூமிகள், ஆடை அணிகலன்கள். இவற்றுக்கு மத்தியில் திடீரென ஒரு வீரர் தோன்றுகின்றார். அவர் டயர்களுக்கி டையில் நுழைந்து, 'டார்சனைப்' போல பாய்ந்து, மரங்களுக்கிடையில் ஒளிந்து நின்று துப்பாக்கியால் குறி வைக்கின்றார். இறுதியில் இவரைப் போன்று வீரராகத் திகழ வேண்டுமாயின் இராணுவத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். குறிப்பிட்ட இடங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. உயரம் போதாமை என்பன பிரச்சினையல்ல என்று கூறப்படுகின்றது.

இது சில வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இளைஞர்களைச் சேர்த்துக் கொள்ள பயன்படுத்தப்பட்ட பிரச்சார முறை.

இவற்றைத் தவிர இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவென தனியே ஒரு பிரச்சாரம்.

இவற்றை அவதானிக்கும் போது இவர்களுக்கான சலுகைகள் அதிகம் என்றே தோன்றுகின்றது. எனினும் இப்பிரச்சாரங்களுக்கு எவ்வாறான பதில்கள் கிடைக்கின்றன என்பது பற்றி நாம் அறியோம்.

எமது சகோதரர்கள், சகோதரிகள் வேலை வெற்றிடங் கள் உண்டென்பதை அரச வர்த்தமானியைக் கொண்டே அறிந்து கொள்கின்றனர். இல்லாது விடின் உறவினர்களின் மூலம் அறிந்து கொள்கின்றனர். ஆனால் இராணுவத்தில் உள்ள வெற்றிடங்களை நாம் தொலைக்காட்சியிலும், வானொலியிலும், பத்திரிகைகளிலும், அது மட்டுமன்றி சாலைகளின் சுவர்களின் சுவரொட்டிகளின் மூலம் எந்தவித சிரமமுமின்றி அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இந்த உபாயங்கள் வெற்றி அளித்தனவா என்பது வேறு விடயம். ஆயினும் இங்கு எனது பிரச்சினைக்குரியதாகவிருப்பது இப்பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தப்படும் 'முறைகள்' தான்.

முன்பு கூறியதைப் போல இராணுவத்தில் புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்ள இராணுவ வீரர்களையும், அவர்களது வீரதீரச் செயல்களையும் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகவே உள்ளது. டயர், மின்குமிழ், சுவர்ப்பூச்சு என்பனவற்றுக்கு மட்டுமன்றி எஞ்சின் எண்ணெய்க்கு கூட பெண்களைப் பயன்படுத்தும் போது இராணுவத்தில் இளைஞர்களைச் சேர்த்துக் கொள்ள பெண்களை பயன்படுத்தாவிட்டால் எப்படி?

உதாரணமாக கடந்த காலத்தில் இளைஞர்களே இராணுவத்தில் சேர்ந்து கொள்ளுங்கள் என மறைமுகமாக மூன்று பெண் பாத்திரங்களினூடே (தாய், மனைவி, மகள்) கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. பெண்களை இராணுவத்தின் ஆட்சேர்ப்புப் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தும் முதலாவதும், இறுதியானதும் சந்தர்ப்பம் இதுவல்ல. இவற்றுடன் இப்பொழுது மேலும் சில விளம்பரங்கள் இணைந்து கொண்டுள்ளன.

இதுவரை பிரச்சாரப்படுத்தப்பட்ட விளம்பரங்களை விட 'திறமையான' படைப்பாக இவை கருதப்படுகின்றன.

இந்த விளம்பரத்தைச் சற்றுக் கவனிப்போம். மிகவும் பலமான உடற்கட்டைக் கொண்ட இராணுவத்தினர் சிலர் அமர்ந்திருக்கின்றனர். ஒருவர் சப்பாத்துக்களை சுத்தப்படுத் துகின்றார். இன்னொருவர் கிட்டார் இசைக் கின்றார். இவற்றுக்கிடையில் இளம் பெண் களின் சிரிப்பொலி கேட்கின்றது. தமது வேலைகளை நிறுத்தி விட்டு சிரிப்பொலி வந்த திசையை நோக்கி அவர்கள் பார்க் கின்றனர். கீழே ஒரு வரி-

"சிங்கக் குட்டிகளின் சொர்க்கத் தீவு" (சிங்க பெட்டவுன்கே பாராதீசய)

அடுத்த காட்சி.

முன்னர் கூறியதைப் போன்று இராணுவத்தினர் சிலர் ட்ரக் வண்டி ஒன்றில் பாடல் ஒன்றை இசைத்துக் கொண்டு செல்கின்றனர். திடீரென ட்ரக் வண்டி சரிவான ஆற்றுப் பள்ளதாக்கில் விழுந்து விடுகின்றது. அங்கு குளித்துக் கொண்டிருந்த பெண்கள் சத்தமிட்டுச் சிரிக்கின்றனர். பின்பு அவ் இராணுவ வீரர்கள் இறங்கி ட்ரக் வண்டியைத் தூக்கி நிறுத்துகின்றனர். சிரித்துக் கொண்டிருந்த பெண்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.




இது இன்னுமொரு காட்சி.

பலம் பொருந்திய உடற்கட்டினைக் கொண்ட இராணுவத்தினர் சிலர் வியர்வை சிந்த விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.

வியர்வை சிந்த விளையாடிக் கொண்டிருக்கும் இராணுவத்தினரின் உடற்கட்டைக் கண்டு பெண்கள் சிலர் ஆச்சரியப்படுகின்றனர்.

இந்த விளம்பரங்களின் அர்த்தம் என்ன? இந்த விளம்பரங்களின் மூலம் பெண்களுக்கு வழங்கப்படும் செய்தி என்ன?

இந்த மூன்று விளம்பரங்களிலும் ஒரு கருத்தே தெளிவுறுத்தப்படுகின்றது. அதாவது இவ்வாறு சிறந்த பலமான உடற்கட்டைக் கொண்ட ஆண்களையே பெண்கள் விரும்புகின்றனர் என்ற கனவுலகத்திற்கு இளைஞர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவ்வாறு அழகான பெண்களின் மனதை வெல்ல பலமான உடற்கட்டைக் கொண்டிருத்தல் வேண்டும் என ஆண்கள் நினைக்கின்றனர். இவ்விளம்பரங்கள் அவ்வாறான எண்ணங்களை மனதில் விதைத்து விடுகின்றன.



ஆனால் உண்மை அதுவல்ல. இன்று தமது இனத்திற்காக உயிரைத் தியாகம் செய்ய இராணுவத்தில் சேர்ந்து கொண்டோர் என்று யாரும் இல்லை. அவர்கள் அனைவரும் பொருளாதாரச் சிக்கலை வெற்றி கொள்ளும் நோக்கத்துடனேயே இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளனர் எனலாம். மேலும் இராணுவத்தில் விளம்பரங்களில் காட்டப்படுவதினைப் போன்ற கட்டுமஸ்தான உடல் கொண்டோர் இருக்கின்றனரா? பொருளாதாரத்தை சமாளிக்க 8ம் வகுப்பு சித்தியடைந்த சான்றிதழைத் தூக்கிக் கொண்டு இராணுவத்தில் நுழைந்து கொண்ட, துப்பாக்கியின் நிறையைக் கொண்ட தமது உடலைத் தாங்கிக் கொண்டிருக்கும் இராணுவத்தினரையே நாம் பரவலாகக் காணக் கூடியதாகவுள்ளது.

விளம்பரங்களில் காட்டப்படுவதைப் போன்று சந்தோஷமாகப் பாட்டுப் பாடிக் கொண்டும், விளையாடிக் கொண்டுமிருக்கும் இராணுவத்தினரைக் காணத் தான் இயலுமா?

எவ்வாறாயினும், இவ்விளம்பரங்களில் பெண்களைப் பயன்படுத்தியுள்ளமையைப் பற்றி சற்று ஆராய்ந்து பார்த்தால், இலங்கையில் அதிகரித்துச் செல்லும் வேலையில்லாப் பிரச்சினைக்கு ஆண்களுக்கு இராணுவமும், பெண்களுக்கு ஆடைத் தொழிற்சாலையும் மாற்றுத் தீர்வாக அமையப் போவதில்லை. இவ்விரண்டு தொழில்களும் ஒரே தன்மை வாய்ந்தனவாகவும், உளவியல் ரீதியில் பாதிப்பைத் தரக் கூடியதுமான, சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தும் தன்மையைக் கொண்டவையுமாகும். இந்தக் காரணத்தினால் தான் கொழும்பு மாவட்டத்தை சூழ அமைந்திருந்த பாலியல் தொழில் அமைவிடங்கள், இன்று இராணுவத்தினர் புடைசூழும் மத்திய நிலையமாகப் போய் விட்ட அனுராதபுரத்தையும் சூழ்ந்து கொண்டுள்ளன. இன்று அனுராதபுரம் என்ற பெயரைக் கேட்கும் போது எமது நினைவுக்கு வருபவை இராணுவமும், பாலியல் தொழிலும் தான். எவ்வாறாயினும் இவ்விரண்டுக்கும் இடையில் நேரடித் தொடர்பு உண்டென்பதை அவதானிக்கலாம். அவ்வாறாயின் அவ்விளம்பரங்கள் மூலம் மறைமுகமாகப் புலப்படுத்தப் படும் அர்த்தம் என்ன? இராணுவத்தில் இணைந்து கொண்ட ஒருவருக்கு முதன் முதலில் கிடைப்பது ஆணுறையும் சிகரட்டும் என்பது ரகசியம் அல்ல.

இவ்விளம்பரங்கள் பொதுவாக இராணு வத்தினரைப் பெண்கள் விரும்புகின்றனர் என்பதையும், பெண்களின் மனதைக் கொள்ளை கொள்ள இராணுவம் போன்ற வீரமான தொழில் வேண்டும் என்பதையும் மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக பெண் கள் ஒரு விளம்பரப் பண்டம் என்ற இயல்பையும் இவ்விளம்பரங்கள் வலியுறுத்து கின்றன.

இராணுவத்தின் பிரதான கடமை பிரபாகரனின் இராணுவத்துடன் போரிடுவதாகும். அதேவேளை பிரபாகரனும் தனது தற்கொலைப் போராளிகளை பெண்களை விற்றுத் தான் உருவாக்கினாரா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

சிங்கக் குட்டிகளின் சொர்க்கத்தீவுக்கு வர அழைப்பு தரும் பத்திரிகை விளம்பரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆண்மை கொண்ட கட்டுமஸ்தான ஆண் இராணுவப் பயிற்சியின் மூலமே உருவாகுகின்றான். இவ்வாறான இளைஞர்கள் வீரர்களாகுவது நாட்டைக் காக்கும் சம்ஹாரத்தினாலேயே ஆகும். நீங்களும் சிறந்த வீரராக வேண்டுமாயின்..." என உள்ளது.

இவ்வாறான கவர்ச்சிகரமான விளம்பரங்களைப் பார்த்து விட்டு வேலையற்ற இளைஞர்களும், தொழில் புரியும் இளைஞர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்வார்கள் என சம்பந்தப்பட்டவர்கள் மனப்பால் குடிக்கக் கூடும். அதேபோன்று இளம் பெண்கள் இராணுவச் சிப்பாய்களின் கட்டுமஸ்தான உடலை ( நிகழ்கால எலும்புக் கூடுகள்) பார்த்து மயங்குவர் என எண்ணக் கூடும்.

அவர்கள் எண்ணம் எவ்வாறாயினும், நாம் இங்கு கண்டித்துப் பேச வேண்டியிருப்பது பெண்களை விளம்பரப் பண்டமாக்கி ஆட்சேர்ப்பதைத் தான்!

## நினைவுக் குறிப்புகள் – 16

**கட்சிக்குள் ஒரு பிளவுக்கான நிலைமைகள் மூட்டம் போடத் தொடங்கியிருந்தன!**

இந்த விடயம் தொடர்பான ட்ரொஸ்கிய கண்ணோட்டம் வேறு விதமானதாக இருந்தது. 'காலனித்துவ, அரைக்காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவம் பலவீனமான வளர்ச்சியைக் கண்டிருப்பது என்பது, உண்மையில் அந்த வர்க்கம் பலவீனமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது. அது ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கும் ஒரு நிலையிலேயே வளர்ந்துள்ளது. அத்துடன் அதற்கு நிலப்பிரபுத்துவத்துடனும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடனும் நெருக்கமான உறவும் இருந்து வருகிறது' என்று ட்ரொஸ்கி கருதினார்.

ஆகவே இந்த நாடுகளில் உள்ள முதலாளித்துவ வர்க்கத்தால் ஒரு புரட்சிகரமான பாத்திரத்தை வகிக்க முடியாது. நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும், தேசிய சுதந்திரத்திற்காகவும் போராடும் பொறுப்பு உண்மையில் தொழிலாளர் வர்க்கத்தின் கையிலேயே உள்ளது. ஆனால், இதைச் செய்யும் போது தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ ஜனநாயக குறிக்கோள்களுடன் நின்றுவிட முடியாது. ஆகவே புரட்சி ஒரு போதும் இரண்டு கட்டங்களில் நடக்கும் என்று சொல்ல முடியாது. அதாவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி என்று இரு கட்டங்களில் இது நடக்கும் என்று ஒரு போதும் எதிர்வு கூற முடியாது.

- இது தான் ட்ரொஸ்கியின் 'நிரந்தர புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையிலான அம்சம்.

ல.ச.ச.கட்சி ஏன் ட்ரொஸ்கிசத்தைத் தழுவிக் கொண்டது?

-அடிக்கடி கேட்கப்படும் இந்தக் கேள்விக்கு இலங்கையின் சூழலுக்குப் பொருத்தமான ஒரு அரசியல் தத்துவமாக ட்ரொஸ்கிசம் இருந்தது என்ற அடிப்படையில் இதற்குக் குறைந்தபட்சம் ஒரு பதிலாவது இருக்க வேண்டும்.

இலங்கைப் பூர்சுவாக்களையும், அவர்களது அரசியல் தலைமைத்துவத்தையும் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை நடாத்துவதற்கான அந்த வர்க்கத்தின் பலவீனமான ஒரு ஆர்ப்பாட்டக் குழுவாக ட்ரொஸ்கி கருதியிருக்கலாம்.

இன்று 'தேசிய வீரர்களாக' நினைவு கூரப்படுகின்ற நமது தெருக்களை தமது உருவச்சிலைகளால் அலங்கரித்துக் கொண்டிருக்கிற இவர்களில் யாரும் (தொழிலாளர் தலைவர் ஏ.ஈ.குணசிங்க தவிர) அன்றைய டொனமூர் கொமிசனிடம் சர்வசன வாக்குரிமை தேவை என்று கூடக் கோரியவர்கள் அல்ல.


உண்மையில் பிரிட்டன் தான் அதை இவர்களது தொண்டைக் குழிகளுக்குள் திணித்தது. இலங்கைத் தேசிய காங்கிரசின் அரசியல் வரலாற்றினையும் தேசிய பூர்ஷ்வாக்கள் காலனித்துவப் பொருளாதாரத்தில் கொண்டிருந்த தரகுப் பாத்திரத்தையும், ட்ரொஸ்கிய நிலைப்பாட்டின் அடிப்படையினை உறுதி செய்பவையாக ல.ச.ச.கட்சி கருதியிருக்கலாம். ஆனால், அரசியலையும் பொருளாதாரத்தையும் விட கலாசாரம் எந்த விதத்திலும் குறைந்தளவு முக்கியம் வாய்ந்ததாக இருக்கவில்லை. காலனித்துவவாதிகளது நோக்கங்களுக்கு இலங்கை ஒரு பூரணத்துவம் வாய்ந்த உதாரணமாக விளங்கியது. மக்குலரி அவர்களது பிரசித்திபெற்ற குறிப்பொன்றின் படி தோலின் நிறம் ஒன்றை விட்டால், மற்ற எல்லா அம்சங்களிலும் பிரிட்டிஷ்காரராகவே செயற்படும் தன்மையுடையவர்களைக் கொண்ட ஒரு உள்ளூர் வர்க்கத்தை உருவாக்குவதற்கு இலங்கை மிகவும் பொருத்தப்பாடான நாடாக அமைந்தது. 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரத்தின் குறியீடாக டி.எஸ்.சேனநாயக்க தலையில் தொப்பி அணிந்தபடி சிங்கக் கொடியை ஏற்றிய புகைப்படம், இந்தக் காலனியவாதிகளது நோக்கத்தின் வெற்றிக்கு மிகச்சிறந்த ஒரு அடையாளம் எனலாம்.

இந்த யதார்த்த நிலைமைகள், ட்ரொஸ்கியின் நிரந்தரப் புரட்சியை நியாயப்படுத்தப் போதுமானவையா என்ற கேள்விகளை நான் இந்த நூலின் இறுதி அத்தியாயத்தில் ஆராயலாம் என்று நினைக்கின்றேன். ஆனால், 1941அளவில் ல.ச.ச.கட்சி ஒரு புதிய ட்ரொஸ்கிய வேலைத் திட்டத்தை முன் வைத்தது. இந்த வேலைத் திட்டம் ஏழை விவசாயிகள், தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் நடாத்தும் ஒரு புரட்சியினூடாக, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போன்ற சோசலிசக் குறிக்கோள்களை எய்த முடியும் என்று தெரிவித்தது.

1941இன் ஆரம்ப மாதங்களில் பல மாலை நேரங்களில் நானும் டிக்கி ஆட்டிக்கல, பாலா தம்பு ஆகியோரும் கொழும்பு குதிரைப் பந்தயத்திடலின் ஆள் நடமாட்ட மற்ற ஒரு மூலையில் உட்கார்ந்து ஒரு கல்வி வகுப்பை நடாத்தியது. அந்த வகுப்புக்களில் எஸ்.சி.சி. அந்தோனிப்பிள்ளை - கட்சியின் புதிய திட்டத்தை விளக்கியதும் எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது (இந்த வகுப்பு கட்சி உறுப்பினர்களுக்காக நடாத்தப்பட்ட ஒரு உயர்மட்ட வகுப்பாகும். நான் முன்பு கலந்துகொண்ட வகுப்புகளை விட இது உயர்மட்டத்திலமைந்த ஒன்றாகும்.)

பாரிய தொழிற்துறைகள் எதுவும் வளர்ச்சி பெறாததும் தொழிலாள வர்க்கம் ஒரு சிறுபான்மை வர்க்கமாக உள்ளதுமான முதலாளித்துவ வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிராத ஒரு நாட்டில் தொழிலாள வர்க்கத்தினால் ஒரு சோசலிசப் புரட்சியைச் சாதிக்க முடியுமா? ல.ச.ச. கட்சி கொழும்புத் தொழிலாள வர்க்கத்தைத் தவிர மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தது.

பொருளாதாரத்தில் தோட்டத் தொழிலாளர் கொண்டிருந்த முக்கிய பாத்திரம் தமது வேலை இடங்களைச் சுற்றி அவர்கள் செறிவாக வாழ்ந்து வந்தது. தென்னிந்தியாவில் இருந்த தமது கிராமத் தொடர்புகளிலிருந்து




**தலைமறைவு வாழ்க்கை**
றெஜி சிறிவர்த்தன

அவர்கள் முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தது, மற்றும் அவர்களிடம் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் சொல்லப்பட்டது போல 'இழப்பதற்கு அடிமைச் சங்கிலியை விட வேறெதுவும் இல்லாமல் இருந்தது' என்பவற்றால் அவர்கள் பாட்டாளி வர்க்கத்தினராக கொள்ளப்படலாம் என்று கருதப்பட்டது. பின்னாளில் வந்த சில மார்க்சியவாதிகள் கண்ணோட்டத்தில் அவர்கள் முழுமையான பாட்டாளி வர்க்கத்தினராகக் கொள்ளப்பட முடியாது என்று கூறினர்.

தோட்டத் தொழிலாளர்கள் ம்மை சுதந்திரமான கூலி உழைப்பாளிகளாக இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை என்றும், தமது உழைப்பைச் சுதந்திரமாக விற்கும் நிலைக்கு அவர்கள் வரவில்லை என்றும், அவர்கள் இன்னமும் தோட்டங்களின் கட்டுப்பாட்டிலுள்ள உழைப்பாளிகளாகவே இருந்தனர் என்றும், அவர்கள் விவாதித்தனர். எது எப்படி இருப்பினும், ல.ச.ச. கட்சியின் கருத்து வேறாக இருந்தது. அதன் 1941 ஆம் ஆண்டுத் திட்டத்தின்படி தோட்டத் தொழிலாளர்கள் வரவுள்ள சோசலிசப் புரட்சியில் முக்கியமான பாத்திரத்தை ஆற்றுவார்கள் என்றே கருதப்பட்டனர்.

இருந்தும், இலங்கைத் தொழிலாள வர்க்கம் - நகர்ப்புற மற்றும் தோட்டப்புற தொழிலாளர் வர்க்கம் தனியாகப் பிரித்தானிய ஆதிக்கத்தை ஒரு புரட்சி மூலமாக வென்றுவிட முடியுமா என்ற கேள்வி எழவே செய்தது. இந்தச் சந்தேகம் காரணமாகத் தான் ல.ச.ச.கட்சி 1941இல் பல்வேறு இந்திய நகரங்களில் சிறு குழுக்களாகச் சிதறிப் போயிருந்த இந்தியத் தொழிலாள வர்க்கத்தை - அவர்கள் முதலிலேயே ட்ரொஸ்கிய நிலையே எடுத்திருந்தார்கள் - ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கியது.

இந்தியாவின் போல்ஸ்விக் - லெனினிஸ்ட் கட்சிக்கான கருக் குழுவாக அமைந்தது இது தான். இந்தியா, இலங்கையைவிட பல மான முன்னேறிய தொழில்துறையைக் கொண்ட பல நகரங்களைக் கொண்டிருந்ததெனினும், அதுகூட ஏகாதிபத்திய எதிர்ப்பும் தேசியவாத தன்மையும் கொண்ட எழுச்சிக்கான தயார் நிலையில் தான் இருந்தது.

இந்த நம்பிக்கைகளும் எதிர்ப்புகளும் மத்தியில், கட்சியில் ஒரு உடைவுக்கான நிலைமை உருவாகியிருப்பதைப் புரிந்து கொள்ளாமலே 1942ம் ஆண்டுக்குள் கட்சி காலடி எடுத்து வைத்தது!

**(வரும்)**

## நிச்சயமான எச்சரிக்கை

இந்த கருமையான இருளில் எல்லோரும் தூங்கியுள்ளார்கள்
நீ கேள்
தொலைந்து போன நிசப்தத்தில்
இரண்டு கண்களும் அதைச் சுற்றி நூறு கண்களும் முகமில்லாமல்
பேசுகின்றன
பலவற்றை நிச்சயப்படுத்தும் எச்சரிக்கை
கேள்

தலைக்கு மேல் கழுகுகளும் தலைகீழாகத் தொங்கிய படி
இறந்து போன வௌவ்வால்களும்
நாளை அடிச்சுவடு இல்லாமலே அழிந்து போகலாம்

ஆகையால்
இப்போதே அந்த மீசையின் கருமையையும் மார்புகளின் வளைவுகளையும்
பூச்சட்டையின் பூக்களின் நிறங்களை எல்லாம் மறந்துவிட்டு
கேள்

பாதுகாப்பில் அடைக்கப்பட்ட சிறுவர்கள் எரிக்கப்பட்டதும்
எதுவுமே மிஞ்சாத கருகிய காற்றில் வலிமட்டுமே விடையாய் விம்மியபடி
அருகே இல்லாமல் எதையுமே பார்க்காமலும்
தலைக்குள் நூறு இரைச்சல்கள்
கேள்

கண்கள் பிடுங்கப்பட்ட சிறைச்சாலைகளும்
விரல்கள் வெட்டப்படும் வதைமுகாம்களும்
மனிதர்களை நுரையாய் கக்கிய கடலும்
புதைகுழிக்குள் விதைத்திருந்த மண்டையோடுகளும்
புழுதி மண்ணுக்குள் இரத்தவெறியாட்டம்

அறிந்து கொள்

ஒவ்வொரு சவுக்கடியின் முடிவிலும் தான்
ஆதிக்கம் எக்காளமிட்டு கையொப்பம் வாங்கி தெரியாமல் போனது

இறக்காமலே புதைக்கப்பட்ட இடத்தில்
முளைத்தது எல்லாம் கள்ளிச் செடி தான்
புன்னகையுடன் கைகுலுக்கியவர்கள்
மறைத்து வைத்திருந்த கத்திகளில் தான் இரத்தம்
இது போல் நூறு எச்சரிக்கைகள்
பலவற்றை நிச்சயப்படுத்தி காதைக்கிழிக்கும் இரைச்சல்கள்

இரண்டு கண்களும்
அதை சுற்றி நூறு கண்களும் பலவற்றைப் பேசுகின்றன

எதிரே வந்த காற்றில் மோதி முறிந்த நம்பிக்கையுடன்
எதிரொலித்து மடிந்தது மரணம் மட்டுமல்ல
நீ சொல் பலமாக
திசை தேடிய எம் விடுதலையும் தான் என்று

பாமதி
அவுஸ்ரேலியா

## கனவுகளின் துயரம்

எல்லாம் இழந்த பின்னும் இன்னும்
ஏதோ ஒன்று இழக்க இருப்பதாகத் தோன்றுகிறது.

நம்பிக்கை மிக்க வினாடியும்,
வேதனை மிக்க நிமிடமும் போட்டி போட்டுக் கொள்ளும்.
இனிய மாலையை தின்று விடும் கழுகுகள் அச்சமூட்டி
இன்னும் மிரட்டியபடியே இருக்கின்றன.

மடி நிறைய மீன்களின் ஆசையில்-
மீனவப் பெண்ணின் வாழ்க்கை கந்தக வெடியில் தொலைந்து போயிற்று.
மூக்குச் சளி வழியும் பரட்டைத்தலைப் பச்சைப்
பெண்ணுக்கு ரிபன் வாங்க இனி என்ன தான் வழியோ?

நாங்கள் மிக நீண்ட காலமாகத்தான் ஆசைப்படுகின்றோம்.
ஒரு வேளை நிறையுணவிற்காக-
ஒரு புத்தம் புதிய ஆடைக்காக-
ஒரு பிலா நுரை ததும்பும் பனங்கள்ளுக்காக-
ஒரு நிம்மதிப் பாடலுக்காக-

குதியில் குத்திய மரக்காரை முள்ளாய்
எஞ்சிக் கிடப்பன வெறும் வேதனைகளே
பாழ் வெளியெங்கும் குருதி சுமந்த கனவுகளின் துயரம்
எல்லாவற்றுடனும் எல்லாமும் கலந்து கடந்து போய் விடுகின்றனவா?

திசை அற்ற துயர்களின் முடிவினை மாற்ற இனி எவர்களினதும்
மௌனத்தை மரணம் வென்று
நீண்ட நாளாய் விட்டது போலப் படுகின்றது.

நாம் அஞ்சுகின்றோம்-
அஞ்சி அஞ்சி மிருதியாய் கிடைக்கப் போவது என்னவென்று தெரியாமல்.
என்றைக்கும் இந்த வாழாமை பற்றிய பாடல்களுடன்,-
வாழ்வது வெறுப்பைத் தானே
தந்து கொண்டு இருக்கின்றது.

பளை கோகுலராகவன்
19.12.2000

நன்றி - நூலகத்திட்டம்





திரைப்படங்களில் பெண்கள் நடிப்பதோடு தயாரிப்பு மற்றும் ஏனைய தொழில்நுட்பத் துறையில் செயல்பட முடியாது என்பதை மாற்றி ஸ்ரீபிரியா, லட்சுமி, சுமித்ரா, பி.ஆர்.விஜயலட்சுமி, சுகாசினி போன்றோர் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அந்த வரிசையில் எண்பதுகளில் படங்களில் நடித்துக் கொண்டு, தயாரிப்பாளராகவும், இயக்குனராகவும் சிறப்பாகச் செயல்பட்டவர் ஜெயதேவி. கொஞ்சக் காலங்களுக்குப் பின் மீண்டும், வேலு பிரபாகரன் இயக்கத்தில் கதை, வசனம் எழுதியிருக்கிறார். மருத்துவமனையில் கால் சிக்கைச்சாக அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரைச் சந்தித்து உரையாடியதிலிருந்து.....

சினிமாவில் பெண்கள்

# தொழில்நுட்பத் துறையில் ஆர்வம் காட்டினால் சிரிப்பார்கள்!

- ஜெயதேவி

“எனக்கு எல்லாவற்றையும் ஏககாலத்தில் கற்றுக் கொள்ளணும் வெளிப்படுத்தணும் என்கின்ற ஆசை எப்பவும் உண்டு. என்னோட ஆசை ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பரதநாட்டியம் கற்றுக் கொண்டேன். மூன்றே வருஷத்தில் பரத நாட்டியப் பயிற்சியை முடிச்சுக்கிட்டு நானே நிகழ்ச்சிகள் கொடுக்க ஆரம்பிச்சேன். ஓரளவுக்கு நல்லா செய்தேன் என்று தான் நினைக்கிறேன். வைஷாலி நாட்டில் வாழ்ந்த, முதன் முதலில் புத்த மதத்தில் சேர்ந்த அம்பாபாலி என்ற பெண்ணைப் பற்றி 'புத்தா' என்கிற நாட்டிய நிகழ்ச்சியை நடத்தினேன். அப்போ அது நன்றாகப் பேசப்பட்டது. அதனைத் தொடர்ந்து என்னோட அனுபவம், அனுபவமின்மை எல்லாம் சேர்ந்து எனக்கு நானே அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்கிற சமுதாயம் சம்பந்தப்பட்ட நாட்டிய நாடகங்களை நடத்தி வந்தேன்.

1978 ல் ஜனாதிபதி விருதோடு நிறைய விருதுகளும் வாங்கிட்டேன். ஆனால் என்னோட நோக்கம் இயக்குனராக வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. நேரடியாக ஒரு பெண் தொழில் நுட்ப துறையில் ஆர்வம் காட்டினால் எல்லோரும் சிரித்து விடுவார்கள் என்று நினைத்தேன். அதுவே உண்மையாகவும் இருந்தது. அதனால் நடிக்க ஆரம்பித்தேன். நடித்துக் கொண்டிருக்கும் போதே அதோடு சேர்த்து செட், கேமரா, தயாரிப்பு என்று சினிமாவில் நான் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

*தமிழ் சினிமாவுக்கு நோய் வந்து முத்திப் போய் கிடக்கு. அதனால மருத்துவர் தேவை கட்டாயம் வேண்டியிருக்கு.*

என்னோட தயாரிப்பின் முதல் முயற்சியான 'மற்றவை நேரில்' திரைப்படம் நூறு நாள் ஓடியது. மௌலி அந்தப் படத்தை இயக்கியிருந்தார். அந்தப் படத்தில் நான் நடிக்கவும் செய்திருந்தேன். அடுத்து 'வா இந்தப் பக்கம்' படத்தைத் தயாரித்தேன். அதில் இப்போது பிரபலமாகயிருக்கிற பி.சி.ஸ்ரீராமை ஒளிப்பதிவாளராக அறிமுகப்படுத்தினேன். அது தான் நான் கடைசியாக நடிச்ச படம்.

'நன்றி மீண்டும் வருக', 'ஒரு புல்லாங்குழல் அடுப்பூதுகிறது' இப்படி அடுத்தடுத்த தயாரிப்பில் என்னோட இருபத்தைந்து வயதுக்குள் திரைப்படத் தயாரிப்பு அனுபவத்தைக் கற்றுக் கொண்டேன். 'நலம் நலமறிய ஆவல்' நான் இயக்கிய முதல் படம். 'விலங்கு' ஒரு சண்டைப் படம். அடுத்து உண்மையாய் ஒரு கதையைச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. சட்டத்தில் எவ்வளவு ஓட்டைகள் இருக்கு. அதை ஒருத்தன் தனக்கு எப்படியெல்லாம் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதை 'விலாங்கு மீன்' படத்தில் சொன்னேன்.

நான் ஒரு சோதனை முயற்சியாய் இயக்கிய படம் 'பாசம் ஒரு வேஷம்'. இது வெறும் ஐந்து லட்சம் ரூபாய் பட்ஜெட்டில் ஐந்து நாளில் எடுத்து முடிக்கப்பட்ட படம். பெண் என்பவள் தீக்குச்சி மாதிரி. தீக்குச்சி பார்க்கிறதுக்குத்தான் சிறுசா இருக்கும். ஆனால் அதை வைச்சு ஊரையே கொளுத்தலாம் என்பதைச் சொன்ன கதை அது. அந்தப் படத்தில் பெரியாரின் பெண்ணுரிமைப் பார்வையோட, பெரியாரே ஒரு கதாபாத்திரத்தில் வருவதாக அமைந்திருக்கும். அந்தப் படத்திற்காக அதில் நடித்த நாசர், ரஞ்சனி எல்லோரும் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். ராத்திரி இரண்டு மணிக்கு முடிகிற படப்பிடிப்பு மறுபடியும் ஆறு மணிக்கு ஆரம்பித்து விடும். ஐந்து நாளில் எடுக்கிற படம் ஐந்து நாள் மட்டும் கூட ஓடினால் போதும் என்று நினைத்திருந்தேன். ஆனால், என்னுடைய பட்ஜெட்டைத் தாண்டி இரண்டு லட்சம் ரூபாய் கூடுதலாக லாபம் கிடைத்தது.



என் சொந்த ஊரான காரைக்குடியில் சின்ன வயதில் கோயிலில் கிடைக்கும் சுண்டல், பிரசாதத்திற்காகத் தேவாரம், திருவாசகம் படிச்சு மனப்பாடமா சொல்வேன். கடவுள் இருக்கிறார். இல்லை. இப்படி கடவுள் பற்றிய எந்த எண்ணமும் கிடையாது. பெரியாரோட கொள்கை எதுவும் அப்போது எனக்கு ஆழமாகத் தெரியாது. ஒரு சமயம் பெரியாரைப் பற்றி படிக்கக் கிடைத்தது. பெரியாரை படித்த பின்பு நானே மாறிப் போயிட்டேன்னு தான் சொல்லனும்.

பெரியார், மார்க்சிசம், டால்ஸ்டாய்ன்னு பத்து வருசமா வேறு வேலை எதையும் செய்யாம படிக்க மட்டும் செய்தேன். ஒரு பெண்ணாக இந்தச் சமூகத்தில் சந்திக்க வேண்டிய பிரச்சனை என்ன? சமூகத்தில் என்ன நடந்திட்டிருக்கு? வீடில்லாமல், உடுத்த நல்ல துணியில்லாமல் எத்தனை பேரு தெருவோரமா வாழ்ந்திட்டிருக்காங்க. அதை விட்டுட்டு சாதி, மதம், கலாசாரம்னு வீணாய்ப் பேசிக் கொண்டிருக்கிறோமே என்பதைச் சிந்திக்க வைத்தது படிப்பு.

பெண்கள் சினிமாவில் அதிகாரம் செலுத்த முடியாது என்பதில் உண்மையில்லை. எந்த இடத்தில் அந்தப் பிரச்சனை இல்லாமல் இருக்கு? பெண்கள் என்றாலே சமூகத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கணும்னு நினைக்கிறாங்க. சில உணர்வுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் சிலவற்றை இழந்து தான் ஆகணும். அந்த இடத்தில் பெண்கள் தமக்குள்ள உரிமையையும், மரியாதையையும் சரியா வெளிப்படுத்தியாகணும். அதை விட்டுட்டு நான் இங்கே வரவே மாட்டேன்னு ஒடக் கூடாது.

சமுதாயப் பிரக்ஞையோட செயல்பட வேண்டிய பொறுப்பு தொலைக்காட்சி, பத்திரிகை, சினிமா இவை மூன்றுக்குமே உண்டு. அப்படிப்பட்ட உணர்வோட, சென்சாரைத் தாண்டி வெளிவந்த படத்தை இவங்க தட்டிக் கொடுத்துப் பாராட்டுவதில்லை. எங்களுக்கு வேற மாதிரி படம் எடுக்கத் தெரியாதா? இந்த மீடியாக்களெல்லாம் பொறுப்பை உணர்ந்து செயல்படணும். இன்னிக்குக் குடும்பத் தலைவிகள் நம்மைப் பற்றித்தான் மோசமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியாமல், யாரோட கஷ்டத்தையோ சொல்றாங்கன்னு தொலைக்காட்சி முன்னாடி உட்கார்ந்திட்டிருக்காங்க. அப்படி உட்கார வச்சிருக்கு டி.வி.

'புரட்சிக்காரன்' படத்தின் கதை, திரைக்கதை, வசனம் ரொம்ப நாள் கழிச்சு நான் முழு மனசோட செய்த வேலை. படம் ஒரே பிரச்சாரமா இருக்குன்னு சிலர் சொல்கிறார்கள். அப்படி நீங்க சொன்னால் எனக்கு அதைப் பற்றி அக்கறையில்லை. கல்லுக்கு உணர்விருக்கு என்று சொல்லிப் படம் முழுக்கக் கடவுள் கடவுன்னு பின்னாடியே அலையுறாங்க. அது உங்களுக்குப் பிரச்சாரமாகத் தெரியவில்லை. ஆனால், நாங்க ரத்தமும் சதையும் உள்ள ஒரு மனிதனுக்கு உணர்விருக்குன்னு சொன்னால் அது பிரச்சாரமா?

தமிழ் சினிமாவில் முன்னணியில் இருக்கின்ற ஒரு கதாநாயகன் தன்னைக் கடவுளாகக் காட்டிக் கொள்கிறார். அதுவும் உங்களுக்குப் பிரச்சாரமாகத் தெரியல. எம்ஜி.ஆர் எந்தப் படத்திலயாவது தன்னை அந்த மாதிரி காட்டிக் கொண்டிருந்திருக்கிறாரா? அவர் இன்னமும் எத்தனை பேர் மனதில் அழியாமல் இடம் பிடிச்சிருக்குறாரு.

தற்சமயம் தமிழ் சினிமாவுக்கு நோய் வந்து முத்திப் போய் கிடக்கு. அதனால மருத்துவர் தேவை கட்டாயம் வேண்டியிருக்கு. அதை நீங்க பிரச்சாரம் என்று சொன்னால் சொல்லிட்டுப் போங்க. மாற்றத்திற்கான சிறு முயற்சி தான் இது. அதோட எல்லை எவ்வளவோ விரிஞ்சு கிடக்கு. அந்த எல்லையை நோக்கி நாங்கள் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம்''.

சந்திப்பு : சந்திரா

நன்றி: ஆறாம்திணை

## வரலாற்றை ஆவணப்....

எமது மண்ணைப் பறித்து தமிழர்களைக் கொன்று குவித்து வரும் சிங்கள இனவெறிப் போராட்டத்தில் பங்கு பற்றிய பலர் இன்று எமக்குப் போராட உரிமை இல்லை எனவும் எமக்கு நாடே இல்லை எனவும் விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எழுதுவதன் நோக்கம் இதைப் போன்ற பலரும் தமக்குத் தெரிந்த தம்முடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை தம் மனதுடன் சாகவிடாமல் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். அவை வரலாற்று ஆவணமாகப் பதிவு செய்யவும்பட வேண்டும். நான் கூறிய இந்த விடயங்கள் பெரியளவில் எமது போராட்ட வளர்ச்சியில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தா விட்டாலும் எமது போராட்ட வரலாற்றில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களாகும். இவை இன்று மறக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் எல்லாமே திரிபுபடுத்தப்பட்டும் புலிகளின் வரலாறு மட்டுமே தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறாகவும் எம்மீது திணிக்கப்பட்டு வருகின்றது.

உதாரணமாக, அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் போன்றவர்கள் துரோகிகளாகவும் அவர்களின் பங்களிப்பில் ஒரு வீதத்தினையும் செய்யாத குமார் பொன்னம்பலம் போன்றவர்கள் புலிகளுக்குத் துதிபாடியதற்காக மட்டுமே மாமனிதராகவும் மாறும் புதிய வரலாறு எழுதப்பட்டு வருகின்றது. அவர்களுக்கே இந்த நிலைமை என்றால் ஆயுதம் தூக்கிப் போராடிய அன்றைய இளைஞர் பேரவை உறுப்பினரிலிருந்து இன்று பல விடுதலை இயக்கங்களில் தம்மை அர்ப்பணித்து சிங்கள இனவாத அரச இயந்திரங்களுக்கு எதிராக எதிர்த்துப் போராடி உயிர் நீத்த ஆயிரக்கணக்கான போராளிகளின் நிலைமை என்னவாகும்?

இதை விட தமது தலைமைகளைக் காப்பாற்றுவதற்காக பல இயக்கங்களின் தலைமைகள் தமக்குள் நடத்திய படுகொலைகள் புலிகளினால் மற்ற இயக்களின் மீது நடத்தப்பட்ட வெறித்தனமான தாக்குதலில் உயிர்நீத்த போராளிகள் என்று பலரும் மறக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு எமது விடுதலைப் போராட்டத்தில் கறைபட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. இவை வரலாற்றுப் பதிவுகளாக எழுதப்பட வேண்டும். எந்தளவு போராளிகள் உயிர் நீத்தார்கள் என்று கூடத் தெரியாத நிலை தான் உள்ளது. இதில் கூட மற்றைய இயக்கங்களில் எந்த விதமான பதிவுகளும் இல்லாத நிலையில் இயக்கம் நடத்துகின்றார்கள். இதற்கு முன்னோடியாகத் தான் இதைப் பதிவு செய்கின்றேன். இந்தப் பதிவு என்னைப் போல பலரையும் எழுத வைக்கும் என்ற நம்பிக்கையில் இதை முடிக்கின்றேன்.

(முற்றும்)

நன்றி - நூலகத்திட்டம்



# கொலைகாரர்கள்

ஆகக்கூடியது பன்னிரண்டோ, பதின்மூன்றோ வயதுதானிருக்கும் அவனுக்கு.

கவனிக்காமல் வளர்ந்து அழுக்குப் படிந்த தலைமுடி மெலிந்த தோற்றம் ஆனால் கண்கள் மட்டும் துருதுரு-வென்றிருந்தது.

இவன் யார்... எங்கேயோ பார்த்த ஞாபகம்.... எங்கே... ஞாபகத்தில் இல்லை... ஆனால், பார்த்திருக்கிறேன்.

வெளியில் பெய்து கொண்டிருக்கும் மழையும், இடைக்கிடையே கேட்கும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் அவனை எந்தவிதத்திலும் பாதித்திருக்கவில்லை போலும். கவலை மறந்து ஹாஜியார் கடை சூப்பை ருசித்துக் கொண்டிருந்தான். அவன் அந்த சூப்பிற்குள் உள்ள காலெலும்பை பௌவியமாக எடுத்து வாயில் வைத்து உறிஞ்சி உடலட்டையை இழுத்து ருசிப்பது முடிவுற்றதும் எலும்பைத் தூக்கிப் போடுவதும் சினிமாவில் பண்ணையாரின் மகளை மணமுடிக்க, பாய்ந்துவரும் காளையை அடக்க முடியாமல் வில்லன் களைத்துப் போக, கதாநாயகன் மிக எளிதாய் தன் இடுப்பில் கட்டியிருக்கும் துண்டைக் கொண்டு அந்தக் காளையை எளிதாய் மடக்கி நிலத்தில் வீழ்த்துவது போலிருந்தது.

இவன் யாராய் இருப்பான்... சின்ன வயது... இருண்டுபோன வேளையில் தனியனாய் வந்து சாப்பிடுவதென்றால் யாராயிருக்கலாம்.

சூப் குடிப்பதில் மனம் போகவில்லை எனக்கு. யார் இவன்...

அவனைக் கேட்கலாமா...

அவன் பதில் சொல்ல விரும்பாவிட்டால்....

நான் யாராயிருந்தால் உனக்கென்ன என்று கேட்டுவிட்டால்...

சீச்சீ... அவன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை.

ஏன் எனக்கு அவன்மீது இப்படியொரு மையல். பரிதாபமா... அனுதாபமா... அக்கறையா... ஏதுமில்லையா... இல்லையில்லை ஏதோவொன்று.

அவன் காரியம் முடிந்துவிட்டது. கடைக்காரன் கேட்ட பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டு வெளியேறினான்.

மழை நிற்கவில்லை. தூறல் மழை. எனக்கேனோ தூறல் மழையில் நனைந்தால் தடிமல் வந்துவிடும். அவனுக்கு..

"போவமா." நடா என்னிடம் கேட்டபோது நான் சூப் குடித்து முடித்திருக்கவில்லை. குடிக்க வேண்டும் போலிருக்கவுமில்லை.

வீட்டுக்குப் போனதும், அவன் முகம் இடைக்கிடை வந்து போனது.

ஒரு நாள்... இரண்டு நாள்... எல்லா நினைவும் மறந்து போய்விட்டது அவனைப் பற்றி.

மீண்டும் அரசடி டிஸ்கோ ஹோட்ட-லடியில் தான் அவனைக் கண்டேன்.

மாலை நேரம் பிளேன்ரீ குடிக்க இலியாஸ் அழைத்த போது மறுக்க முடியாமல் ஹோட்டலுக்குச் சென்று வெளியேறும் போது அவனை யாரோ விசாரித்துக் கொண்டிருந்தான்.

"வீட்டுல வேலை செய்வியா"

"ஓம்."

"இப்படித்தான் எல்லாரும் சொல்லுவியள் பிறகு வர மாட்டியள்"

"இல்ல நான் வருவன்"

"அப்படித்தான் வந்தாலும் ரெண்டு நாளையில் எதையெண்டாலும் தூக்கிக் கொண்டு ஓடிருவியள்"

அவன் மௌனமானான். தொடர்ந்து பேச விரும்பவில்லைப் போலிருந்தது அவன் மௌனம்.

அவன் ஒரு பிச்சைக்காரனா...

சீ.. அப்படியிருக்கக் கூடாது. அப்படியென்றால், இவனை விசாரித்துச் சென்றவனிடம் என்ன கேட்டிருப்பான்...



பணமா... ஏன்... எதற்கு...

இவன் அன்றாடம் பிச்சையெடுத்துத் தான் பிழைப்பவனா... அப்படியென்றால் பிச்சையெடுத்த காசில்தான் அன்று சூப் குடித்தானா... இந்தச் சின்ன வயசில் இப்படி... வேதனையாயிருந்தது.

அவன் என்னிடம் வருகிறான்.

"அஞ்சு ரூபா காசு தாங்களன் சாப்பாடு வாங்க"

எனது நெஞ்சில் இடி விழுந்தது போலிருந்தது.

சின்ன வயசில் பிச்சையெடுத்துச் சாப்பிடும் துர்ப்பாக்கியம் ஏன் இவனுக்கு... அஞ்சு ரூபா பிச்சை கேட்டதற்குத்தானா அவ்வளவு விசாரணை விசாரித்தான் அவன். விசாரணை மூலம் இந்தச் சிறுவனின் மனதை ரணப்படுத்துமளவுக்கு இவன் என்ன கேட்டுவிட்டான். விசாரித்தவனை நாலு கேள்வி கேட்க வேண்டும் போலிருந்தது.

இவன்ர அம்மா அப்பா எங்கே... அறிய வேண்டும் போலிருந்தது எனக்கு.

"உன்ர பேரென்ன"

"கண்ணன்"

பாரதியின் எங்கிருந்தோ வந்தான் கண்ணனா... இவன் எந்தச் சாதி... அகதியா... அனாதையா... கைவிடப்பட்டவனா...

"உனக்கு அம்மா அப்பா இல்லையா"

"இல்லை"

"ஏன்"

"அப்பா தொண்ணூறாமாண்டுப் பிரச்சினைக்குள்ள செத்திட்டாரு"

"எப்படி"

"தொண்ணூறாமாண்டுப் பிரச்சினை தொடங்க நீலாவணையில இருந்து வெளிக்கிட்டு தேத்தாத்தீவு வேதக் கோயிலில வந்திருந்த நாங்க. ரெண்டு மூணு நாளையில வீட்டப் பாக்கெண்டு போன அப்பாவ சுட்டுப் போட்டாங்க."

"அப்ப அம்மா எங்க"

"அம்மா அதுக்கு முதல்' வருத்தத்தில செத்திட்டா" எந்தவிதப் பிடிப்புமில்லாமல் பதில் சொன்னான்.

"இப்ப எங்க இருக்கிறா"

"கல்லடியில கோயில்காரான்ர வீட்டுல"

"யாரோட"

"அப்பப்பாவோட"

"அவர் என்ன செய்யிறார்"

"பிச்சை எடுக்கிறவர்"

அவர் உண்மையிலேயே அவனது அப்பப்பா உறவினரல்ல. அவருடைய வயதைக் கொண்டு தான் அவன் அவரை அப்பப்பாவென்று அழைக்கிறான் என்பது பிறகு தான் தெரியவந்தது.

அவரது மனது எல்லாருக்கும் வராது. பிச்சை எடுத்துச் சீவிக்கும் நிலையிலும் யாரோ ஒருவனுக்கு அடைக்கலம் கொடுத்து வச்சிருக்கும் மாபெரும் மனசு.

"நீ பள்ளிக்கூடம் போறல்லையா"

"மூண்டாம் வகுப்பு வரையும் போனனான். பள்ளி விட்டுப் போகக்குள்ள வலிப்பு வந்து ரோட்டுல விழுந்ததால காலில பெரிய காயம். மூண்டு மாதத்துக்கு மேல பள்ளிக்கூடம் போகல்லெண்டு இடாப்புல பேர வெட்டிப் போட்டாங்க"

இதையும் சாதாரணமாகவே சொன்னான். எந்த இழப்பும் அவனுக்குப் பெரியதாகத் தெரியவில்லை போலிருந்தது அவன் பதில்.

பையிலிருந்த பத்து ரூபாவை அவனுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றேன்.

வீட்டுக்குச் சென்றதும் மீண்டும் மீண்டும் அவன் முகம் வந்து போனது.

ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று நாள்... எல்லா நினைவும் மறந்து போய்விட்டது அவனைப்பற்றி.

000

மாலைவேளை இருள் கவ்வியிருந்தது வஞ்சகமில்லாமல். அவசரமாக மோட்டார் சைக்கிளை முறுக்கிக் கொண்டு வந்த நான் சிவானந்தா கிறவுண்டுக்கு முன்னால் இருக்கிற பொலிஸ் காவலரணுக்கு காவலாப் போட்ட ஸ்பீட் லிமிற்றில மோட்டார் சைக்கிளை சிலோவாக்கி எடுக்கும் போது தொருவோரத்திலிருந்த அவன் கை நீட்டினான்.

அவன் தான்.

நான் அடிக்கடி சந்திக்கும் அவன்.

நன்றாகக் களைத்திருந்தான்.

அழுக்குப் படிந்த உடை... முகமும் நன்றாக வாடி ஒட்டிப் போயிருந்தது.

"அர றாத்தல் பாண் வாங்க காசி தாங்களன் ராவைக்குச் சாப்பாடில்ல"

கதைப்பதற்குக்கூட பலமில்லாமல் இருந்தான். ஒழுங்காகச் சாப்பிட்டு பல நாளாயிருக்க வேண்டும்.

"இவ்வளவு நாளும் எங்க போன நீ கன நாளாக் காணல்ல"

"அப்பப்பா செத்திட்டாரு அங்கதான் நிண்ட நான்."

ஐயோ ..ஆதரவாயிருந்த அப்பப்பாவும் செத்தால் இவன்ர நிலை...

ராஜாத்தி

எனக்கு வேதனையாய் இருந்தது.

"உன்ன ஏதாவது கொஸ்டல்ல சேத்துப் படிக்க விட்டா படிப்பியா"

நன்றி - நூலகத்திட்டம்



"ஓ சேத்து விடுங்க"

எனக்குப் பதில் சொன்னபடியே பின்னால் வந்த சைக்கிள்காரனிடம் காசுக்காய் கையை நீட்டினான்.

அவனுக்கு இப்போ படிப்பைவிட பசிக்குச் சாப்பாடு தான் முக்கியமாயிருந்தது.

அவனை அழைத்து கேட்ட காசைக் கொடுத்து விட்டு வீட்டுக்குச் சென்றேன்.

அவனைப் பற்றிய நினைவுகள் அடிக்கடி வந்து கவலைப்படுத்தியது.

ஒரு நாள் இரண்டு நாள்... மூன்று நாள், நான்கு நாள்... அவனைப் பற்றிய எண்ணங்கள் அழிவதாக இல்லை.

0 0 0

இன்றைக்கு அவனை எப்படியாவது சந்தித்து இறுதி முடிவெடுக்க வேணும். ஒன்றிரண்டு கிழமையென்றாலும் வீட்ட வைத்திருந்து போட்டு ஒரு நல்ல இடத்தில சேர்த்து விட வேணும்.

அவன் சொன்ன கோயில்காராள்ற வீடு பூட்டியிருந்தது. இரண்டு மூன்று நாளைக்கு மேலாக அந்த வீட்டில் யாரும் நடமாடிய அடையாளங்கள் இல்லை. அயலவருக்கும் அவன் எங்கே போனான் என்பது தெரிந்திருக்கவில்லை.

அவனைக் காணவில்லை. எங்கே போயிருப்பான்... என்னவானான்... அவனும் காணாமற் போனவர்களில் ஒருவனா... இருக்கிறானா இல்லையா... நெஞ்சு படபடத்தது.

அவனைக் காணாமற் போகச் செய்தவர்கள் யார்...

அவனது அப்பாவைச் சுட்டவனின் முகமும்...

இடாப்பிலிருந்து பேரை வெட்டி சிறுவயதில் அவனது படிப்பைக் கெடுத்தவனின் முகமும்...

வீட்டுக்கு வேலைக்கு வாவென்று விசாரித்து விட்டுச் சென்றவனின் முகமும்... என் முன்னே வந்து போனது...

... அவர்களுடன் நானும் கோர முகத்துடன்.

◈

# முறையிட்டவர் யார்?



கடவுளர்களின் உலகம்
வேண்டுதல்களால் அதிரத் தொடங்கியது
எப்பொழுதுமே மௌனமாக இருக்க முடியும்
என்று எண்ணியிருந்தவர்களின் எண்ணத்தில்
மண் விழுந்தது.
இதயத்தில் துயரமும்
கண்களில் இரத்தமும்
வார்த்தைகளில் இரக்கமும்
நடையில் தளர்வும் தாங்கி மனிதர்கள்
கடவுளே இவ் யுத்தத்தை நிறுத்தித் தாருங்கள்
எமது பிள்ளைகளை உயிர்ப்பித்துத் தாருங்கள்
என்று மன்றாடிய பொழுதும்
உறைந்திருந்த தெய்வங்களுக்கு இன்று முடியவில்லை.

தாங்கள் உண்மையான துன்பத்திற்கு உள்ளாவதாக
அவர்கள் முறையிட்டனர்
இதயம் படபடப்பதாக கூறினர்
தூக்கம் பயங்கர கனவுகளால் நிரம்பி வழிவதாக
அறிக்கையிட்டனர்
ஊழிக் காலத்தின் முடிவில் மட்டுமே இருக்கக் கூடிய
அச்சத்தில் தவிக்கலாயினர்
எந்தச் சொற்களுக்கும் எந்தக் கொடுமைக்கும் அஞ்சாது
தாம் கட்டிய இராச்சியம்
அந்தச் சாத்தானின் வார்த்தைகளில் தகர்ந்து விடுமோ என
அஞ்சி அழுதனர்.

கடவுளர்கள் கண் திறந்தனர்
கட்புலனாகாத சூனியமாக விருந்த தங்களுக்கு
மாட மாளிகை கோபுரங்கள் பள்ளிகளிலும்
தூப தீபங்கள் விகாரைகளிலும்
சிலுவை சிற்பங்களிலும்
வாழ்வு தந்தவர்களின் வழித்தோன்றல்கள் கேட்கையில்
தெய்வங்கள் திறந்தே ஆக வேண்டும் கண்

"அஞ்சாதீர்
அவன் இதயத்துள் புகுந்து
குரல் வளையை ஊடுருவி
உம்மை அச்சுறுத்தும் வார்த்தைகளை
திரும்பப் பெறுகிறோம்"
என்றவர் புறப்பட்டனர்.

இவ்வளவுக்கும் காரணமான வார்த்தைகள்
இவை தான்: "நான் பேச்சுவார்த்தைக்கு தயார்"

போன கடவுளர்
உண்மையான துன்பத்திற்குள்ளானதாகவும்
அவர்கள் திரும்பி வரவே இல்லை எனவும்
இலங்கை வானொலி கூறத்தொடங்கியது
ஆயின் முறையிட்டவர் யார்?

26-12-2000

தேவ அபிரா

# நாம் எங்கே நிற்கிறோம்?

கேள்வியுடன் தொடங்குகிறது தலைப்பு. எனவே நீயும் இந்தக் கேள்விகளுக்கு விடைகளைச் சொல்லு பார்க்கலாம்.

- Sun Micro systems தின் இணை நிறுவுனர் யார்?
- அறிமுகம் தேவைப்படாத, 90 வீதமான பாவனையிலுள்ள Pentium Chip ஐ உருவாக்கியவர் யார்?
- Fortune சஞ்சிகையின் கணிப்பீட்டின்படி உலகின் மூன்றாவது பெரும்பணக்காரர் யார்?
- C, C++, Unix போன்ற கணிணி நிகழ்ச்சி மொழிகளை உருவாக்கிய AT & T Bell Labsன் தற்போதைய தலைவர் யார்?
- உலகின் முதல்தர இணைய அடிப்படையிலமைந்த ஈமெயில் சேவையான Hotmail ஐ உருவாக்கியவர் யார்?
- Hewlett Packard நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் யார்?
- Windows 2000 ன் பரீட்சார்த்தப் பிரிவுப் பணிப்பாளர் யார்?
- City Bank, Mckensey, Stanchart ஆகியவற்றின் பிரதான நிறைவேற்று இயக்குனர்கள் யார்?

என்ன குழப்பமாயிருக்கிறதா? அல்லது எங்காவது இந்திய தொலைக்காட்சிச் சேவைகளின் 'நீங்களும் கோடிஸ்வரராகுங்கள்' என்ற நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு அறுக்கிறேன் என்கிறாயா? விடயத்திற்கு வர முதல் விடைகளுக்கு வருவோமா?

- வினோத் கொஸ்லா
- வினோத் தம்
- அஸீஸ் பிரேம்ஜி (1ம் இடத்தில் பல காலமாய் இருந்த புருணை சுல்தான் 6ம் இடத்திலாம் இப்போது)
- அருண் நேத்ரவல்லி
- சபீர் பாத்யா
- ராஜீவ் குப்தா
- சஞ்சய் தஜ்ரிகா
- விக்டர் மெனசஸ், ராஜட் குப்தா, ரனா தல்வர்

இந்த விடைகள் உனக்கு ஏதோ ஒரு ஒற்றுமையைக் காட்டுவதாய் இருக்கும் என நினைக்கிறேன். ஆம். இவர்கள் அனைவரும் இந்தியர்கள் என்பதுதான் அந்த ஒற்றுமை.

இந்திய-பாகிஸ்தானிய முறுகல்கள், உரசல்கள், போட்டிகள், பொறாமைகள் என்ற வடிவங்களின் ஒரு பரிமாணமாக இப்போது எங்களுக்கு இங்கே கிடைக்கப்பெறுகிற தகவல்களின் ஒரு வடிவமே இது. அண்மையில் இங்கு வேலை செய்கிற வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு குறிப்பாக இந்தியப் பிரஜைகளுக்கு ஈமெயில் மூலமாக இந்தத் தகவல்கள் அனுப்பப்பட்டிருந்தன. இந்தியப் பிரஜைகளின் இந்த உலகார்ந்த வியாபகமும் ஆளுமையும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியதுதான். என்றாலும் இங்கே நான் இந்த இரண்டு நாடுகளின் உரசல்கள் எப்படியிருக்கிறது என்பதைச் சொல்வதற்காகவும், ஒரு பொது அறிவுக்காகவும் (தேவைப்படின்) இதை எழுத நினைத்தேன். குறித்த இந்தத் தகவல்கள் அமெரிக்காவில் 3.22 மில்லியன் இந்தியர்கள் இருப்பதாகக் கூறுகிறது. அத்துடன் கீழ்வரும் தகவல்களையும் அது தருகிறது.

- அமெரிக்காவிலுள்ள 38 வீதமான வைத்தியர்கள் இந்தியர்கள்.
- அமெரிக்காவின் 12 வீதமான விஞ்ஞானிகள் இந்தியர்கள்.
- 36 வீதமான NASA ஊழியர்கள் இந்தியர்கள்.
- 34 வீதமான MICROSOFT ஊழியர்கள் இந்தியர்கள்.
- 28 வீதமான IBM ஊழியர்கள் இந்தியர்கள்.
- 17 வீதமான INTEL ஊழியர்கள் இந்தியர்கள்.
- 13 வீதமான XEROX ஊழியர்கள் இந்தியர்கள்.

இந்தத் தகவல்கள் விடுத்து இன்னொரு கேள்வியும் கேட்கப்படுகிறது. முக்கியமான 48 பல்துறை நிறுவனங்களின் பெயர்களைத் தந்து அவைகளின் பிரதம நிறைவேற்று இயக்குனர்கள் யார் என்று கண்டுபிடிக்கும்படி கேட்கிறது அந்தக் கேள்வி. இவைகளுக்கிடையிலான பொது ஒற்றுமை இவர்கள் அனைவரும் இந்தியர்கள் என்று சொல்கிறது ஒரு குறிப்பு. அந்நிறுவனங்களாவன..

1. AppNet America Online (The Largest ISP in the World)
2. Lucent Technologies (Pioneer in Fiber Optics)
3. Proxicom
4. Network Solutions (The sole web domain assignor)
5. General Dynamics Corporation
6. Lazard Freres
7. Litton PRC
8. Columbia Capital
9. Primus Communications
10. Discovery Communications
11. Bell Atlantic
12. Cable & Wireless
13. The Motley Fool
14. Hughes Network Systems
15. Cybercash
16. MCI Worldcom
17. PSINet
18. Motorola
19. MicroStrategy
20. Equalfooting.com
21. Teligent, Inc.
22. MindBank
23. U.S. Airways
24. CIENA Corp.
25. BioNetrix
26. Net 2000 Communications
27. Computer Associates
28. SAIC
29. Startec
30. INOVA Health System
31. Cvent.com
32. Eglobe
33. Metrocall, Inc.
34. DynCorp
35. Consumer Elec. Ass'n
36. The Carlyle Group
37. Cyveillance
38. Nextel Communications
39. Fannie Mae
40. Intelsat
41. Draper Atlantic
42. Venture Fund, L.P.
43. Freddie Mac
44. Manugistics
45. Raytheon Systems Corporation
46. Spacevest
47. HSBC
48. United Airlines.

இந்தக் காரணங்களுக்காகவே அமெரிக்கா இந்தியாவின் மீது மையல் கொள்கிறது என்று கூறி அந்த ஈமெயில் தகவல் முடிகிறது. இது தவிரவும் வேறு பல இந்தியப் பெருமை பேசும் ஈமெயில்களும் வந்த வண்ணமிருக்கின்றன.

இனி பாகிஸ்தான் பக்கம் போவோம். அவர்களுக்கும் இந்த ஈமெயில் (இதற்கென்றே தனிப்பட்ட இணையத்தளம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது.) தகவல்கள் எப்படியோ போய்ச் சேர்ந்திருக்கின்றன. விடுவார்களா? அவர்களும் தேடத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் பாகிஸ்தானியர்கள் எங்கெங்கே எப்படியெப்படி இருக்கிறார்கள் என்றல்ல. இந்த இந்தியத் தகவல்கள் உண்மைதானா என்ற தேடல். அதில் ஒருவர் மிகுந்த சிரமப்பட்டு பல உண்மைகளை அறிந்துள்ளார். இந்தியர்களின் திறமைகளை தொழில்நுட்பத் துறையில் அவர்களின் வளர்ச்சிகளை மதிப்பதாகக் கூறும் அவர்கள் இங்கு கூறப்பட்ட ஆரம்ப விடயங்களுக்கு எந்த மறுப்பையும் தெரிவிக்கவில்லை. ஆனால் பின்னால் தரப்பட்டிருக்கிற நிறுவனங்களின் நிறைவேற்று இயக்குனர்கள் யார் என்ற கேள்விக்கான விடைகளில் நான்கு பேரே இந்தியர்கள் என்பதாக அவர்கள் அறிந்துள்ளனர். அத்துடன் ஏனையவற்றின் இயக்குனர்களின் பெயர்களையும் தந்துள்ளனர். தங்களை மிகைக்கணிப்பீட்டுக்கு உட்படுத்தி ஏனையவர்களை குறிப்பாக பாகிஸ்தானியர்களைக் குறைத்து மதிப்பீடு செய்கின்றனர் என்பது அவர்களின் கருத்து. அத்துடன் தங்கள் நாட்டவர்களும் தாம் எங்கே நிற்கிறோம் என்பதைக் கண்டறிந்து இயங்க வேண்டுமென்பதும் அவர்களின் நோக்கம்.

அது சரி நாமும் நம்மவர்களும் எங்கே நிற்கிறோம்?

எக்கேஎம். [illegible]

நன்றி - நூலகத்திட்டம்



சியாம் செல்வத்துரையின்

FUNNY BOY

## 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 9

சேலை தொடர்பாக அவள் எந்த அக்கறையும் காட்டாமல் கதைத்தது எனக்கு கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. நான் அதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை அவள் கொடுக்கவில்லையே என்ற ஒருவகை அச்சத்துடன் 'ஏன் முடியாதோ' என்று திருப்பிக் கேட்டேன். இப்படிப்பட்ட ஒரு கேள்வியை அவளால் எப்படிக் கேட்க முடியும் என்று ஆச்சரியப்படுவது போல் என் கேள்வி அமைந்திருந்தது. "அப்படியானால் மணப்பெண் எதை அணிவாள்? ஒரு பெட்சீற்றையா?'

தொக்கையம்மா தனது சட்டையிலிருந்த ஒரு பொத்தானை உருட்டியபடி மிகவும் சாதாரணமாகக் கேட்டாள்.

"எங்கை இருக்குது சேலை?"

"அது இரகசியம்" என்றேன் நான். நான் திரும்பவும் பெண்களின் உலகத்துடன் சேர்ந்து கொள்ளும்வரை அதை நான் அவளுக்குக் கொடுக்கப் போவதில்லை"

"என்னை விளையாட்டில் சேர்த்துக் கொள்ள நீ ஒத்துக்கொள்வாய் என்றால், மணப்பெண் தயாராகும் வேளையில் அதைத் தருவேன்...."

அவளது முகத்தில் ஒரு புன்னகை ஓடி மறைந்தது

"என்ன விசயமென்றால் அர்ஜே, நாங்கள் யார் யார் என்ன செய்வதென்று ஏற்கெனவே தீர்மானித்து விட்டோம். இப்ப எங்களுக்கு வேறை யாரும் தேவையில்லை"

"ஆனால், வேறை சில விசயங்களைச் செய்ய உங்களுக்கு ஆட்கள் தேவைப்படும்..." சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தினேன். பிறகு, 'நான் ஏதாவது ஒன்றைச் செய்கிறேன்.' என்று முடித்தேன்.

'ஏதாவது ஒன்று?' அவள் திருப்பிச் சொன்னாள். அவளது கண்கள் திடீரென சிறுத்தன. அவளது பார்வை என்னை அளவிடுவது போல் இருந்தது.

"அவனும் எங்களுடன் விளையாடட்டும்" - சோனாலியும் மற்றவர்களும் சொன்னார்கள்.

'நான் ஏதாவது ஒன்றினை ஏற்று விளையாடுவேன்' - நான் திரும்பவும் அதை வலியுறுத்தினேன்.

திடீரென ஏதோ யோசனை தன்னுள் உதித்தவள் போல தொக்கையம்மா என்னிடம் கேட்டாள்.

"உனக்கு என்ன விளையாட முடியும்...? எங்களிடம் ஒரு மாப்பிளை இல்லை"

தொக்கையம்மாவின் நோக்கம் எனக்குச் சட்டென்று புரிந்தது. அவமானம் என்கிற கசப்பான மருந்தை நான் விழுங்க வேண்டும் என்று அவள் எதிர்பாக்கிறாள் என்பது எனக்கு விளங்கியது. ஆனால், பெண்களுடன் சேர்ந்து விளையாட வேண்டும் என்ற என்னுடைய தாகம் மிகவும் அதிகமாக இருந்ததால் அந்தக் கசப்பான மருந்தை நான் விழுங்கத் தயாரானேன்.

"ஓகே நான் அதைச் செய்கிறேன்" என்றேன் நான்.

"ஓகே" என்றாள் அவள். இந்தப் பாத்திரத்தை நான் செய்தாலென்ன செய்யாவிட்டால் என்ன அவளுக்கு ஒன்று தான் என்பது போல இருந்தது அவளது பதில்.

மற்றவர்கள் சந்தோசத்துடன் சத்தமிட்டார்கள். எனது குறிக்கோள் குறைந்தபட்சம் கொஞ்சமாவது சரிவந்த சந்தோசத்தில் நானும் புன்னகைத்தேன். சோனாலி என்னைத் தட்டி, மற்றவர்களுக்கு உதவி செய்ய வருமாறு கேட்டாள். திருமண விழாவுக்கான தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி நான் நடக்கத் தொடங்கினேன். ஆனால், தொக்கையம்மா திடீரென என்னை வழிமறித்தாள்.

தமிழில்:
எஸ்.கே.விக்னேஸ்வரன்


"மாப்பிள்ளை சமையல் வேலையில் உதவி செய்ய முடியாது?" -என்றாள் அவள்.

"ஏன் முடியாது?"

"ஏனென்றால் மாப்பிள்ளைகள் அதைச் செய்வதில்லை"

"இல்லை அவர்கள் செய்வார்கள்" - இது நான்.

"மாப்பிள்ளைகள் அதைச் செய்வதை எங்காவது கேள்விப்பட்டிருக்கிறாயா?





நான் பார்த்திருக்கிறேன் என்று எனக்குச் சொல்ல முடியவில்லை. இதனால் நான் கோபத்துடன் திருப்பி அவளிடம் கேட்டேன்.

"அப்ப அவர்கள் என்ன செய்வார்கள்?"

"அவர்கள் அலுவலகத்திற்குப் போவார்கள்"

"அலுவலகம்...?" கேட்டேன் நான்.

தொக்கையம்மா பின் தலை வாசலில் இருந்த ஒரு மேசையைச் சுட்டிக் காட்டினாள். நான் இந்த விடயத்தில் விவாதம் செய்வதை அவள் விரும்பவில்லை என்பதை அவளது பார்வை எனக்கு உணர்த்தியது.

"நான் அலுவலகம் போக முடியாது... இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை" - நான் உடனடியாகப் பதிலளித்தேன்.

"நாங்கள் இன்றைக்கு திங்கட்கிழமை என்று வைச்சிருக்கிறோம்" - என்றாள் அவள் மிகவும் இலேசாக.

நான் அவளை உற்றுப்பார்த்தேன். இந்த மணப்பெண் விளையாட்டில் எனது பங்கை எவ்வளவுக்கு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைக்கும் நோக்குடன் அவள் செயற்படுவதை நான் புரிந்து கொண்டேன். இது எனக்குத் திருப்தியாக இருக்கவில்லை. ஒரு கணம் அவளை எதிர்ப்போமா என்று எனக்குத் தோன்றியது.

ஆனால், மறுகணமே அவளது முகத்தில் தென்பட்ட எச்சரிக்கும் பாவம், அவள் சொன்னதை ஒப்புக்கொண்டு தலைவாசலில் இருந்த மேசையை நோக்கிச் செல்ல வைத்தது.

அங்கிருந்தபடி, மற்றவர்கள் திருமணத்திற்குத் தயாராவதை அவதானித்துக் கொண்டிருந்தேன். ஒரு கல்லை எடுத்து, மேசையிலுள்ள பேப்பர்களுக்கு 'சீல்' அடிப்பது போல் மேசையில் அடிக்கத் தொடங்கினேன். இந்தச் சத்தம் தொக்கையம்மாவுக்கு எரிச்சலூட்டுகிறது என்பதை நான் சந்தோசத்துடன் கவனித்தேன். திடீரென ஒரு கற்பனை மணியை அழுத்தி ஒரு சத்தமான ஒலியை எழுப்பினேன்.

யாரிடமிருந்தும் எந்த எதிர்வினையும் இல்லாததால் நான் அதைத் திரும்பவும் செய்தேன். இறுதியாக அங்கிருந்தவர்கள் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். "பையா" - நான் ஒரு அதிகாரி போல சோனாலியைக் கூப்பிட்டேன்... "இங்கே வா பையா"

சோனாலி தனது சமையலை நிறுத்தி விட்டு, படிகளால் ஏறி என்னிடம் வந்தாள். அப்பாவின் அலுவலக உதவியாள் போல அவள் அடக்க ஒடுக்கமாக என்னருகில் வந்து நின்றாள்.

"என்ன ஐயா" - அவளது குரல் மிகவும் அமைதியாக இருந்தது. அவள் அதைச் செய்த விதம் மிகவும் சரியாக இருந்ததால், மற்றவர்கள் தங்கள் வேலைகளை நிறுத்தி விட்டு எங்களைப் பார்த்தார்கள்.

"இதைக் கொண்டுபோய் பம்பலப்பிட்டியிலுள்ள வங்கி மனேஜரிடம் கொடுத்து விட்டு வா" என்றேன் நான்.

தலையைக் குனிந்து வணக்கம் செலுத்திய சோனாலி, அந்தக் கற்பனைக் கடிதத்தை எடுத்துக் கொண்டு படிகளில் இறங்கிப் போனாள். நான் எனது 'மணியை' திரும்பவும் அடித்தேன்.

"மிஸ்" - நான் லக்ஸ்மியைக் கூப்பிட்டேன்.

'மிஸ் இங்கே வந்து நான் சொல்வதை கொஞ்சம் எழுதிக் கொள்ளுங்கள்"

லக்ஷ்மி "வாறன் சேர் இதோ" என்றபடி எழுந்து வந்தாள். அவளது கண்கள் சிங்களப் படத்தின் நகைச்சுவை நடிகைகளுடையது போல அகலமாக விரிந்து பணிவு காட்டியது. அவள் படிகளில் ஏறி, தனது கால் அடிகள் சத்தமிட நடந்து வந்தவிதம் அங்கிருந்த எல்லோருக்கும் சிரிப்பை வரவழைத்தது. தொக்கையம்மாவைத் தவிர மற்ற எல்லோரும் பலத்துச் சிரித்தார்கள்.

லக்ஷ்மி நான் சொன்ன 'டிக்ரேசனை' எடுத்துக் கொண்டு படியில் இறங்கியதும், மற்றவர்கள் 'அடுத்து நான்', 'அடுத்து நான்' என்று நான் அடுத்ததாகக் கூப்பிடவுள்ள பியோனாக நடிப்பதற்குப் போட்டி போட்டார்கள். ஆனால், அவர்களில் ஒருவரை நான் தெரிவு செய்து கூப்பிடமுன் 'தொக்கையம்மா படியில் ஏறிவந்து கத்தினாள். "நிறுத்து அதை.. நீ எங்களை குழப்புகிறாய்"

"இல்லை" - என்றேன் நான். இப்போது எனக்கு மற்றவர்களின் ஆதரவு இருந்தது.

"நீ இதற்கு ஒத்துவராவிட்டால், விட்டிட்டுப் போ!"

"நான் போனால் உனக்குச் சேலை கிடைக்காது!"

தொக்கையம்மா என்னை நீண்ட நேரம் உற்றுப் பார்த்தாள். பிறகு புன்னகைத்தபடி கேட்டாள்.

"என்ன சேலை...? நான் பந்தயம் பிடிக்கிறேன்... உன்னட்டை ஒரு சேலையும் இல்லை"

"இருக்கிறது. என்னிடம் இருக்கிறது" என்றேன். நான் உற்சாகத்துடன்.

"எங்கே?"

"அது இரகசியம்"

"நீ பொய் சொல்லுகிறாய். எனக்குத் தெரியும். அது உன்னிடம் இல்லை"

"இருக்குது! இருக்குது!

"காட்டன் பாப்பம்"

"இல்லை காட்டமாட்டன்".

"உன்னட்டை சேலை இல்லை... நான், நீ எங்களைக் குழப்புகிறாய் என்று ஜானகியிடம் போய்ச் சொல்லப் போகிறேன்."

நான் அசையவில்லை. அவள் தனது மிரட்டலைத் தொடர்கிறாளா என்று பார்ப்பதற்காக அப்படியே நின்றேன். அவள் மேசைக்கு பின்னால் நகர்ந்து குசினிக் கதவை நோக்கி நடந்தாள். அவள் கதவுக்கருகாகப் போனதும், அவள் கட்டாயம் சொல்லத் தான் போகிறாள் என்று எனக்கு விளங்கி விட்டது. உடனே மேலே பாய்ந்து 'அது எங்கே' என்று அவசர அவசரமாக சோனாலியிடம் கேட்டேன்.

அவள் ஜானகியின் அறையைச் சுட்டிக் காட்டினாள்.

நான் ஜானகியின் அறையை நோக்கி ஓடி அவளது அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தேன். சோனாலியின் தூக்குப்பை கட்டிலில் கிடந்தது. நான் அதை எடுத்துக் கொண்டு வெளியே தலைவாசல் பக்கமாக ஓடிவந்தேன். தொக்கையம்மா குசினிக் கதவிலிருந்து வெளியே வந்தாள்.

'இங்கே' நான் கத்தினேன்.

தொக்கையம்மா தனது கைகளைப் பிணைத்துக் கொண்டு 'எங்கே' என்று கேட்டாள் இளக்காரமாக. நான் பையினுள் கையைவிட்டு சேலையை எடுப்பதற்காக துளாவினேன். கையில் அகப்பட்ட துணியை இழுத்து வெளியே எடுத்தேன். அது சோனாலியின் மாற்று உடுப்பு. நான் எனது கையை மீண்டும் அதனுள் விட்டு எடுத்தேன். இப் போது வந்தது எனிற் பிளைற்றனின் புத்தகம். பையினுள் வேறெதுவும் இருக்கவில்லை!

'சேலை எங்கே' கேட்டாள் தொக்கையம்மா.

நான் சோனாலியைப் பார்த்தேன். அவள் ஒரு அதிர்ச்சியான பார்வையுடன் என்னை நோக்கினாள்.

'புழுகன் புழுகன்... அண்டப்புழுகன்' தொக்கையம்மா கூவினாள்.

நான் ஜானகியின் அறைக்குப் போகத் திரும்பினேன். சேலை அங்கே விழுந்திருக்கலாம் என்ற எண்ணத்துடன். அப்போது தொக்கையம்மாவின் முகத்தில் ஒரு மெல்லிய ஆட்டம் ஒன்றை நான் கவனித்தேன். உடனே எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. அவளுக்குச் சேலை பற்றி எல்லாம் தெரிந்திருக்கிறது. முதலே அதைக் கண்டு எடுத்து எங்கேயோ ஒழித்து வைத்திருக்கிறாள். எனக்கு, நான் ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்ற உண்மை விளங்கியதும் திடீரென கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. எனது கோபம் அவளுக்கு விளங்கியிருக்க வேண்டும். எனது கண்களில் இருந்து நடந்தது என்ன என்பதை நான் ஊகித்துவிட்டேன் என்பதை அவள் அவதானித்திருக்க வேண்டும். குசினியை நோக்கி மெதுவாக பின்புறமாக அவள் நகர்ந்தாள். ஆனால் அவள் எங்கே போகிறாள் என்பது எனக்கு அப்போது முக்கியமாக இருக்கவில்லை. எனது கவனம் எல்லாம் எனது சேலை மீது தான் இருந்தது.

நான் ஜானகியின் அறைக்குள் புகுந்தேன்.

'நான்' ஜானகியிடம் நீ அவளது அறைக்குள் நிற்கிறாய் என்று சொல்லப் போகிறேன்.' என்று மிரட்டினாள் அவள்.

"போய்ச் சொல்லி, என்ரை வாலைப்பிடி.... போ..." நான் கத்தினேன்.

(தொடரும்)

நன்றி - நூலகத்திட்டம்




**அண்மையில் காஷ்மீர் தீவிரவாதிகளுடனான தனது ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை இந்து மதவாதிகளது பலத்த எதிர்ப்புகட்கும் மத்தியில் இந்தியப் பிரதமர் நீடித்திருக்கின்றார்.**

**கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நீடித்துத் தொடரும் காஷ்மீர் மக்களின் விடுதலைப் பிரச்சினை வெறும் மதப்பிரச்சினை என்ற மட்டத்தைத் தாண்டி இரு நாடுகட்கிடையிலான பிரச்சினையாக வளர்ந்து இன்று சர்வதேச அக்கறைக்குரிய ஒரு பிரச்சினையாக மாறிவிட்டுள்ளது. இக்கட்டுரையாளர் அதன் தீர்வுக்கான அடிப்படைப் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டுகின்றார்.**

ஏ.எச்.எம்.இல்யாஸ்

# காஷ்மீர்: மறக்கப்பட்டவையும் மறுக்கப்பட்டவையும்!

2ம் உலக மகா யுத்தத்துக்குப் பின் நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாகும். அது கடந்த ஐம்பத்தைந்து வருடங்களாக தனது கடமையை நிறைவேற்றி வந்துள்ளது. ஆனால், பலஸ்தீனத்திலும், காஷ்மீரிலும் அது தனது நோக்கத்தை அடைய முடியவில்லை என்பது கசப்பானதொரு உண்மையாகும்.



பலஸ்தீனத்தில் அது என்றாவது வெற்றி பெறும் வாய்ப்பு தென்பட்டாலும், அடையக் கூடிய சாத்தியக் கூறுகள் சந்தேகமாகவே இருக்கின்றன. அதன் ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை நிலைத்து நிற்கும் இரு பிரச்சினைகளுள் ஒன்றான "இதனால் ஏற்பட்ட அழிவுகள்" இன்னும் எவ்வளவு காலத்துக்கு தொடர வேண்டும் என்பதே கேள்வி.

அணுவாயுதப் போர் வெடிக்கும் ஆபத்து இந்திய உபகண்டத்துக்கு ஏற்கெனவே வந்துவிட்டது. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை உருவாக்குவதில் இந்தியா வெற்றி கண்டுள்ளது. அந்த முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட வெகு காலம் செல்லாது. அப்படியாயின், பிரச்சினை இன்னும் சிக்கலடையும் என்பதில் சந்தேகமில்லை. ஐ.நா.வின் கையாலாகாத தனத்துக்காக காஷ்மீர் மக்கள் கொடுக்கப்போகும் விலையை அண்டை நாட்டிலுள்ள எங்களுக்குக் கூட எண்ணிப் பார்க்க முடியாது.

இப்பூமியில் மிகவும் அழகு வாய்ந்த இடங்களில் காஷ்மீர் முதலிடம் பெறக் கூடியது. அந்த சுவர்க்கம் நரகமாவதைத் தடுக்கும் பொறுப்பு ஐ.நா.விடம் இருக்கிறது. அதனை அச்சபை நிறைவேற்றத் தவறின், கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக அது சாதித்தவை எல்லாவற்றையும் விட இந்த ஒரேயொரு தோல்வியின் அளவு நிச்சயமாக பெரிதாக இருக்கும்.

1948 பெப்ரவரி 10ந் திகதி ஐ.நா. சபை "ஜம்முவிலும் காஷ்மீரிலும் இடம்பெறும் வன்செயல்களும் கெடுபிடிகளும் அவசரமாக முடிவுக்குக் கொண்டுவரப்படுவது அவசியமாகும். அத்தோடு, ஜனநாயக முறையிலமைந்த மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் காஷ்மீர் யாருடன் இணைவது என்பது பற்றிய சர்ச்சையும் தீர்மானிக்கப்படல் வேண்டும், என ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், இன்றுவரை கண்ட பலன் ஒன்றுமில்லை, இழுபறி நிலையே நீடிக்கிறது.

1971 வரையிலான இருபத்து மூன்று வருட காலத்தில், ஐ.நா.சபை இந்தப் பிரச்சினை சம்பந்தமாக பதினெட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றியது. இந்தியா, பாகிஸ்தான் மீதான ஐ.நா. ஆணைக்குழுவும் மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியது. அவை எல்லாம் ஒரேயொரு அடிப்படை அம்சத்தை வலியுறுத்துகின்றன. காஷ்மீர் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே அந்தத் தாரக மந்திரம். அதுவே நியாயமான, நேர்மையான வழியுமாகும். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

இந்தியப் பிரதம மந்திரியான இந்திரா காந்தியும், பாகிஸ்தான் பிரதமரான சுல்பிகார் அலி பூட்டோவும் கைச்சாத்திட்ட சிம்லா ஒப்பந்தத்தின் முதலாம் ஷரத்தின் முதலாம் உப - பிரிவில் "ஐ.நா. சாசனத்தின் விதிகளுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்பவே இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் அமையும்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு அதே ஷரத்தின் இரண்டாம் உப - பிரிவில் இரு நாடுகளும் சமாதான வழிகளிலேயே தமக்கிடையிலான வேறுபாடுகளைக் களைய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. ஐ.நா. தீர்மானங்களுக்குக் கட்டுப்படுவோம் என்ற வாக்குறுதி காற்றில் விடப்பட்டுள்ளது. தீர்மானங்கள் வலியுறுத்தும் அபிப்பிராய வாக்கெடுப்பும் வசதியாக மறக்கப்பட்டு விட்டது. ஆனால், மறக்கப்பட்டவையும் மறுக்கப்பட்டவையும் கொல்லப்படும் உயிர்களில் துடித்துக் கொண்டே இருக்கும் என்று துணிந்து கூறலாம்.

முதலாளித்துவச் சூழலியல் - 01

# முதலாளித்துவ சூழலியற் சிக்கல்

– றியாஸ்


Oikos (வீடு அல்லது வாழ்வதற்கான இடம்), Logos (கற்றல்) என்னும் கிரேக்க சொற்களிலிருந்து தோன்றியது Ecology என்னும் சூழலியல். இதிலிருந்து சூழலியல் எனப்படுவது உயிரினங்களை அவற்றின் வாழிடங்களில் கற்றல் எனலாம். அதாவது சுற்றுச் சூழலிலிருக்கும் உயிரற்ற, உயிருள்ள கூறுகளையும், கற்கும் கற்கையாகும். ஜேர்மனைச் சேர்ந்த Hanns Reiter, 1885இல் சூழலியல் என்னும் பதத்தை உபயோகித்தார். 1869களில் ஒரு உயிரினத்தின் சேதன, அசேதன சூழல்களுக்கிடையிலான உறவுகளைக் கற்றல் சூழலியல் என Earnest Hackel வரைவிலக்கணப்படுத்தினார். 1963இல் Eugene Odum, இயற்கையின் அமைப்பையும், தொழிற்பாட்டையும் பற்றிய கற்கை என வரைவிலக்கணப்படுத்தினார். இந்த வரைவிலக்கணமே இன்று மிகவும் பெரிதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. பின்னர் இந்தச் சூழலியல் ஒரு வகையில் தற்சூழலியல், ஒன்றிய சூழலியல் என இருவகையாக அணுகப்படும். பின்னர் சாகியம், சமுதாயம், உயிர்க்கோளம் எனப் பல்வேறு மட்டங்களில் உயிருள்ள, உயிரற்ற கூறுகள் ஆராயப்படும்.

பொருளாதார முறைகள் எனப்படும் போது, ஆண்டு-10 சமூகக் கல்விப் பாடத்தில் தொடங்கி, பல்கலைக்கழகம் வரை, அவைகள் மூன்று வகைப்படும், அவையாவன முதலாளித்துவப் பொருளாதார முறை, சோசலிசப் பொருளாதார முறை, கலப்புப் பொருளாதார முறை எனப் போதிக்கப்படுகின்றன.

எல்லாச் சமூகமும் எல்லாப் பொருளாதார ஒழுங்கமைப்புக்களும் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள் பொதுவானவையாகவும், அவ்வடிப்படைப் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் (அருமைத்தன்மை (scarcity) பொதுவானதாகவும் காணப்படுகின்றது. ஆயினும் ஒவ்வொரு சமூகமும், ஒவ்வொரு நாடும் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வுகளின் அடிப்படையிலேயே பொருளாதார அமைப்புக்கள் தோற்றம் பெறுகின்றன. அல்லது அவற்றை அடையாளம் காண முடிகின்றது. பொருளாதார முறை என்பது ஒரு சமூகமானது தனது பொருளாதார நடவடிக்கைகளான உற்பத்தி, நுகர்வு, பங்கீடு போன்றவற்றை எந்த அடிப்படையில் ஒடுங்குபடுத்தியுள்ளது என்பதை விளக்கி நிற்கின்றது.

இனி முதலாளித்துவப் பொருளாதாரத்தை நோக்குவோம். பொதுவாக முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றின் நடத்தையை மூன்று முக்கியமான உரிமைகள் தீர்மானிக்கின்றன. அவையாவன சொத்துரிமை, பொருளாதார உரிமை, உற்பத்தி உரிமை, அதாவது தனியுடமையாளர் தடையற்ற விதத்தில் தாம் விரும்பிய அளவு சொத்துடமைகளைக் கொண்டு, தான் விரும்பிய தொழிலை ஆரம்பிப்பதற்கும், அதன் வழியாக எத்தொழிலிலும் தான் விரும்பிய அளவு பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உரிய சுதந்திர முயற்சியை இவ்வுரிமைகள் குறிக்கின்றன.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பினை சந்தைப் பொருளாதாரம், சுதந்திர முயற்சிப் பொருளாதாரம் என்றும் அழைப்பர். இப் பொருளாதார அமைப்பில் உற்பத்திக் காரணிகள் தனியாருக்கு சொந்தமானவையாக உள்ளன. இவ்வுற்பத்திக் காரணிகளை தனியார் தமது விருப்பப்படி பயனப்படுத்தலாம். இலாப நோக்கத்தினை அடிப்படையாக



வைத்தே இங்கு சொத்துடமையாளர்கள் தொழிற்படுகின்றனர். என்ன பொருளை உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? யாருக்கிடையே பங்கிடுவது போன்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விலை முறையே தீர்வு காண்கின்றது. சகல முதலாளித்துவப் பொருளாதார அமைப்புக்களிலும் இன்று சில கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினால் பொது நலன் கருதி விதிக்கப்படுகின்றன.

எனினும் இத்தகைய கட்டுப்பாடுகள் தனியார் விரும்பிய தொழிலை தொடங்குவதையோ இலாப நோக்கத்தின் அடிப்படையில் இன்னொருவருடன் சேர்ந்து ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதையோ தடை செய்வதில்லை.

இங்கிருந்து முதலாளித்துவ சூழலியற் சிக்கலை நோக்குவோம். இலாப நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இந்த முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு சூழலியல் பற்றிய அக்கறை ஒரு போதும் கிடையாது. ஆனால் கடுமையான எதிர்ப்புக் கிளம்பும்போது முதலாளித்துவம் தனக்கும் சூழல்மீது அக்கறை இருப்பதாக பம்மாத்துக் காட்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டை கைத்தொழிற் புரட்சியின் பொற்காலம் எனலாம். கிடைக்கக் கூடிய அனைத்து மூலப் பொருட்களையும் உபயோகித்து, உற்பத்தி செய்த பொருட்களை அடுக்கி வைத்து, புதிய வளங்களையும், புதிய சந்தைகளையும், கண்டு பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு முதலாளித்துவம் தள்ளப்பட்டது. அமெரிக்கா, அமெரிக்கக் கண்டத்தையும், ஐரோப்பிய முதலாளித்துவம் ஆபிரிக்கக் கண்டத்தையும் சுரண்டுவதற்கு தங்களுக்குள் பிரித்துக் கொண்டன. இவர்கள் தங்களது சொந்தக் கருத்துக்கள் மற்றும் நடைமுறை கலாசாரங்களையும் சுதேசிகளின் மீது திணித்து அவர்களின் வேர்களை சிதைப்பதிலும் குறியாயிருந்தார்கள். அந்தச் சுதேசிகளின் மீதான இயற்கைச் சுரண்டல்களும், இயற்கையை அழித்து மேற்கொண்டு உட்கட்டமைப்புக்கள் (வீதிகள், கால்வாய்கள், அணைக்கட்டுக்கள், பாலங்கள், கட்டிடங்கள் போன்றன) போன்றவற்றினூடும் முதலாளித்துவ-சூழலியற் சிக்கலின் கொடூரத் தன்மை வெளியே தெரியத் தொடங்கியது.

காலம் காலமாக இயற்கையோடு இணைந்திருந்த பயிர் முறைகளை காலனித்துவம் அடியோடு ஒழித்தது. காலனியவாதிகள் அந்த இடத்தினை பணப் பயிர்களினால் மாற்றீடு செய்து கொண்டார்கள். கலப்புப் பயிர் முறைகளும், ஓரினப் பயிரினால் மாற்றீடு செய்யப்பட்டது. முதலாளித்துவ வாதிகளின் சூழலின் மீதான சுரண் டற் போக்கினால் சுதேசிகளின் கிராமங்களில் தீவிர உணவுப் பிரச்சினைகள் ஏற்பட்டன. மக்கள் மேலும் மேலும் வறுமை நிலைக்கு உள்ளாகத் தொடங்கினார்கள்.

உலகப் போர்களுக்குப் பிந்தைய முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, வரையறையற்ற தொழில்நுட்பத்திற்கும், வரையறையற்ற உற்பத்திக்கும், ஏகபோக நுகர்தலுக்கும் கால்கோளாக அமைந்தது. இதனால் அந்த முதலாளித்துவ நாடுகளே பாதிக்கப்பட்டன. (கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச நாடுகளும் இதேமாதிரி பாதிக்கப்பட்டன. அதனைப் பின்னர் பார்ப்போம்). முதலாளித்துவம் சுற்றுச் சூழலை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. சூழலை என்றுமே அள்ளக் குறையாத பாத்திரமாகக் கருதியது. சூழலியற் பிரச்சினைகளை ஒரு சிறிய பிரச்சினையாகக் கூட அவர்கள் கருதவில்லை.

இன்றைய முதலாளித்துவத்தின் சிக்கல், சூழலியற் சிக்கலின் ஒரு பகுதியே. முதலாளித்துவம் தனது அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சியால் அல்லது தொழில்நுட்பவெறியினால் (technofascism) இறுமாப்புடன் இயற்கையை அலட்சியம் செய்தது. இன்று அதனால் ஏற்பட்ட சூழலியற் சிக்கலுக்கான விலையை முதலாளித்துவத்துடன் இணைந்து எல்லோரும், அமில மழையாய், அணு உலைக் கசிவாய், ஓசோன் ஓட்டையாய், எல்-நினோவாய், லா-நினோவாய் விலை கொடுக்க வேண்டியுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



## நூல் மதிப்பீடு

# அவை புரட்சியின் அடையாளங்களா? வன்முறையின் அடையாளங்களா?

– எம்.கே.எம்.ஷகீப்

சுந்தர ராமசாமியின் மொழிபெயர்ப்பில் காலச்சுவடு வெளியிட்டிருக்கும் மலையாளத்தின் பிரபல எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளையின் "தோட்டியின் மகன்" நாவல் வாசிக்கக் கிடைத்தது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் இன்னொரு நாவல் வாசித்து முடித்த திருப்தி. சுந்தர ராமசாமி தன் இருபதாம் வயதுகளில் மொழிபெயர்த்த, தொடராகப் பிரசுரமான இந்நாவலை இப்போதைய இலக்கிய அடையாளங்களின்படி தலித்திய நாவலெனலாம். (தலித்துக்கள் எழுதினால் தான் தலித் இலக்கியம் என்ற சர்ச்சைகளின் தற்போதைய நிலவரம் என்ன?) ஆனால் பிரச்சினைகளை வெளியிலிருந்து அணுகுபவர்களுக்கு இது ஒரு பிடியாக இருக்குமென்பது திண்ணம். ஏற்கனவே காலச்சுவட்டுடனான உரசல்கள் இலக்கிய உலகில் முன்னிற்கின்றன.

அண்மைய எக்ஸ்ஸில் இதழிலும் தமிழினி மாநாட்டை தொடர்புபடுத்திய கட்டுரையொன்று வாசிக்க முடிந்தது. வர்க்க அடையாளப் பட்டஞ் சூட்டி அவர்களை தனிமைப்படுத்தும் முயற்சி தீவிரமாக இடம்பெற்று வரும் நிலையில் இந்நாவலை எவ்வாறு உள்வாங்குவது என்பது பெரிய பிரச்சினையாகத் தான் இருக்கப் போகிறது.

நாவலின் கதை மாந்தர்கள் அனைவரும் துப்புரவுத் (நகர சுத்தித்) தொழிலாளர்கள். (அவர்களை எங்களூரில் அழைக்கும் "பாஷை"யில் சொல்லவே எனக்கு நா கூசுகிறது.) அவர்களைச் சுற்றிய கதை மெதுவாய் சரளமாய் நகர்கிறது. சு.ராவின் மொழியின் செழுமை அந்த ஆரம்ப வயதிலும் அம்சமாய் அமைந்திருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

தோட்டிகள் என்று வழங்கப்படுகின்ற இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் மனித உடற்கழிவுகளை நம்பிப் பிழைப்பவர்கள் என்பது எவ்வளவு துயரமானது தெரியுமா? இந்த நாவலின் நாயகன் (சுடலை முத்து) தோட்டிக்கு மகனாகப் பிறக்கிற ஒரு தோட்டியாகவே அறிமுகமாகிறான். எந்த முன்னனுபவங்களோ நேர்முகத் தேர்வுகளோ இன்றி தோட்டிக்குப் பிறந்தவர்கள் என்ற காரணத்திற்காகவே இவர்கள் மாத்திரம் இந்தத் தொழிலில் உள்வாங்கப்படுகிறார்கள். ஆனாலும் இந்தக் கதையின் நாயகனுக்கு இந்த எழுதப்படாத விதியை மாற்றும் முனைப்பு அதிகமிருக்கிறது. தன்னை இதிலிருந்து விடுவிக்கும் பல்வேறு முயற்சிகளில் இறங்குகிறான். தன்னை தன் சார்ந்தவர்களிலிருந்து வேறாக்கிக் காட்டும் முயற்சியில் அவன் மேற்கொள்ளும் முயற்சிகள் பல்வேறு வகையான மனித உறவு விசிசல்களை [illegible]டுத்தி விடுகின்றன. இருந்தாலும் அவன் அதையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. தன் இலக்குத் தான் அவனுக்கு முக்கியம். அதற்கு வேண்டிய இழப்புக்களை, ஏற்புக்களை யாரிடமிருந்தும் எந்த மாதிரியும் அவன் பெற்றுக் கொள்வான். தனது இந்தத் தனிநபர் போராட்டத்திற்கு உருவம் கொடுக்கிற பிம்பமாய் இவனது மகன் பிறக்கிறான். அவன் காண விரும்பும் மாற்றத்தின் மாதிரி அவனது மகன் தான். அவனுக்குப் பெயர் (மோகன்-இந்தப் பெயர்சூட்டலே அடையாள அழிப்பின் புரட்சிகர(?) ஆரம்பமாய் இருக்கிறது) சூட்டுவதிலிருந்து அவனைப் பாடசாலைக்கு அனுப்புவது வரையான அனைத்திலும் அவனை ஒரு தோட்டியின் மகனாக உணரச் செய்யாத விதத்தில் நடந்து கொள்கிறான். கணவனின் இந்த தன்னிச்சையான போக்கில் அதிருப்தியும், பின்னர் அவனின் லட்சியப் போக்கில் ஓர் ஆலோசகியாகவும் வருகிறாள் அவன் மனைவி.

காலம் போகிறது. தோட்டிகள் சமூகத்தில் ஆள்கொள்ளிக் கொலரா நோய் பரவுகிறது. (இது அவர்களிடையே விஷேசமாய்ப் பரவி அவர்களைக் கொன்றொழித்து விடும் நோயாக இருக்கிறது.) தோட்டிகள்




எண்ணிக்கையற்று இறந்து போகிறார்கள். இது அவனுக்குப் பெரிய சவாலாகிறது. இது இயற்கை விடுக்கும் சவால். அவனால் என்ன செய்ய முடியும்? இருந்தும் அவன் கடைசி வரை முயல்கிறான். அவனுக்கு சந்தர்ப்பவசமாக மயானக் காவலாளி வேலை கிடைக்கிறது. இது அவனுக்கு பெரிய ஓர் ஆறுதல். அவன் தன்னை தோட்டியென்று இனி அழைத்துக் கொள்ளத் தேவையில்லை. கனவின் சிறுபகுதி நனவான மாதிரி! இதற்கிடையில் மகனுக்கு ஒரு நண்பன் கிடைக்கிறான். அவன் ஓர் அநாதைத் தோட்டி. இது பெற்றோருக்கு தலையிடியாய்த் தெரிந்தாலும் அவர்களால் தவிர்க்க முடியாதிருக்கிறது. அவன் மூலமும் தானும் தோட்டியென்பதை தெரிந்து கொள்கிறான். அச்சிறுவர்களுக்கிடையிலான உறவு விரிகிறது. மறுபக்கத்தில் [illegible] தம்பதிகளைக் கொன்று விடுகிறது.

பல்வேறு இடைச் சம்பவங்கள் நிகழ்வுகளுடன் நகரும் கதை முடிவில் தோட்டியில் ஒருவனாகவே தன்னை இணைத்துக் கொள்ளும் மகனின் சில புரட்சிமயமான நடவடிக்கைகளுடன் நிறைவுறுகிறது.

பொதுவாகச் சொன்னால் தோட்டியின் மூன்று படித்தரங்களை இந்த நாவலில் உணரலாம். முதலாவது முழுத் தோட்டியாக இருந்து இறந்து போகிற தந்தைத் தோட்டி. இரண்டாவது அவருக்கு மகனாகப் பிறந்து சிறு சிறு மாற்றங்களைத் தோற்றுவித்து தன் சந்ததிக்காக உழைத்துச் சாகும் இன்னொரு தந்தைத் தோட்டி. மூன்றாவது அவனுக்குப் பிறக்கும் தோட்டியாகவே தன்னை இனங்கண்டு வன்முறைப் புரட்சிகள் மேற்கொள்ளும் தோட்டி. ஆக தோட்டிகள் தோட்டிகளாகத் தான் இருப்பார்கள், இருக்க வேண்டும் என்கிற மாதிரியாகத் தான் நாவல் நகர்கிறது. கடைசியில் தோட்டிகள் பற்றிய எந்த மாறுதலான முடிவுகளும் இல்லை. தங்களைப் பயன்படுத்தி உழைத்துக் கொள்பவர்களை பழிவாங்குகிறவர்களாகக் காட்டப்படுகிறான் கதையின் தோட்டி. ஏற்கெனவேயுள்ள தோட்டி என்ற மிக மோசமான அடையாளங்களுடன் வன்முறையாளர்கள் என்ற பட்டமும் அவர்களுக்குச் சேர்ந்து கொள்கிறது. இதுவே போதும் அவர்கள் காலங்காலமாக தோட்டிகளாக அடக்கப்படுவதற்கு. தோட்டியின் மகன் தோட்டி தான் என்பதுதான் கதையின் முடிவாக இருப்பதும் பல அனுமானங்களுக்குக் கொண்டு சென்று விடுகிறது. சு.ராவுக்கு எதிர்ப்பிரச்சாரத்துக்கு இதுவே காரணமுமாகி விடலாம்.

கதைக்காக வேண்டியும் ஏன் அவர்களில் மாற்று அடையாளத்தை தகழியால் தரமுடியவில்லை என்பது எனக்கும் கேள்வியாகிறது. இருப்பைப் படம் பிடித்திருக்கிற தகழிக்கு அவர்கள் பற்றிய வேறு அடையாளங்களை சொல்லத் தேவையில்லையென்று நீங்கள் சொல்லலாம். மார்புகளில் குண்டுகளைக் ஏந்திக் கொண்டு திரிகிற தற்கொலைப் போராளிகளாக அவர்கள் இறுதியில் சித்திரிக்கப்படுவது புரட்சிகர அடையாளங்களைத் தோற்றுவிப்பதைவிட வன்முறை அடையாளங்களைத் தோற்றுவிக்கிற ஒன்றாக இருப்பதாகவே நானுணர்கிறேன். பாட்டன், தந்தை, தனயன் என்ற தலைமுறைகளை சிறிய நாவலுக்குள் அடக்கியிருப்பதால் இறுதி அத்தியாயங்கள் அவசரமாக முடிக்கப்பட்டன போலும் எனக்குப் படுகிறது.

இது பற்றிய ஏதாவது விடயங்களை தகழியை மலையாளத்தில் மறுவாசிப்புச் செய்திருந்தார்களென்றால் அறிந்து கொள்ள முடியுமாயிருக்கும். இருந்தாலும் இது எனது 'வாசிப்பு'.

147ம் பக்கத்தின் கடைசிப் பந்தியின் கடைசிச் சில வரிகள் நாம் நாவலில் இவ்வளவு நேரமும் உள்வாங்கப்பட்டிருந்த தன்மையைத் தூக்கியெறிந்து விடுவது போலுள்ளது. 'நாம் அவர்களல்ல வேறு ஆட்கள்' என்கிற தொனியும், 'நாங்கள் தானே காரணம்' என்கிற ஓர் அனுதாபத்தனத்தையும் வெளிக்காட்டிவிடுகின்றன அவ்வரிகள்.

என்றாலும் வெளியே ஒரு கேள்வி. இவ்வளவு காலம் கடந்து காலச்சுவட்டினர் நூலாக்கியதன் பின்னே ஏதும் காரணங்கள் உண்டா?

இந்த நாவலை வாசித்த போது எனக்கு எங்களூர்த் தோட்டிகள் பல்வேறு சம்பவங்களை ஞாபகப்படுத்தி வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவற்றில் சில...

"ஒரு முறை எங்கள் உறவுக்காரப் பெண் ஒருவரின் கைக்கடிகாரம் ஒன்று தவறி கக்கூசில் விழுந்து அதன் பின்னாலுள்ள குழிக்குள் போய் விட்டது. அவருக்கு அதை எப்படியோ எடுத்தே ஆக வேண்டும். கடைசியாக எங்களூர்த் தோட்டியொருவரைக் கூட்டி வந்தார்கள். அவன் உடலில் மண்ணெண்ணெயைத் தடவிக் கொண்டு அந்த மலக்குழிக்குள் இறங்கித் தேடினான். சுற்றுத் தூரத்தில் மூக்கைப் பொத்திக் கொண்டு எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் அவன் மணிக்கூட்டுடன் வெளியேறினான். பின்னர் அவனுக்கு பத்து ரூபாய் கொடுத்தார்கள்!

எங்கள் ஊரின் பொது வைத்தியசாலைக்கு முன்னால் தோட்டிகளின் பெரிய குடியிருப்பு இருந்தது. அவர்கள் தான் எங்களூரின் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் தங்களை இழந்து பேணிக் கொண்டு வந்தார்கள். அப்போதெல்லாம் அனேக வீடுகளில் வாளிக் கக்கூசுகள் தான் இருந்தன. காலையில் எல்லா வீதி வழியாகவும் அவர்கள் தள்ளிப் போகும் வெற்று வண்டியின் சத்தத்தையும், இரண்டு மணித்தியாலங்களின் பின் தள்ள முடியாமல் தள்ளிக் கொண்டு பேோகும் பாரம் நிறைந்த வண்டிகளையும் காண முடியும். பிறகு ஒரு நாள் நகரத்தை ஆட்சிபுரிந்த இயக்கத்தவர்கள் குடியிருப்பு என்று சொல்லி அவர்களை பலவந்தமாக எழுப்பி ஒரு காட்டுப் பகுதியின் உயரமான முகடுகளில் இருக்க வைத்தார்கள்.

இ[illegible]வும் எங்களூரில் தான். அதாவதாகப்பட்டது. அங்கே நிறைய உதைபந்தாட்டக் கழகங்கள் இருந்தன. அதில் குறிப்பிட்ட சிலதே மாவட்ட மட்டத்தில் தரம்பெற்றவையாக, பதிவுபெற்றவையாக இருந்தன. அதில் ஒன்று கிரீன் பீல்ட் என்கிற கழகம். அதன் வீரர்கள் அனைவருமே துப்புரவுத் தொழிலாளர்கள். நல்ல திடகாத்திரமான உடம்புடையவர்கள். பெரும்பாலும் அங்கு நடக்கிற முக்கிய போட்டிகளின் இறுதிச் சுற்றுக்கு அவர்கள் தெரிவாகிவிடுவார்கள். அவர்களுடன் எல்லாருமே விளையாடினார்கள். யாருக்கும் அவர்களின் அடையாளத்தைச் சொல்லி ஒதுக்கவோ, விளையாடாமல் இருக்கவோ முடியவில்லை. ஆளையாள் உரச உரச விளையாடுவதை எல்லாரும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவ்வாறே அவர்கள் காலையில் கழிவு வண்டிகளைத் தள்ளிக் கொண்டு போவதையும் பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

கதைக்காக வேண்டியும் ஏன் அவர்களில் மாற்று அடையாளத்தை தகழியால் தரமுடியவில்லை என்பது எனக்கும் கேள்வியாகிறது. இருப்பைப் படம் பிடித்திருக்கிற தகழிக்கு அவர்கள் பற்றிய வேறு அடையாளங்களை சொல்லத் தேவையில்லையென்று நீங்கள் சொல்லலாம். மார்புகளில் குண்டுகளைக் ஏந்திக் கொண்டு திரிகிற தற்கொலைப் போராளிகளாக அவர்கள் இறுதியில் சித்திரிக்கப்படுவது புரட்சிகர அடையாளங்களைத் தோற்றுவிப்பதைவிட வன்முறை அடையாளங்களைத் தோற்றுவிக்கிற ஒன்றாக இருப்பதாகவே நானுணர்கிறேன்.

---

சுந்தர ராமசாமி அவர்களின் மொழிபெயர்ப்பில் வெளியான தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'தோட்டியின் மகன்' நாவல் பற்றிய மதிப்பீடு சரிநிகர் இதழ் 205ல் வெளிவந்திருந்தது. ஆயினும், காலச்சுவடு பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட இந்நாவல் பற்றிய ஷகீப்பின் இன்னொரு வாசிப்பை இந்நாவலின் முக்கியத்துவம் கருதி வாசகர்களுக்காகத் தருகின்றோம்.

ஆ–ர்

நன்றி - நூலகத்திட்டம்



## கிடைக்கிற கோவணத்தையேனும் ஒழுங்காகக் கொடுங்களேன்!

கல்வி அமைச்சு பல திட்டங்களைக் கொண்டு வந்தாலும், எமக்கென்னவோ கிடைப்பது கோவணமளவே. 5 வயது முதல் 15 வயதுவரையுள்ள சகல பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி புகட்டப் படவேண்டும் என்று கல்வி அமைச்சின் சார்பில், "கந்தையுடையானாலும் உன்னைக் கட்டாயம் பாடசாலை அனுப்புவேன்" என்ற வகையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் பேசுகின்றன. போதாக்குறைக்கு பல தரங் களுக்கு இப்போது கணிப்பீட்டுத் திட்டங் களும் அதன் வழி உயர்கல்வி வாய்ப்புக்களும் என்று புதிதாகத் தொடங்கியுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வேறு. இதனையே தானும் சப்புக்குச் சொல்லியபடி மாகாணக் கல்வியமைச்சும் பல செய்முறைகளை அறிவித்திருக்கின்றது.

ஆனால், அவ்வளவும் எந்தளவுக்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பது எவராலும் கேள்வி கேட்காமலேயே விளங்கிக் கொள்ளக் கூடிய கேவலமான நிலையிலேயேயுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் சென்ற வருடம் க.பொ.த. (சா/த)வுக்கான பரீட்சை நோக்கில் ஆசிரியர்கள் மாணவர்களை மிகவும் கடினப்பட்டு தயார்ப்படுத்திக் கொண்டிருந்த போதும், அம்மாணவர்களுக்கான புதிய கல்விச் சீர்த்திருத்தத்தின்படியான பாடப் புத்தங்கள் பத்தாம் மாதமளவில் கூட போதியளவில் அனுப்பி வைக்கப்படாதது பரிதாபமான விடயம். போதாக்குறைக்கு ஆசிரியர்கள், பற்றாக்குறை வேறு. இராணுவக் கட்டுப் பாட்டில் அப்பிரதேசம் இல்லாததால் தம்மால் போதியளவில் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முயடியவில்லை எனப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுவதனால் அதனை விடுவோம்.

ஆனால், வவுனியாவில் கொடிகட்டிப் பறக்கும் 04 நகர்ப்புற பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் மாகாணக் கல்வியமைச்சினால் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்பது கேள்வி?

ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் நகரப் புறத்திலிருந்து சற்று விலகி அமைந்துள்ள பம்பைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 8 வரையிலான வகுப்புக்களில் மொத்தம் 75 மாணவர்களுக்கு மேல் கல்விகற்கின்றார்கள். ஆனால், கல்வி கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களோ அதிபருடன் சேர்த்து 5 பேர் மட்டுமே. ஓர் ஆங்கில ஆசிரியர் இல்லை. (இது பொதுவாக கிராமப்புற பாடசாலைகளின் எழுதப்படாத நியதி போலாகி விட்டது) இதில் ஒரு ஆசிரியர் தனிக்காட்டு ராஜா போல் தான் விரும்பிய போது பாடசாலைக்கு வருவதும், போவதுமாய் இருக்கிறார். இவரின் வரவு நாட்களைவிட, வரவீனங்களே மிக அதிகம். குறித்த ஒரே நேரத்தில் அதிபரும் சேர்ந்து கல்வி கற்பித்தால் கூட 5 வகுப்புக்களுக்கு மேல் கற்பிக்க முடியாத நிலைமை. மிகுதி 3 வகுபினரும் அந்நேரத்தில் ஏதேனும் சுற்றுப்புற சுத்திகரிப்புக்கு ஈடுபடுத்தப்படுகின்றார்கள். அல்லது சும்மா இருக்க விடப்படுகின்றார்கள். இந்நிலையில் மாணவர்களின் பாடத் திட்டங்கள் ஆசிரியர்களினால் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட முடியும்? எவ்வாறு கணிப்பீடுகள் கணிப்பிடப்பட முடியும்?

ஆசிரியர்களின் மேலதிக தேவை அறிந்து ஊர்மக்களும், பாடசாலைச் சமூகமும் வினவிய போது மாகாணக்கல்வி அமைச்சு மாணவர்களின் எண்ணிக்கைப்படி 75 மாணவர்களுக்கு 5 ஆசிரியர்களே நியமிக்கப்பட முடியும் என்றதாம். ஆனால், அவர்களால் தரங்களின் எண்ணிக்கை கவனத்தில் கொள்ளப்படவில்லை. அது சரி ஒரே நேரத்தில் 8 வகுப்புக்களுக்கு 5 ஆசிரியர்கள் வகுப்பெடுக்கும் வித்தை எமக்குத் தெரியவில்லை. தெரிந்தால் சொல்லுங்கள்.

கிராமப் புறங்களில் பெற்றோர்கள் தம்பிள்ளைகள் தம்முடன் விவசாயத்தில் ஈடுபட்டாலே போதும் என்ற மனநிலையில் ஏனோ தானோ என்றே பாடசாலை அனுப்புகிறார்கள். அந்நிலையில் வெகுபிரயத்தனப்பட்டு மாணவர்களை பாடசாலை கவர்ந்து கல்வி கற்பித்தல் என்பது பாடசாலைச் சமூகத்தின் திறமையே. ஆனாலும் இது எத்தனை நாள்தான் தொடரும். தன் பிள்ளைக்கு பாடசாலையில் பாடங்கள் ஒழுங்காக நடப்பதில்லை. மாறாக, வேலையில் ஈடுபடுத்தப் படுகின்றார்கள் என அறியும் பெற்றோர்கள் எவ்வாறு பாடசாலை அனுப்புவார்கள்?

இந்நிலையில் கல்வி கற்பிக்கப்படும் இவர்களின் கல்வி வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி எந்தளவிற்கு வளர்ந்திருக்கும். இவர்களது விளையாட்டுத் துறைகள் எவ்வாறு விருத்தி செய்யப்பட்டிருக்கும். இவர்கள் உயர்கல்விக்காக கிராமப்புறத்தில் இருந்து நகரப் பாடசாலைகளுக்கு நகர்த்தப்படும் போது இவர்களின் கணிப்பீட்டு அறிக்கைகளை உரிய பாடசாலைகளால் சமர்பிக்க முடியுமா? அவ்வறிக்கை மாணவரின் உண்மை நிலைமையை எடுத்துரைக்குமா? இம்மாணவர்கள் அதீதமாக வளர்ச்சிபெற்ற நகரப்புற பாடசாலை மாணவர்களுடன் போட்டியிட முடியுமா? சகஜமாக சங்கோஜமில்லாமல் கைகோர்த்துக் கொள்வார்களா? இவை மாகாணக் கல்வி அமைச்சுக்கெதிராக முன்வைக்கப்படும் கேள்விகள் பதில் சொல்வார்களா?

தமிழ் மக்களுக்கு கிடைப்பதென்னவோ கோவணமளவே. அது தானேனும் துவைத்துக் கொடுக்கப்படுமா? பதில் செயற்பாட்டு வடிவில் இருந்தால் சிறந்தது. பலன் கிடைக்குமா?

*எஸ்.என் கபிலன்,*
*வவுனியா*

## வன்னியிலிருந்து குதிரைகள் வந்திறங்கினவாம்!

யாழ் குடாநாட்டில் நடைபெறும் அடாவடித்தனங்கள் பெரும்பாலானவை தங்கள் பத்திரிகைகள் வெளிவருவது வரவேற்கதக்க ஒரு செயலாகும். அந்த வகையில் சில விடயங்களைத் தெளிவு படுத்தும் பொறுப்பை சரிநிகர் ஏற்கும் எனும் நம்பிக்கையில் சில தகவல்களைத் தருகிறேன்.

தற்பொழுது பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட "பொங்கு தமிழ்" நிகழ்வு உண்மையிலேயே அனைத்துப் பீடமாணவர்களும் பீடாதிபதிகளும் துணைவேந்தரும் சேர்ந்து நடத்திய ஒன்று கூடலிலேயே ஒருமித்த கருத்தாக இம்முடிவு எடுக்கப்பட்டது. தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை இருக்கலாம். ஆனால், அபிலாசை என்பது அனைவருக்கும் ஒன்றாகவே இருக்கும். இந்த வகையிலே இவர்கள் முன்னெடுத்த அகிம்சை வழிப்போராட்டம் மிகவும் தேவையான அதாவது இந்த போர் நிறுத்த வேளைகளில் தவிர்க்க முடியாத காலத்தின் தேவையாகும். இந்த சமாதானத்தை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்திற்கு 49 மனிதநேய அமைப்புகள், பாடசாலை, மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள, கிழககுப பலகலைககழகம, வவுனியா வளாகம், வடமாகாண ஆசிரியர் சங்கம், கட்சித் தலைவர்கள் என பல்வேறு "தமிழ்" அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்கியது மிகவும் வரவேற்கத்தக்கது.



இந்த நிகழ்விற்கு குழிபறித்தது போல இராணுவம் அனுமதி மறுத்தது. வலிமேற்கு தலைவர் திரிலோகநாதன் தனது கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலை அதிபர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பினார். தங்கள் பாடசாலை மாணவர்களோ, ஆசிரியர்களோ இந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டாம். மீறிச் செயற்பட்டால் தான் வழங்கும் நிதியுதவினை உடனடியாக நிறுத்திவிடுவதாகவும், எச்சரித்திருந்தார்.

பருத்தித்துறை பிரதேச சபை உபதலைவர் சமுர்த்தி அலுவலர்களைக் கூட்டி கூட்டங்களுக்கு தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி நியமனங்களை தான் மீளப் பெறுப்போவதாகவும் எச்சரித்தார். ஒருவர் திடீரென எழுந்து வேலைபோனால் பரவாயில்லை தான் "மூட்டை சுமக்கவும், தயாரென" பதிலடி கொடுத்தார். இதன் பின்னர் தலைவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

பிரதேசவாரியாக இவர்கள் பிரச்சாரம் செய்ய ஈ.பி.டி.பியினர் மாவட்ட சார்பாக சகல சமுர்த்தி அலுவலர்களையும் அழைத்து நல்ல பழக்கவழக்கங்களைக் கூறி தமது தலைவரது வர்ணப் புகைப்படம் கொண்ட கலண்டரையும் அன்பளிப்பாக வழங்கி அனுப்பி வைத்தனர்.

பின்னர் 16.01.2001 அவர்களது பிரச்சாரப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில்,

"வன்னியிலிருந்து சில குதிரைகள் இங்கு வந்திருப்பதாகவும் அவர்கள் இங்குள்ள படித்த சமூகத்தை பாழாக்குவதாகவும் இதற்கு ஒத்துழைக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

அண்மையில் நியமனம் பெற்ற ஒரு சமுர்த்திப் "பெண்" ஊக்குவிப்பாளருக்கு பிரதேச செயலகத்தில் நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி அதாவது (சா/த) பெறுபேறுகூட இல்லாததால் அதனை மீள்பரிசீலனை செய்ய வரும்படி கடிதம் உ.அ. அதிபரால் அனுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட பெண் வேலைகொடுத்த பிரதேசசபை உப தலைவரை நாடிய போது உடனடியாக அவர் தனது "பிக்கப்" வாகனத்தில் அவரையும் ஏற்றி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் சென்று 'அவள் மருந்து குடிக்கபோவதாகவும் நீங்கள் பரீட்சைப் பெறுபேறுகளைக் கேட்கவேண்டாமெனவும்', உத்தரவிட்டுச் சென்றார். எத்தரப்பட்ட வேலையாயினும், சாதாரண சித்தியுடனாயின் 4,5 லகரத்துடனும், உயர்தர சித்தியாயின் 2,3 லகரத்துடனும் வேலை கிடைக்கும், இந்த உபதலைவர் இந்திய இராணுவம் ஆட்சியின் போது மக்களை காட்டிக்கொடுத்து அடிவாங்கி கொடுப்பதில் "வல்லவராக வல்லிபுரம்" பகுதியில் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நிகழ்ந்த எழுச்சி நிகழ்விற்கும், ஈ.பிடிபியினர் டக்கென்று வேலை கொடுத்தோரிடம் இந்நிகழ்வு தேவையற்றது என்ற பாணியில் பேட்டி எடுத்து யாழ். சேவையான இராணுவ ஒலிபரப்பில் ஒலிபரப்பினர். பல்வேறு தரப்பினரிடையே கருத்து கேட்டதாகவும், அவர்கள் கூறியதாகவும் ஒலிபரப்பப்பட்டது. இந்த எழுச்சி நிகழ்வை பேரினவாத சக்திகள் இரும்பு கரங்களால் நசுக்க முயன்ற வேளை அவர்களுக்கு பக்கபலமாக ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் இந்த தேசப் பற்றற்றவர்கள் இதற்கு உரிய விலையைக் கொடுக்க வேண்டிய காலம் வராமல் போகாது.

*செங்கோலன்,*
*யாழ்ப்பாணம்.*

## வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் விழப்போகிறீர்கள்!

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் தற்போதைய நிலைப்பாடு எமக்கு ஆச்சரியம் தரக்கூடியதொன்றல்ல. தனது "போராளி" என்ற பெருமையான வட்டத்திலிருந்து அம்மாவின் அடிவருடியாகியுள்ள கௌரவ அமைச்சர் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? அதன் தேவைப்பாடு என்ன? என்பது பற்றி அவருக்கே உணர்த்த வேண்டியிருப்பது குறித்து அவர் வெட்கப்பட்டாக வேண்டும்.

டக்ளஸ் ஈ.பி.ஆர்.எல்.எப்பில் போராளியாக இருந்த நேரமே திம்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் எல்லாத் தமிழ்த் தரப்பினராலும் இணைந்து வைக்கப்பட்ட விடயம் தான் சுயநிர்ணய உரிமை. இப்போது டக்ளஸ் சொல்வாரா அந்த நேரம் தாங்கள் எடுத்த முடிவு தவறு என்று.

தமிழ் மக்கள் நினைத்திருப்பார்கள் டக்ளஸ் புலி மிரட்டலுக்குப் பயந்து தான் அம்மாவோடு இருக்கிறார் என்று ஆனால், அப்படியல்ல தன் சொந்த நலன்களுக்காவே அம்மாதாழ் பணிந்திருக்கிறார் என்பது இப்போது தமிழ் மக்களுக்குப் புரிந்திருக்கும்.

அடிவருடியாக அம்மாவின் பக்கம் நின்று, தலைநிமிர்ந்து போராடக் கிளம்பிய மாணவ சமுதாயத்திற்கு களங்கம் கற்பிக்க முயன்றார் அமைச்சர். தமிழ் மக்கள் ஒன்றும் முட்டாள்களல்லவே.

பத்திரிகையாளன் நிமலராஜன் போல, தயவில்லாமல் அநியாங்களை வெளிக் கொணர்பவர்களையெல்லாம் "புலிகள்" என்ற முத்திரை குத்தும் அரசின் நிலைப்பாட்டிலிருந்து சற்றும் விலகாத ஈ.பி.டி.பி. தலைவர் தமிழ் மக்களுக்கு உரிமை வாங்கி கொடுக்கப் போகிறாராம். என்ன பேத்தல் ஐயா இது. உங்கள் அமைச்சர் பதவியை தக்க வைத்துக்கொள்ள யாரை ஏமாற்றுக்கிறீர்கள் அமைச்சரே?

தங்களது துரோகத்தனத்தையும், அடிவருடித்தனத்தையும் மறைப்பதற்கு போராட்டத்தின் மீது பழிபோடாதீர்கள். தவறு விடுவது தவறு அல்ல. தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள மறுப்பது தான் தவறு. 'குறிக்கோளுள்ள மனிதன் ஆயிரம் தவறுகள் செய்வானாயின், குறிக்கோளற்ற மனிதன் ஐம்பதாயிரம் தவறுகள் விடுவான்' என்பது முதுமொழி.

மன்னார் மீனவர்களுக்காக இனவாத அமைச்சர் மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து மாநாடு நடத்தினீர்கள் இன்னும் அவர்களுக்கு விடிவில்லை. மீனவர்களுக்கு பொய் சொல்லும் கலை உங்களுக்கு ஒன்றும் புதிதல்ல. உங்கள் தலைவி அதில் கலாநிதி பட்டம் பெற்றவரல்லவா (பிரான்சில் உங்கள் தலைவி "பொருளாதாரத்தில்" கலாநிதி பட்டம் வாங்கியதாக புளுகியது வேறு கதை.)

புலிகள் பேச்சுக்கு வந்தால் அரசியலிலிருந்து விலகிவிடுவதாக அசத்தினீர்கள். பேச்சுக்கு வந்தபோது "புலிகள் இப்போது நம் வழி" என்று அட்டகாசமாக பேட்டியும் கொடுத்தீர்கள். ஆனால், ஒன்றை நினைவிற் கொள்ளுங்கள் அமைச்சர் அவர்களே: "வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ளாதவர்களை வரலாறு குப்பைக் கூடைக்குள் வீசிவிடும் என்பதை.

*என்.பிள்ளை,*
*கல்கிஸ்ஸ*

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

Registered as a Newspaper in Sri Lanka


## வரலாற்றின் துன்பியல் நாடகம்!

வரலாறு திரும்பத் துயரங்கள் மட்டுமே தொகுக்கப்படுகின்ற ஒரு துன்பியல் நாடகத்தின் காட்சித் தொகுப்பாக மாறிவிட்டிருப்பது பற்றி யாராவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

இலங்கையின் வரலாற்றைப் புரட்டிப் படிக்கின்ற ஒருவருக்கு நிச்சயம் இந்த மாதிரியாக ஒரு சித்திரம் தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

அது இரண்டாயிரம் ஆண்டுப் பெருமை பேசுகிற பௌத்த மறுமலர்ச்சியினதும் அதன் தார்மீக ஆட்சியினதும் வரலாறாகவே பதியப்பட்டு வந்திருக்கிறது.

பேரினவாதமும், சிங்கள மேலாதிக்க ஆட்சியும் சுதந்திரத்துக்குப் பின்னான காலம் முழவதும் பெருமைப்படும் வரலாற்று நிகழ்வுகளைக் குறித்து வைத்திருக்கின்றன.

ஆனால், இந்த வரலாற்றின் ஒவ்வொரு பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளவர்களின் பின்னால் நீண்ட துயரம் படிந்த பிற இனக்குழுமங்களின் சோகக் கதைகள் பதியப்பட்டிருப்பது பிறர் கண்களுக்குப் படமுடியாது.

வரலாற்று ஆவணங்களிலிருந்து இந்தப் பகுதியை மட்டும் பிரித்தெடுத்துத் தனியாக ஒரு தடவை படித்துப் பாருங்கள்.

இரத்தமும் கொலையும், மனித அழிவுகளும் உரிமை மீறல்களும் மலிந்த இந்தப் பகுதியில் இருந்து தெரியும் துயரம் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய கதையைச் சொல்லும்

ஏமாற்றப்படல், ஏமாளிகளாக்கப்படல், பொறிக்கிடங்கில் விழத்தப்படல், மேலும் மேலும் ஆழமாக மீளா அடிமைத் துயிினுள் முக்குளிக்குமாறு தள்ளப்படல் என்று அந்தப் பகுதியில் பேசப்படும் விடயங்களைச் சற்று கவனித்துப் பாருங்கள்.

இந்த நாட்டின் இனக்குழும அரசியலில் முதன் முதலில் பலியாக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள். அதன் பிறகு மலையகத் தமிழர்கள் அடுத்தவர்கள் தமிழர்கள்.

முதலில் முஸ்லிம்கள் பழிவாங்கப்பட்ட போது, அதற்குத் துணையாக சில தமிழ்ப்பெருந் தலைகள் இருந்தன. பின்னர் மலையகத் தமிழர்கள் பழிவாங்கப்பட்ட போதும் அதற்குத் துணையாகவும் சில தமிழ்த் தலைமைகள் இருந்தன.

பிறகு தமிழர்கள் பழிவாங்கப்படத் தொடங்கிய போது, என்ன ஆச்சரியம், அப்போதும் கூடச் சில தமிழ்த் தலைமைகள் துணை நின்றார்கள்.

ஆனால், வரலாறு திரும்பத் திரும்ப இந்தத் துணை நின்றவர்களுடைய முடிவு பற்றி ஒரே விதமான தீர்வையே எழுதி வைத்திருந்தது.

கண்டியரசன் காலம் முதல் இவர்கள் வரலாறு ஒரே மாதிரியாகத் தான் இருந்திருக்கிறது. அதற்கு முன்பும் அப்படித் தான் என்பதற்கும் உதாரணங்கள் இருக்கலாம்.

துணை போனவர்களும் தூக்கி வீசப்பட்டவர்கள்.

இன்று நாம் வந்து நிற்கின்ற இன்றைய சூழலிலும் இந்த நிலை நீடிக்கிறது. துணை நிற்பவர்கள் வரலாற்றைக் கற்கவில்லை. துயரப்படுவர்களும் கூடக் கற்றுக் கொள்ளாதது தான் அதைவிடப்பெரிய துயரம்.

ஒடுக்கப்படுகின்ற மக்கள் - இனக் குழுமங்கள் ஒன்றிணைவது பற்றிப் பேசுவதில்லை. தமது துயரங்களின் ஒற்றுமை பற்றிச் சிந்திப்பதில்லை. சிந்திக்கும் தலைமைகளை அவர்கள் உருவாக்க முயலவில்லை.

மயைலகம் பிளவுற்று கிடக்கிறது. மலையகத் தலைமைகள் தம்முன் பிளவுபட்டு நிற்கிறார்கள். ஒடுக்கப்படும் ஏனைய இனக் குழுமத் தலைவர்களுடன் உறவு கொள்ள அவர்கள் நினைக்கவில்லை. அது அவர்களுக்கு முக்கியமான ஒன்றாகப்படவில்லை. சரியாகச் சொல்லுவதானால் தமது மக்களது பிரச்சினைகளின் தன்மை பற்றி அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அல்லது அதைப் புரிந்து கொண்டவர்கள் தலைவர்களாக இன்னமும் உருப்பெறவில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் சிதறிப்போய் இருக்கிறார்கள். ஆளுக்கொரு கட்சியாக, ஆளுக்கொரு செயற்பாடாக அவர்களது நடைமுறை நிலவுகிறது. தமது கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் நடைமுறை வேலைகளிலும் அவர்கள் ஒற்றுமையைக் காணவில்லை. பிரதான பிரச்சினையின் தன்மைக் குறித்த ஒரு முகப்பட்ட கருத்து அவர்களிடம் இல்லை. பிற இனக் குழுமங்கள் பற்றி அவர்களிடம் எந்த அக்கறையான அணுகுமுறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்போது முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரிய ஒரே அணியாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் பதவிப் பிரச்சினையை அடியாகக் கொண்டு பிளவுற நிற்கிறது. அதற்கும், இந்த நாட்டின் பிரச்சினை குறித்தோ, தான் பிரதிநிதித்துவம் செய்யும் இனக்குழுமத்தின் அரசியல் எதிர்காலம் குறித்தோ அக்கறை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கை என்ன? மலையக மக்களின் அரசியற் கோரிக்கை என்ன? முஸ்லிம்களின் அரசியற் கோரிக்கை என்ன? அவற்றை அடைவதற்கான வழிமுறை என்ன?

இவற்றுக்கிடையிலான ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன? இவர்கள் இக் கோரிக்கைகளைப் பெறவேண்டியது யாரிடம்?

மூச். யாரும் இதுபற்றி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

மூன்று தனியன்களைக் கையாள்வது சிங்களப் பேரினவாதத்திற்கு ஒரு சுமை அல்ல. அது அதனை அழகாகச் செய்து வருகிறது.

விளைவு,

வரலாறு ஒரு துன்பியல் நாடகமாகத் தொடர்கிறது.

இதன் முடிவுக் காட்சியை நாம் காண்பது எப்போ?

அல்லது அதை எழுதி முடித்து வைக்கப் போவது யார்?

மூன்று இனத்தலைமைகட்கும், மக்களுக்கும் இக்கேள்வி சமர்ப்பணம்.

## சிறைகளில் இளைஞர்கள் நீதிக்காகத் தவமிருப்பு!

# தூங்கி வழிகிறது நீதி!

### பாராளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை நிறுவனங்களும் ஆழ்துயிலில்!

தாமதமாகும் நீதி மறுக்கப்பட்ட நீதி என்று கூறுவர். இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழ் இளைஞர்கள் விடயத்தில் நீதியின் பார்வை தாமதமாக மட்டுமல்ல அலட்சியமாகவும் இருக்கிறது என்பது கவலைக்குரிய விடயம்.

இந்தத் தாமதத்தையும் அலட்சியத்தையும் பற்றித் தொல்லைத் தவிர்ப்புக் குழுவினரோ, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களோ பெரிதாக அடிட்டிக் கொள்வதில்லை. இளைஞர்களின் வாழ்நாட்களின் வீணாக அழிவதில் அக்கறை இல்லாதவர்கள் போல் இவர்கள் நடந்து கொள்கிறார்கள். இளைஞர்கள் விடயத்தில் கரிசனை கொண்டிருக்கிறோம் என்பதற்கு இவர்களால் பத்திரிகை அறிக்கைகள், பொது மேடைப் பேச்சு போன்ற கடதாசி ஆவணங்களைத் தான் காட்ட முடியுமே தவிர உருப்படியான எந்தச் செயற்பாடுகளையும் காட்டுவது இயலாத ஒன்று.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பலராலும் இளைஞர்களை மட்டும் வதைக்கும் இந்தச் சட்டங்களுக்கு எதிராகக் கை உயர்த்த முடியாத நிலையே காணப்படுகிறது. வடக்கு கிழக்கில் டக்ளஸ் கோஷ்டியினரும், மலையகத்தில் ஆறுமுகம் தொண்டமான் குழுவினரும் இளைஞர்களை வதைக்கும் அதிகாரத்தைப் படைத்தரப்புக்கு வழங்கும் சட்டத்துக்கு மாதாமாதம் ஆவலுடன் கையுயர்த்திப் புத்துயிர் கொடுக்கிறார்கள். இவர்களுடன் மட்டக்கப்பு மக்களின் வாக்குகளின் மூலம் பாராளுமன்றம் சென்ற கணேசமூர்த்தியும் இணைந்து கொள்கிறார். மலையக மக்கள் முன்னணியும் யாழ்ப்பாண வாக்குகளினால் காலந் தள்ளும் மகேஸ்வரனும் எதிர்த்துக் கை தூக்க முடியாத நிலையில் அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைத் தவிர அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகக் கை தூக்கும் வடக்குக் கிழக்குக் கட்சிகள் கூட பாராளுமன்ற உரையிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் காட்டும் கனல் தெறிக்கும் கோபத்தை இளைஞர்கள் விடுவிக்க அல்லது அவர்கள் விடுதலையைத் துரிதப்படுத்தவோ காட்டுவதில்லை என்பது கசப்பான உண்மை. அவசரகால விதிகளின் கீழ் கைதாகும் இளைஞர்கள் இலங்கையின் 346 இடங்களில் தடுத்து வைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விடயம் கூடப் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவதில்லை.

இவ்வாறு ஏராளமான தடுப்பு நிலையங்கள் இயங்குவதென்றால் தங்கள் பிள்ளைகள் எங்கே தடுத்து வைக்கப் பட்டிருக்கிறார்கள். என்ற விபரத்தைப் பெற்றுக் கொள்வது கூட உறவினர்களுக்குச் சிரமமான காரியமாகவே இருக்கிறது. கைதாகும் போது பற்றுச்சீட்டைக் கண்ணால் பார்த்தவர்கள் எத்தனை பேர் என்பது கவலைக்குரிய தொன்று.

திருகோணமலையைச் சேர்ந்த தமிழரான சட்டமா அதிபர் பதவியேற்ற பின்னர் சிறைகளில் விசாரணையின்றி வாழும் தமிழ் இளைஞர்கள் விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவேன் என்றார், நடந்தது எதுவும் இல்லை. அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைதானவர்கள் விடயத்தில் கரிசனை கொள்ளப் போவதாகக் கூறினார், மறந்தே விட்டார். பிரதியமைச்சர் பெற்றிவீரக்கோன் தமிழ் இளைஞர்களை விசாரிக்க தனியானதொரு நீதிமன்றம் அமைப்பதன் மூலம் அவர்களுக்கான நீதியைத் துரிதப்படுத்துவேன் என்று கூறினார். எல்லோருடைய செயற்பாடுகளும் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் மட்டும் தான் இடம்பெற்றன. இளைஞர்கள் வாழ்வு கண்ணீரிற் தான் போய்க் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தமிழ் இளைஞர்களுக்குத் தற்போது புதிய நெருக்கடி ஒன்று தோன்றியிருக்கின்றது. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் விடயங்களில் குறிப்பாக வழக்குத் தொடர்தல், பிணை வழங்கல், விடுதலைக்கான உடன்படுதல், போன்ற விடயங்களில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பங்குபாரியது. இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்புதலின்றி எந்தக் காரியமும் நடைபெறாது. எந்தக் கோப்பும் நகராது.

ஆனால், காரியத்தை நடத்த வேண்டி கோப்பை நகர்த்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டிய அதிகாரி சுமார் நான்கு மாதங்களாக இலங்கையில் இல்லை. இதற்கெனப் பொறுப்பாக இருந்த மல்லகொ நான்கு மாதங்களுக்கு வெளிநாடு சென்று விட்டார். அவர் தனது பொறுப்புகளை லிவேரா என்பவரிடம் ஒப்படைத்துச் சென்றார். தற்காலிகமாக பொறுப்பேற்ற லிவேராவும், வெளிநாடு செல்ல வேண்டிய ஏற்பட்டதால் தனது பணியை பிரதிசொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்ணான்டோவிடம் விட்டுச் சென்றார். கடந்த வாரம் பாலித பெர்ணான்டோவும் வெளிநாடு சென்றிருக்கிறார்.

இந்த நிலைமையில் நீதிமன்றங்களுக்கு ஏற்கெனவே வந்த வழக்குகள் தீர்வு பெற முடியாத நிலையில் இழுபட்டுச் செல்கின்றன. புதிய வழக்குகள் தொடுப்பதற்கு இயலாத வகையில் கோப்புகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

பல மாதங்களாக நீதித்துறை சார்ந்தோரது கவனம் தங்கள் பக்கம் இல்லையென்று உணராத நிலையில் இளைஞர்கள் தடுப்பு நிலையங்களில் நீதிக்காகத் தவமிருக்கிறார்கள். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நீதியில் இந்தத் தூக்க நிலையைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. தமிழ் இளைஞர்கள் மட்டுமே பாதிக்கப்படும் சம்பவங்களில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தூங்கி வழிந்து கொண்டிருக்கலாமா?

*விவேகி*


## * மாதிரிப் பாராளுமன்றம்

### தொடரும் விவாதம்

பெப். மாதம் 06 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.